

# தமிழர் வாழ்வு

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# தமிழர் வாழ்வு

[கட்டுரைத் தொகுப்பு]

(கல்லூரிப் பதிப்பு)

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை

முதற் பதிப்பு: மே 1967
இரண்டாம் பதிப்பு: ஏப்ரல் 1969
மூன்றாம் பதிப்பு: ஆகஸ்ட்டு 1969.
உரிமை பெற்றது.

விலை ரூ. 2

# TAMIZHAR VAZHVU

*Published by:*

MADURAI TAMIL SANGAM
MADURAI-1.

Printed at The Vivekananda Press, Madurai.

# முன்னுரை

'தமிழர் வாழ்வு' என்னும் இந்நூலில் பதினொரு கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவை மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலரிலிருந்து தொகுக்கப்பெற்றவை. இக்கட்டுரைத் தொகுப்பு நூல், தமிழர் வாழ்வியலின் பல்வேறு துறைகளையும் பற்றி ஓரளவு அறிந்துகொள்வதற்குத் துணை புரியவல்லது. இக்காலத் தமிழ் மாணவர் அனைவரும் பண்டைத் தமிழர்தம் வாழ்வை அறிந்து, பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தால் இதனை வெளியிட்டுள்ளோம். எனவே, பல்கலைக் கழகத்தினரும், கல்வித் துறையினரும், நூலகத்தினரும், பொதுமக்களும் இந்நன் முயற்சிக்கு ஆதரவு தந்து உதவுமாறு வேண்டுகின்றோம்.

தமிழ்ச் சங்கம்,
மதுரை.

**கி. பழநியப்பன்,**
செயலர்.

# பொருளடக்கம்


க. புறநானூறும் பண்டைத் தமிழர் வரலாறும் 1

கே. கே. பிள்ளை, M. A., L. T., D. Litt., D. Phil (Oxon)

உ. பண்டை விளையாட்டுக்கள் 13

பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L.

ங. தமிழர் பண்பாடு—ஆடையும் அணியும் 31

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

ச. பிறநாட்டார் தமிழ்த் தொண்டு 41

யோகி சுத்தானந்த பாரதியார்

ரு. தமிழர் வீரம் 53

பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவண முதலியார்

சா. தமிழ் இலக்கண வளர்ச்சி 69

ரா. அப்பனையங்கார்

எ. பழந்தமிழர் சமயம் 81

பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

அ. மறுமலர்ச்சி—உரைநடை 99

பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M. A.

கூ. தமிழ் இசைப் புலவர்கள் வரலாறு 115

அ. கி. பரந்தாமனார், M. A.

கய. தமிழர் மருத்துவக் கலை 143

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்

கக. கல்வெட்டுக்கள் 161

டி. வி. சதாசிவப் பண்டாரத்தார்

# புறநானூறும் பண்டைத் தமிழர் வரலாறும்

**திரு. கே. கே. பிள்ளை**, M. A., L. T., D. Litt., D. Phil.(Oxon),
**சென்னை.**

பண்டைத் தமிழர் பற்பல துறைகளில் முன்னேற்றமடைந்திருந்த போதிலும், அவர்களிடத்தில் வரலாற்றுணர்ச்சி வேரூன்றவில்லையென்றே கூறவேண்டும். இது தமிழர்களுக்கு மட்டுமன்று, இந்தியர்களுக்கே ஏற்பட்ட ஒரு குறை என்பது மிகையாகாது. ஹெரிடோட்டஸ், தியூசிடைடிஸ், லிவி, பாலிபியஸ் போன்ற வரலாற்று வல்லுநர்கள் பண்டைய இந்தியர்களிடம் தோன்றவில்லை. தம் முன்னோர்களின் வரலாற்றை ஆராய்ந்து உருவாக்குவதில் அவர்கள் மனத்தைச் செலுத்தவில்லை.

ஆனால் பண்டைத் தமிழரைப் பொறுத்த வரையில் இந்தக் குறையைச் சங்க நூல்கள் ஒருவாறு அகற்றுவனவாகக் கருதலாம். சங்க இலக்கியங்கள், வரலாற்று முறையில் இயற்றப்பட்டவையல்ல. ஆயினும் அவற்றுள் தென்படும் கருத்துக்கள் பல. தமிழரின் அரசியல், சமூக நிலை முதலியவை பற்றிய வரலாற்றிற்குப் பயன்படுகின்றன. சிறப்பாகப், புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு இவை மூன்றும் தமிழர் வரலாற்றிற்கு இன்றியமையாதவையெனக் கூறலாம்.

ஆயினும், இடைக்கால உரையாசிரியர்களும், தற்காலப் புலவர்கள் பலரும், உள்ளனவற்றையும்

இல்லனவற்றையும் ஒன்றாய்த் திரட்டி வரலாற்றை அமைக்கத் துணிந்திருப்பது போற்றத் தக்கதன்று. இல்லாததை உண்மையுடன் கலப்பதால், உண்மைகூடக் குன்றிவிடும். இந்தக் கருத்தை உணராததால் வந்த தீமை சிறிதன்று. மேல்நாட்டு அறிஞர்களும் மற்றும் பலரும் பண்டைத் தமிழரின் மாண்பை நன்கு மதியாததற்கு இது ஒரு காரணமென்பது மிகையாகாது.

புறநானூற்றை எடுத்துக்கொண்டால் அரசியல் பற்றிய பல கருத்துக்கள் இந்நூலில் உள என்பது உண்மைதான். ஆனால், பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றை அவற்றின் மூலம் உருவாக்க முடியுமா? சங்க காலச் சேர, சோழ, பாண்டிய குலத்தாரின் வரலாற்றை யாவது தொடர்பாகக் காலவரையறுத்துக் கூறமுடியுமா? முடியாதெனவே ஒப்புக்கொள்ள வேண்டும். பதிற்றுப் பத்துப் பாடல்கள் வழியாகச் சேரர்கள் வரலாற்றை ஒருவாறு தோற்றுவிக்கலாம். ஆனால் அதற்கும் எண்ணிறந்த இடையூறுகளும் ஐயப்பாடுகளும் தென்படு கின்றன. மற்றைய பேரரசுக் குலத்தினரைப் பற்றித் தொடர்பான வரலாற்றை உருவாக்குவது இன்னும் இடர்ப்பாடானதே.

வரலாற்றுக்குக் காலவரையறுப்பு, கண்ணெனத் தரும் சங்க இலக்கியங்கள் தோன்றியன ஏறத்தாழக் கிறுத்துவுக்குப் பின் மூன்று நூற்றாண்டுகளடங்கிய கால மெனக் கருதினால். அதில் புறநானூற்றின் காலம் யாது? மூன்று சங்கப் புலவர்களும் பாடின செய்யுட்கள் தொகுக் கப்பட்டனவாகக் கூறப்படும் புறநானூற்றுப் பாக்கள் எந்த எந்தக் காலத்தில் தோன்றினவையெனத் திட்டப்படுத்து வது எளிதன்று. முதல் இருநூறு பாடல்கள் மன்னர்

களின் போர் வெற்றிகளை அவர்கள் காலத்திலிருந்த புலவர்கள் பாடினவை என்றும், அடுத்த நூறு பாடல்கள் முன்னுலிருந்து மாண்டுபோன மன்னர்களையும் வீரர்களையும் பற்றியவை என்றும், இறுதி நூறு இருதரத்தையும் சார்ந்தவை என்றும் திரு. பி. டி. எஸ். அய்யங்கார் அவர்கள் கருதினுர்கள். ஆனுல், அவ்வரையறுப்பை ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. முதலிற் காணப்படும் சில செய்யுட்கள், பாடின புலவர்களது காலத்து வாழ்ந்த மன்னர்களைக் குறிப்பதெனக் கருத முடியாது. எடுத்துக்காட்டாகப் புறம் இரண்டாம பாட்டில் முரஞ்சியூர் முடிநாகராயர், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன், பாரதப் போரில் இரு படைக்கும் உணவளித்ததாகக் கூறுவது நம்புதற்குரியதா? அப்புலவரும், மன்னரும் பாரதப் போர்க் காலத்தைச் சார்ந்தவர்களா? முன்னுல் ஆண்டிருந்த கொடைவள்ளலாகிய மன்னனைப் பாடியதாகக் கருதுவதன்றோ இயல்பு? அன்றியும் ஒரே மன்னனைப் பற்றி ஒரு புலவன் பாடியுள்ள பாடல்கள் புறநானூற்றில் வெவ்வேறு பகுதிகளில் காணப்படுவது இவரது கூற்றுக்கு முற்றிலும் முரணுகப்படுகிறது. [1]

நிற்க, பாடல்களின் அடிக் குறிப்புகள் பாட்டுக்களுடன் தோன்றினவையா? திரு. கே. ஏ. என். சாஸ்திரி அவர்கள் அவ்விதம் கருதுகிருர்கள். ஆனுல் திரு. வெங்கய்யா, திரு. பி.டி.எஸ். ஐயங்கார் ஆகிய இருவரும் அவை பிற்காலத்தவையென வற்புறுத்துகின்றனர். பல்லவ மன்னன் நந்திவர்மனது காலத்தைச் சார்ந்த பாரதம் பாடிய பெருந்தேவனுர் புறநானூற்றைத்

---

[1] சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனைப் பற்றிக் குமாத்தலையார் பாடியுள்ளவை புறநானூற்றுப் பாடல்கள் 62-ம் 368-ம் ஆவன.

தொகுத்தவரென்றும் இவ்விரு அறிஞர்களும் முதலில் கருதினார்கள். ஆனால் இது தவறான கொள்கையென்று திரு. வெங்கையா அவர்கள், சின்னமனூர்ப் பட்டயம் பிரசுரம் செய்யப்பட்ட பின் ஒப்புக்கொண்டார்கள். உண்மையில், தொகை நூல்களில் பலவற்றிற்கும் பாயிரம் பாடினவர் சங்க காலத்தைச் சார்ந்த ஒரு பெருந்தேவனாரென்பது சின்னமனூர்ப் பட்டயத்திலிருந்து வெளியாயிற்று.

அன்றியும், திரு. ஐயங்கார் அவர்கள் புறநானூற்றில் வரும் அடிக் குறிப்புகள் நூல் தொகுக்கப்பட்டதற்குப் பின் எவரோ இயற்றியிருக்கக் கூடுமெனக் கருதினார்கள். செய்யுட்களில் காணப்பட்ட துணுக்குக்களைக்கொண்டோ அல்லது அக்காலத்தில் கர்ண பரம்பரையாக வந்தசெய்தியைக் கொண்டோதான் இக்குறிப்புகள் வகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது அவர் துணிபு. இதைத் தீவிரமாகக் கண்டிக்க முன்வந்த திரு.கே ஏ என்.சாஸ்திரி அவர்கள் திரு. ஐயங்கார் அவர்களின் கோட்பாட்டின் குற்றங் குறைகளை நன்கு விளக்கினபோதிலும், இவ்வடிக் குறிப்புகள் யாவும் பாக்கள் பாடினவர்கள் காலத்திலே அமைந்தவை என்று தெளிவித்து விட்டதாகக் கூற முடியாது.[2] உண்மையில் இது பற்றி இப்பொழுது ஒரு முடிவுக்கு வர இயலாது. சில பாக்கள் பாடினோர் காலத்தில் தோன்றியிருக்கலாம்; மற்றும் சில பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவையா யிருக்கலாம் புறநானூற்றிலும் மற்ற இலக்கியங்களிலும் காணப்படும் செய்யுட்களைப் பாடிய அதே புலவர்களைப் பற்றிய அடிக்குறிப்புகள் சங்க

---

[2] P. T. Srinivasa Iyengar: History of the Tamils p. 158 & K. A. Nilakanda Sastri: Studies in Chola History and Administration pp 7—18.

காலத்திலே இயற்றப்பெற்றனவாகக் கருதலாம். இவை மேலும் ஆராயத் தக்கன.

ஆகவே, காலவரையறைசெய்வதற்கு இடைஞ்சல்கள் பல; தொடர்பான வரலாற்றைத் தொகுக்க இன்னல்கள் எண்ணற்றவை. ஆயினும் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் சில கருத்துக்கள் பயன்படுகின்றன. ஒவ்வொரு குலத்தையும் சார்ந்த சில அரசர்களைக் குறிக்கும் பாடல்கள், அந்த மன்னர்களைப் பற்றியும் அவர்களுடைய செயல்கள். மாண்பு முதலியவைபற்றியும் விளக்குகின்றன. இவைகள் பெரும்பாலும் நம்புதற்குரியவை. பிற்கால நூல்களில் தென்படும் இலக்கிய மரபைப்போல அமைக்கப்பட்டவையல்ல. புலவர்கள், கண்டோ கேட்டோ அறிந்தபடி,பாடினதாகத் தோன்றுகிறது. பெரும்பாலும் தாம் நேரில் தெரிந்துகொண்ட கருத்துக்களைத்தான் புலவர்கள் சித்திரிக்கின்றனர். ஆகையால் இவை நம்பிக்கைக்குரியவை. மேலும், அக்காலப் புலவர்கள், குற்றம் குறைகள் மன்னர்களிடத்துக் கண்டால் அவற்றைக் கண்டித்தனர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் பண்பாடு சங்கப் புலவர்களிடம் தென்படவில்லை. ஆகையால் பாடப்பெற்ற அரசர்களையும், சிற்றரசர்களையும் பற்றிக் கிடைக்கும் விவரங்கள் நம்புதற்குரியவையெனப்படுகிறது.

இத்துடன், அரசியல் நெறி, அரசர்களது பண்பாடு முதலியவை பற்றிப் புறநானூற்றிலிருந்து சில கருத்துக்கள் உணரலாம். மக்களுக்கு நேரிடும் இன்னல்களை அகற்றி அவர்களைப் பேணும் கடமை மன்னர்களைச் சார்ந்தது.[3] மக்களுடைய செழிப்புக்காக அரும்பாடுபட வேண்டியது அரசர்களின் பொறுப்பு.[4] பகைவர்கள்கூட விளை

[3] புறம். 42; 75. [4] புறம். 8; 68.

வித்த தீங்குகளையும் பொறுத்தாள வேண்டியது மன்னன் கடமை.[5] குற்றத்திற்கேற்பத் தண்டித்து நீதி நிலவச் செய்வதும் அவர் பொறுப்பு. படையின் வலிமையைவிட அறத்தின் மாண்புதான் சிறந்ததெனவும் புலவர் வற்புறுத்தினர். 'அறநெறி முதற்றே யரசின் கொற்றம்'.[6]

மன்னனின் அமைச்சர்களும், மன்னனைச் சூழ்ந்திருக்கும் புலவர்களும் அறிஞர்களும் அலுவலாளர்களும் அறம் பிறழாத செங்கோலோச்சும் பொருட்டு வழிகாட்டினர். அத்துடன். 'அறவோர் அவை' ஒன்றும் நிலவியதாகத் தெரிகிறது. இவ்வறவோர் அவையிலிருந்து அரசனால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர், மக்களிடையே அவ்வப்போது தோன்றிய சச்சரவுகளை ஒழித்து நல்லறிவு புகட்டினார் போலும்.

கொடை, மன்னன் மரபிற்கு இயற்கைக் குணமாகக் கருதப்பட்டது. புலவர்களுக்கும் பாணர்களுக்கும் கைம்மாறு கருதாது அரசர் நன்கொடை அளித்தனர்.

> ''தன்பெருமையின் தகவுநோக்கிக்
> குன்றுறழ்ந்த களிறென்கோ
> கொய்யுளைய மாவென்கோ
> மன்றுநிறையும் நிறையென்கோ
> மனைக்களமரொடு களமென்கோ
> ஆங்கவை, கனவென மருள வல்லே நனவின்
> நல்கி யோனே நகைசால் தோன்றல்'' — புறம். 387

எனும் குண்டுகட் பாலியாதனாரின் பாட்டிலிருந்துமன்னர் எவ்விதம் தகுதி நோக்கி ஈந்தனரென உணரலாம். போர்க்களத்தில் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்

[5] புறம், 43. [6] புறம். 55.

புண்பட்டு வீழ்ந்து கிடந்தபோது அவன் உடல் நிலையை அறியச் சென்ற கழாத்தலையார் எனும் புலவரைக் கண்டவுடன், மன்னன் தன் கழுத்திலணிந்திருந்த முத்தாரத்தைக் கொடுத்தானென்பது, கொடை நெறி அவன் மனத்தில் எவ்விதம் வேரூன்றி இருந்ததென்பதனைப் புலப்படுத்துகின்றது.

மன்னர்கள் புலவர்களைப் பெரிதும் போற்றினதோடு, அவர்களது நட்புப் பூண்டு அவர்களைத் தூதர்களாகவும் அமைச்சர்களாகவும் அமைத்தனர். சங்க காலத்தில் பல மன்னர்களும் புலவர்களாய் விளங்கியமை அவர்களது மாண்பைக் காண்பிக்கின்றது. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நல்லுருத்திரன், சோழன் நலங்கிள்ளி, சேரமான் கணைக்காலிரும்பொறை, சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை முதலியோர் கவித்திறன் பெற்ற மன்னர்களுள் சிலர்.

கல்வியறிவில் அழுந்தி வாழ்ந்திருந்தபோதிலும் சங்க கால மன்னர்கள் போரில் ஈடுபடுவதும் வெற்றி பெறுவதும் மன்னனின் இன்றியமையாத கடமையெனக் கருதினார்கள். போரில் இறுதிவரை பொருது இறப்பதே மன்னனுக்குச் சிறந்த சாவுஎன எண்ணப்பட்டது. அரசர் குடியில் பிறக்கும் குழந்தை, தாய் வயிற்றிலே இறந்து பிறப்பினும் அதைத் தருப்பையில் கிடத்தி வாளால் துண்டித்தபின் அடக்கம் செய்தனராம்.[7] போரில் புறம் காட்டுவது மன்னனுக்கு அழகன்று. முதுகில் புண்

---

7 புறம். 74.

பட்டால் தீரா இழிவு ஏற்பட்டதாகக்கருதுவர். அவ்விதம் புண்பட்டவர் வடக்கிருந்து உயிர்துறந்தனரென்பதற்குச் சான்றுளது.[8]

மன்னரது வீரம் மக்களிடையில் பரவியது. தாய்மார் தம் அருமைப் புதல்வர்கள் போரில் வெற்றிபெற்றுப் புகழடைய விரும்பினர். பொன்முடியார் தம் அருமை மைந்தனைப் போருக்கு அனுப்பிய பின்னரே அவருக்கு மனக்களிப்பு வந்ததெனக் கூறப்படுகிறது. தாயின் உண்மைக் கடமை அவரது பாட்டிலிருந்து நன்கு துலங்குகின்றது.

'ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித் துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.,'[9]

இன்னும் பல பாடல்கள் தாய்மார்கள் வீர உணர்ச்சியையும் நாட்டுப் பற்றையும் காண்பிக்கின்றன.[10].

அரசியல் நெறி, மன்னனின் பண்பு முதலியவற்றைப் புறநானூற்றுச் செய்யுட்கள் பல எடுத்து விளக்குகின்றன. இது வரலாற்றின் ஒரு பகுதி. ஆனால் பொது மக்களின் வாழ்க்கையை இந்நூல் ஒரு திரைப்படத்தைப் போலத் துலக்கிக் காட்டுவதுதான் வரலாற்றிற்கு மிகப் பயனளிப்பது. ஒரு நாட்டின் வரலாறு சிறப்பாகப் பொதுமக்களின் வரலாறென்பது இப்பொழுது ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. சங்க இலக்கியங்களில்

[8] புறம். 66. [9] புறம். 312. [10] புறம். 277—79.

அதிலும் சிறப்பாகப் புறநானூற்றில் மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கிட்டும் அறிவு மிகுதியானது. ஈண்டு ஒருசிலவற்றை மட்டிலும் எடுத்துக் காட்டாகக் கூறுவோம்:

குடியிருந்த வீடுகள் ஒவ்வொரு வகுப்பினருக்கும் எவ்விதம் அமைந்திருந்தனெனத் தெரிகிறது. அரசர் வாழ்ந்த அரண்மனைகள் நெடுமாடங்கள்[11] முதல், குறவர் வாழ்ந்த புல்வேய் குரம்பைகள்[12] வரையில் எல்லா வகுப்பினர்களுடைய மனைகளின் விவரங்களும் காணப் படுகின்றன

உண்டி பற்றிய பல குறிப்புகள் உள நெல் அரிசி இப்பொழுதுபோல் அப்பொழுதும் முக்கிய உணவா யிருந்தபோதிலும், நெல் விளையாதபோது வரகும், தினையும் பயன்படுத்தப்பட்டன வரகு அரிசியால் புளிச் சோறு சமைத்து ஆயர் உண்டனர். ஏழை மக்கள், கூழையும் கீரையையும் உண்டு வாழ்ந்தனர்[13]. குறிஞ்சி நிலத்திலும் மருத நிலத்திலும் உழவர், சோறு, பலாப் பழம், வள்ளிக்கிழங்கு, தேன் முதலியவற்றைப் பயன் படுத்தினர் புலால் உண்ணலும் மது அருந்தலும் பெரு வழக்கம்[14]. பரதவரன்றி மற்றோரும் மீன் உண்டதும் கூறப்பட்டுள்ளது.[15]

விருந்தோம்பல் தமிழரின் தனிப்பண்பு. செல்வந்தர்கள் மட்டுமல்ல, எளிய மக்கள் கூட அவரை நாடி வருவோருக்கு இயன்றவாறு, உண்டி, உடை முதலியவை அளித்து மகிழ்வித்தனர்[16]

---

[11] புறம். 177, 198. [12] புறம். 120. [13] புறம். 40, 318
[14] புறம். 14, 34, 168. [15] புறம். 13, 42. [16] புறம். 317.

உடையைப் பற்றிய குறிப்புகள் பல. ஒரு சிலர் மரவுரி உடுத்தியபோதும், பெரும்பாலும் மக்கள் பருத்தி நூலால் இழைக்கப்பட்ட ஆடைகளை அணிந்தனர். பருத்தி ஆடைகள் மிக நேர்மையாக இழைக்கப்பட்டிருந்தன.[17] ஆனால் இதுபற்றிச் சங்க நூல்களில் காணப்படும் குறிப்புகள் சில, மிகைபடக் கூறப்பட்டிருப்பனவாகவே தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாகப், 'புகைவிரிந்தன்ன பொங்குதுகில்'[18], 'திருமலரன்ன புது மடி'[19]—இவைகளில், பாடிஞேரின் கற்பனையும் கலந்திருப்பது காணலாம். ஆயினும் பெருமைக்குரியதாயில்லாவிடில் பலர் அதைக் குறித்துப் பாடியிருக்கமாட்டார்கள்.

இனிச் சங்ககாலத் தமிழரிடம் இன வேற்றுமை எவ்வாறு அமைந்திருந்தது என்பதற்குக் குறிப்புகள் பல செய்யுட்களில் காணப்படுகின்றன. முதலில் தொழிலைப் பின்பற்றிய இன வேற்றுமைதான் தோன்றியிருக்க வேண்டும். வேட்டுவர், ஆயர், உழவர், வணிகர், தச்சர் முதலிய இனப்பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் சில செய்யுட்களில், வடநாட்டில் பரவியிருந்த நால்வகை இனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்[20] எனும் அடி அதை நன்கு புலப்படுத்துகின்றது. அன்றியும் பார்ப்பனர்களைப் பற்றிய குறிப்புகள் பல. சமூக அமைப்பில் அவர்களுக்கு மேம்பட்ட நிலை அளித்திருந்ததாகக் காணப்படுகிறது. வேதவேள்விகளைச் செய்வது பார்ப்பனரின் உரிமையென விளக்கப்பட்டிருக்கின்றது.[21] அவர்கள் கல்வி கற்பதிலும் வேத முறைகளைப் போற்றுவதிலும் ஈடுபட்டிருந்தனர்.[22] மன்னர்கள் அவர்களுக்கு நன்கொடையாக நிலம் அளித்துப் போற்றினர்.[23] நான்மறையோரை அரசர்கள் தூதர்களாக

---

[17] புறம். 383, 382. [18] புறம். 398. [19] புறம். 390.
[20] புறம். 183. [21] புறம். 224. [22] புறம். 166. [23] புறம் 122.

அனுப்பினர்.[24] இவ்வழக்கத்தைப் பற்றித் தொல்காப்பியம், அகநானூறு, பின்தோன்றிய திருமுருகாற்றுப்படை முதலியவற்றினால் பல சான்றுகள் உள.

எப்பொழுது எவ்விதம் வடநாட்டு வழக்கம் இங்குப் புகுந்தது என்று புறநானூற்றிலிருந்து கூறமுடியாது. புறநானூற்றுக் காலத்தில் இரு முறைகளும் ஒருங்கே நிலவியனவாகத் தெரிகிறது. நாளடைவில் இரண்டு முறையான இன வேற்றுமைகளும் ஒன்று சேர்ந்து வளர்ந்து வந்திருக்க வேண்டும்.

ஆனால், ஆரியர்கள் கூட்டங் கூட்டமாகத் தமிழகத்திற்கு வந்து குடியேறினரென்று எண்ண இடமில்லை. ஒரு சிலர் வந்து அவர் கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் பரவச் செய்வதில் ஈடுபட்டிருக்கலாம். இதற்கு வசதி தென்னாட்டு மன்னர்களின் ஆதரவுதான். அரசர்களுக்குப் புதிய சமூக அமைப்பில் சத்திரியரென்ற நிலை கிடைத்தது பற்றி, வந்தவர்களுக்கு அன்பும் ஆதரவும் அளிக்கப் பட்டனபோலும்.

இதனுடன் தமிழ்நாட்டிலிருந்த அறவோர் பலரும் புது சமூக அமைப்பில் பார்ப்பனராகச் சமைந்திருக்க இயல்புண்டு. இதற்கிடையே பல பௌத்தர்களும் சமணர்களும் தென்னாட்டிற்கு வந்ததாகத் தெரிகிறது. அவர்களோடு நிகழ்ந்த போட்டியின் விளைவாகப் பார்ப்பனர் தமது எண்ணிக்கையையும் ஊக்கத்தையும் வலுப்படுத்த முயற்சி செய்திருக்கலாம்.

எவ்விதமாயினும் புறநானூற்றுக் காலத்திலேயே ஆரிய சமயக் கருத்துக்கள் தமிழரிடையே காணப்படு

---

[24] புறம். 305,

கின்றன. பண்டைய தமிழர் வழிபட்ட தெய்வங்களும், அன்றியும் புதிய தெய்வங்கள், சமயக்கோட்பாடுகள், வழக்கங்கள் இவை யாவும் தென்படுகின்றன. முக்கட் செல்வனை சிவபெருமானுக்கு முதன்மையான இடம்கொடுத்து வந்தது, காரிகிழார் பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிப் பாடியுள்ள செய்யுளில் காணப்படுகின்றது.[25] அதுபோலவே தமிழர் முருகனைத் தொன்று தொட்டே வழிபட்டு வந்ததாக அறிகிறோம்.[26] செந்தில் (திருச்செந்தூர்) மலையில் முருகன் கோட்டம் தழைத்து வளர்ந்தது.[27] அன்றியும், திருமால், பலராமன் இருவரையும் வணங்கினர். இவரை வணங்குவது வட நாட்டு வழக்கத்திலிருந்து வந்ததென்பதற்கு ஐயமில்லை. ஆங்காங்குப் பழைய பெயர்கள் மாறுதலடைந்துவந்தன. கொற்றவை, துர்க்கையாக மாறினதும் இலட்சுமி, சரசுவதி, பார்வதி என்ற தெய்வங்கள் அமைந்ததும் சிலப்பதிகாரத்தில் நன்கு தெரிகின்றது.

ஆகவே. இதுகாறும் எடுத்துக்காட்டாகக்கூறியவற்றிலிருந்து பண்டைய தமிழரின் சமூகநிலை பற்றிப் புறநானூற்றில் பல கருத்துக்கள் திகழ்கின்றனவென்று தெரிகிறது. அவைகளை ஆராய்ந்து, நாளடைவில் எவ்விதம் மாறுதலடைந்தன என்று அறிவது மிகத் தேவை. அரசியலைப் பற்றியும் தொடர்பான வரலாற்றிற்குப் போதிய ஆதாரங்களில்லை. ஆயினும் அரசியல் முறை, அரசர்களது பண்பு, நெறி, நாட்டின் நிலை இவை பற்றிக் காணப்படும் கருத்துக்கள் மிகப் பயனுள்ளவை.

---

[25] புறம். 6. [26] புறம். [27] புறம்- 55

# பண்டை விளையாட்டுக்கள்

**பேராசிரியர் வித்துவான் கோ. சுப்பிரமணிய பிள்ளை,**
எம். ஏ., பி. எல்.,

உலகக் கவலை, கையாறு, அழுங்கல்களிற் சிக்குண்டு நாளும் ஓடியோடி உழைத்து இளைத்துச் சலிக்கின்ற மக்களுக்கு, அவற்றினின்றும் விடுதலை பெறுவதற்கு விளையாட்டுகள் இன்றியமையாதனவாகும். உடலைக் கட்டுடன் காப்பதற்கும், அறிவைத் தெளிவுபெறச் செம்மை செய்வதற்கும், மனவமைதி பெறுவதற்கும், மகிழ்ச்சியடைவதற்கும் விளையாட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. விளையாட்டுகளைப் பச்சிளங் குழந்தைகள் முதல் பழுத்துப் பல் விழுந்த கிழவர்கள் வரை விரும்புகின்றனர். உலக மக்கள் அனைவரும் அவாவி நிற்கும் விளையாட்டுகள் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு முறையில் அமைந்திருக்கும். ஒரு நாட்டின் இயற்கைச் சூழல்களுக்கும் வெப்ப தட்பங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தக்கவாறு விளையாட்டுகளும் அமையும். நாட்டு மக்களின் நாகரிகத்தையும் சீரிய பண்பாடுகளையும் அறிவதற்கு அவர்கள் பழக்கத்திற் கொண்டுள்ள விளையாட்டுகள் பெருஞ்சான்று பகர்வனவாகும்.

தமிழ் மக்களின் பண்டைய விளையாட்டுகள் பல இன்னும் வழக்கத்திலிருந்து வருகின்றன. ஒரு சில வழக்கொழிந்தும் போயின. சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றில் பலவிளையாடல்களைப் பற்றிய குறிப்புகள் நமக்குக்

கிடைக்கின்றன. ஆனால், அந்த விளையாட்டு முறைகளிற் சில நம்மால் உணர்ந்துகொள்ள முடியாதிருப்பது வருந்தத் தக்கதாகும்.

இக்காலத்தில் நாம் அழும் குழந்தைகளுக்குக் கிலுக்குக்களைக் கிலுக்கி ஒலியெழச் செய்து விளையாட்டுக்காட்டி அவர்களைச் சிரிக்கச் செய்கிறோம். கிலுக்கின் ஒலியிலே குழந்தையின் கருத்துக்கவரப்பட்டு, அது தன் நோயையும் கவலையையும் மறந்துவிடுகிறது. கிலுக்கின் காட்சியிலும் ஒலியிலும் அதன் எண்ணம் செல்லத் தொடங்குகிறது. அதனால் குழந்தை பெரிதும் ஆறுதல் அடைகின்றது. சிறுபாணாற்றுப்படையிலே ஒரு சிறு காட்சியைப் புலவர் நமக்குக் காட்டுகிறார். தென்பாண்டி வளநாட்டின் கொற்கை மாநகரிலே உப்பு வாணிகர் தங்கள் குழந்தைகளைச் செல்வமாய் வளர்த்ததுபோல் குரங்குகளையும் வளர்ந்துவந்தனர். குரங்குகளும் குழந்தைகளும் கூடிக் கலந்து விளையாடின; கையிலே கிலுகிலுப்பைகளைவைத்து விளையாடின. கொற்கை முத்துக்குப் பேர்பெற்ற கடற்கரைப் பட்டினம் அல்லவா? அதனால், கிளிஞ்சலின் உள்ளே உயர்ந்த முத்துக்களைப் போட்டு அடைத்துச் செய்த கிலுகிலுப்பைகளைக் கையிற்கொண்டு குழந்தைகளும் குரங்குகளும் விளையாடினவாம்.

"நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்"

விலை குறைந்த மலிந்த பண்டமாயுள்ள எளிய உப்பை ஊர்ஊர் தோறும் வண்டியில் ஏற்றிச் சென்று விற்று வயிறு பிழைக்கும் உமணர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுகளை எவ்வாறு அமைத்துக் கொடுத்தனர் என்பதை இவ்வடிகள் நமக்கு நன்கு எடுத்துக் கூறுகின்றன. அவர்களின் குழந்தைகள் ஒளிவிடும் அணிகளைப் பூண்டிருந்தன. அவர்களுக்கு விளையாட்டுக் காட்டுவதற்கு என்று பெண் குரங்குகளையும்கூட வளர்த்தனர்; குரங்குகளையும் குழந்தைகளைப்போல் அன்பாய் வளர்த்தனர்; அவர்கள் விளையாட விலையுயர்ந்த முத்துக்களைச் சிப்பியில் அடைத்து அழகான கிலுக்குகள் செய்துகொடுத்தனர் என்பவற்றையெல்லாம் நாம் படிக்கும்பொழுது அவர்கள் செல்வத்தின் செழிப்பையும், சிறு குழந்தைகளின் விளையாட்டுகளை எவ்வளவு முக்கியமாய் அவர்கள் கருதினர் என்பதையும் நாம் நன்கு தெரிகிறோம்.

இரவில் குழந்தைகள் அழுதால் நாம் இன்றும் அம்புலியை அழைத்து விளையாட்டுக் காட்டுகிறோம். தண்மதியின் நல்லொளியைக் கண்டதும் குழந்தைகள் அழுகையை மறந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றன. குழந்தையை யாட அழைத்துக்கொண்டே பாலுணவை ஊட்டுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதனை அம்புலியாடல் என்பர்.

"புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
வருகுவை யாயின் தருகுவென் பாலென

**விலங்கமர்க் கண்ணன் விரல்விளி பயிற்றித்**
**திதலை யல்குலெங் காதலி**
**புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே''** (அகம் 54)

*தலை நரைத்துத் தோல் திரைத்த தொண்டு கிழவர்கள் ஊர்ப்பொது அம்பலங்களிலே கூடியிருந்து, பொழுது போக்காக நாய்கள் என்னும் வல்லுக் காய்களை வைத்துச் சூதாடிக் கழிப்பார்களாம்:*

''..... ..............................பொதியில்
நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம்... ......'' (புறம். 52)

*அதோ ஒரு காட்சி! அந்த மன்றத்திலே பாருங்கள். நரைத்து ஆடி நடுங்கும் தலையையுடைய கிழவர்கள் மிக்கு ஆழ்ந்த சிந்தனையோடு வல்லுகளை அங்கும் இங்கும் நகட்டி, மனத்திலே சூழ்ந்து விளையாடுகின்றனர்:*

'' ... ... ... ... ...மன்றத்து
நரைமூ தாளர் அதிர்தலை யிறக்கிக்
கவைமனத் திருத்தும் வல்லு''. (அகம். 377)

*இச்சூதாட்டத்தை வட்டுப் பொருவுதல் என்று கூறுவர். சொக்கட்டான், தாயம் என்று இப்பொழுது வழங்குகின்றோம். சூதாடு கருவியைக் கவறு என்றும் வட்டு என்றும் சொல்லுவர்; சூதாடு பலகையை வல்லுப் பலகை என்பர்; சூதாடு களத்தைக் கழகம் என்பர். இவ்விளையாட்டுக்கு வேண்டுங் கைத்தொழில் வெல்லு மாயம் படப்பிடித் தெறிதல். அதிலே ஒவ்வொருவர் கைதேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இதில் கள்ளத்தனமாய்க் கைகரந்து விளையாடுதலும் உண்டு. அதனால் சச்சரவுகளும் ஏற்படும்.*

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தான் தாமப்பல் கண்ணனை வெகுண்டு வட்டுக்கொண்டெறிந்த செய்தி புறம்-43 ஆம் பாடலால் தெரிகிறது. இத்தகைய சூது விளையாட்டுகள் தீங்கு பயக்கும் என்று திருக்குறள் கண்டித்திருப்பதும் இங்கே குறித்தல் தகும்:

''கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
இவறியா ரில்லாகி யார்''

குடுகுடு கிழவராய்த் தள்ளாடிக் கோலூன்றி இருமிக் கொண்டிருக்கும் நிலையிலுங்கூடத் தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் புலவர் தாம் இளமையில் ஆடிய விளையாட்டை இனிக்க இனிக்க நினைத்துத் தவித்துருகுகிறார். இவர் எவ்வாறு விளையாடினாராம் தெரியுமா? ஒளிப்பு மறைப்பு அற்ற வஞ்சனையில்லாத இளம் பிள்ளைகளாகச் சேர்ந்து, நீராடுகின்ற இளமகளிருடனே கூடித் தழுவுவழித் தழுவியும் ஆடியும், கரையிலுள்ளபெரியமருத மரத்தின் கோடுகளில் ஏறி ஆழமான மடுவின்கண் துடுமெனக் குதித்து அடியிலுள்ள மணலை எடுத்து மேலே கிளம்பிவந்து கரையில் நிற்போர்க்குக் காட்டித் தம்முடைய ஆற்றலை வெளிபடுத்தியும், கல்வியில்லாத இளமைக்காலம் இனிது விளையாட்டிலே கழிந்ததாம். இனி அந்தக் காலம் முதுமையை அடைந்த தமக்கு எங்ஙனம் கிட்டப்போகிறது என்று ஏங்கிப் பாடுகிறார்:

'இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையெண லறியா மாயமி லாயமொடு

உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய எமக்கே" (புறம்-243)

சிறு பிள்ளைகள் தரையில் கட்டளையாகக் கோடு கிழித்து அரங்கு இழைத்து, அதில் சிறு ஓட்டுச் சில்லு அல்லது நெல்லிக்காயை வீசியெறிந்தும், உண்டை உருட்டியும் குதித்துத் தாவிக் காலால் செதுக்கித் தள்ளிக் கோட்டில் படாமல் குதித்து விளையாடும் விளையாட்டிற்குப் பாண்டி விளையாட்டு என்பது பெயர். இதோ ஒரு சிற்றூரின் வேப்பமரத்து நிழலில் இன்னும் கல்வி கற்கத் தொடங்காத சிறுவர்கள் நெல்லி வட்டாடுவதைக் காண்மின்!

"ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்" (நற்றிணை-3)

நெல்லிவட்டாடுதல் ஒருவகைக் கோலி விளையாட்டாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. இக்காலத்துக் கோலி விளையாட்டை உண்டை உருட்டுதல் என்று அக்காலத்தில் வழங்கினர் போலும் பரிமேலழகர் வட்டாடலை உண்டை உருட்டல்என்றேவழங்கினர். திருவள்ளுவரும் திருக்குறள்

நூலில் "அரங்கின்றி வட்டாடியற்றே" என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் சில உரைகாரர்கள் வட்டாடலைச் சதுரங்கமாகிய சூதுவிளையாட்டு என்று பொருள்கூறினர். சூதென்னும் முகடி என்று அதனை அறவே வெறுத்தொதுக்கிய திருவள்ளுவர் உவமை வாயிலாக அதனைக் கொண்டுவந்து இங்கே குறிப்பிட்டு வேண்டாவிதமாய் நமக்கு நினைவூட்டமாட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

பழங்காலத்தில் இளைஞர்களுடைய விளையாட்டுகள் எல்லாம் உடல் உறுதி பெறும் வகையிலும், வீரம் உண்டாகும் வகையிலும் உடல்வலி பெற்று அச்சமும் கூச்சமும் அகலும் விதத்திலும் சுறுசுறுப்புடன் எப்பொழுதும் உழைக்கும் விதத்திலும், மன ஊக்கத்தை எழுப்பும் முறையிலும் அமையப்பெற்றிருந்தன. அக்காலத்தில் தமிழர் வீர வாழ்க்கையும் விழுப்புண்ணும்கொண்டு, போரெனிற் புகலும் புனைகழல்மறவர்களாய்த் திகழ்ந்தார்கள்; இளமையிலிருந்தே போருக்கு வேண்டிய பயிற்சிகள் எல்லாம் விளையாட்டாகவே கற்றுக்கொண்டிருந்தார்கள். ஆடவரும், பெண்டிரும் கூடிப் புதுப்புனல் ஆடுதலையும் ஒரு விளையாட்டாகக் கொண்டிருந்தனர். கொல்லேறு தழுவுதல் என்பது உயிருக்கும் உடலுக்கும் கொடிய ஊறுவிளைக்கக்கூடிய ஒருபொல்லாத விளையாட்டு. அதில் மணமாகாத இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் இறங்கி, அடங்காத காளையையும் அடக்கிப் பிடித்துத் தங்கள் உடல்வலியினையும், வனப்பினையும் பிறர்க்கு ஐயந்திரிபற எடுத்து விளக்கி அழகான கன்னியரை மணம் செய்துகொள்வது வழக்கம். இதனை முல்லைக்கலிப் பாடல்களிற் பரக்கக் காணலாம். மற்றும் யானை யேற்றம் (கலித்தொகை-97), குதிரை யேற்றம் (கலித்தொகை-96), தேர் செலுத்துதல் முதலியவற்றையும் விளையாட்டாகவே

பழகி மிக்க தேர்ச்சிபெற்றிருந்தார்கள். 'சிறு குழந்தைகளுக்குக்கூடச் சிறு தேர்களைச் செய்து கொடுத்து இழுத்துவிளையாடச்செய்து, பின்னர் ஊர்ந்து இன்புறற்கு வழிகோலி யமைத்தனர்போல் தோன்றுகிறது.

''தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல''

(குறுந்தொகை-61)

ஆங்கிலத்தில் Boxing அல்லது Wrestling எனப்படும் குத்துச்சண்டை அல்லது மற்போரையும் தமிழர் ஒரு விளையாட்டாகவே பழகிவந்தனர். பெருநற்கிள்ளி என்னும் சோழவரசன் ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்ற செய்தியைப் புறநானூறு 80-ஆம் பாடலிற் காணலாம். இவ்வாறு ஒவ்வொருவருடைய ஆற்றலையும் வலிமையையும் காட்டுவதற்காக நடத்தப்படும் மற்போர்கள் முதலிய விளையாட்டுகள் ஒரு போரவையின் முன்னிலையில் நிகழ்வனவாகும். ஆங்கிலத்தில் Umpires என்று சொல்லப்படும் நடுவர்களே இப்போரவையத்தார் ஆவர். இத்தகைய போரவையின் முன்னர்ப் பொருது வென்றதாலேயே, அச்சோழவரசன் போரவைக்கோ பெருநற்கிள்ளி என்று அழைக்கப்பட்டான்போலும். இவ்வித விளையாட்டுகளை ஆடவரும் பெண்டிருமாய் மக்கள் பெருந்திரளாகக் கூடிவந்து கண்டு களிப்பார்கள். இதைக் குறித்து ஒரு சுவையுள்ள செய்தி அகநானூற்றிற் குறிக்கப்படுகின்றது.

கணையன் என்பவன் வடநாட்டிலிருந்து ஆரியப் பொருநன் என்னும் ஒரு மல்லனை வரவழைத்து, அவன் உடல் வன்மையைக் கண்டு வியந்து கொண்டாடினன்.

பாணன் என்பவன் ஒரு தமிழ்நாட்டு மல்லன். அகன்ற மார்பும், உயர்ந்த தோள்களும் படைத்தவன். பெருமிதங் கொண்டிருந்த ஆரியப்பொருநன் பாணனை மற்போருக்கு அறைகூவி அழைத்தான். பாணன் தன் தோள்களை எவ்வளவு இறுகப் பற்றிப் பிடித்தாலும், தான் திமிறிக் கொண்டு வெளிவந்துவிடுவதாக வீரமொழி புகன்றான் அப்பொருநன். அவ்விதமே, கணையன் முன்னிலையில் இப்போர் நடக்கலுற்றது. பாணன் ஆரியப் பொருநனின் தோள்களைத் தன் இரு கைகளாலும் மார்போடு இறுக்கிப் பிணித்துக் கொண்டான். ஆரியப் பொருநன் தன் முழு வலிமையையும் செலுத்தி முயன்று வெளிவந்தான். எவ்வாறு? பாணன் பிடித்தபிடி நெகிழ்க்கவில்லை. ஆரியப் பொருநன் அவன் எதிரிற் கீழே இரு தோளும் அற்று விழுந்து கிடந்தான். அவன் தோள் இரண்டும் பாணனது பிடியிலேயே பொருந்தியிருந்தன. பொருநன் விசையாய் இழுத்துத் தன் வலியைக் காட்டவும், அவன் தோள்கள் பிய்த்துக்கொண்டுவிட்டன. தோளற்ற அவனது உடல் தரையில் விழுந்து துடித்தது, அதைக் கண்டு நாணிக் கணையன் தலைகுனிந்தான். பாணனது பிடி உடம்பையும் முதலையையும் வென்றுவிட்டதென்றே சொல்லலாம்.

''பாணன், மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைத்திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணி யாங்கு'' (அகம்-386)

இளம் பருவத்திலிருந்தே தமிழ் மக்கள் இத்தகைய போர்த் தொழில்களைப் பயின்றுவந்தார்கள். ஒவ்வோர் ஊரின் பொது மன்றத்திலும் போர்க்களம் அமைக்கப்

பெற்றிருக்கும். அது மர நிழலின்கண் மணல் நிறைத்து வனப்புற அமையப்பெறும். அதை இப்பொழுது கோதாக் குழி என்றும் ஆங்கிலத்தில் Arena என்றும் கூறுகின்றனர். இங்குப் போரவையத்தாரின் முன்னிலையில் பயிற்சிகள் நடைபெறும். அவ்வாறு பயிலும்பொழுது கூடப் பெருஞ்சினமும் மறமும் காட்டி வெர்காட்டாது இளைஞர்கள் முனைந்து ஊக்கமாய் விளையாடுவார்களாம்.

"நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅ
திருஞ்செருவி னிகன் மொய்ம்பினோர்"

என்பது பட்டினப்பாலை. இத்தகைய படைக்கலப் பயிற்சிகளோடு கோழி, தகர், யானை, பூழ், சிவல், கிளி, பூவை, குதிரை முதலியவற்றை ஒன்றோடொன்று பொரவிட்டும், ஓடவிட்டும், போட்டிகள் நடத்திப் பணயம் வைத்து விளையாடுவதும் உண்டு என்பதைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. தேர்களையும் வண்டிகளையும் பந்தயத்தில் ஓட்டம் விடுவதும், விற்போர்கள் வாட்போர்கள் நடத்துவதும், யாழ், பாட்டு, கூத்து என்னும் இவைகளிற் போட்டிகள் நடத்துவதும், கூத்தாட்டவைக் குழாங்களில் நாடகங்கள், பாவைக் கூத்துக்கள் காண்பதும் வழக்கமான விளையாட்டுகளாய் இருந்தன. திருவிழாக் காலங்களில் இவை சிறப்பாகக் கொண்டாடப்பெறும். திருநாட்களில் வீரர்கள் கூடித் தத்தம் சேரிகளில் நிகழ்த்தும் விளையாட்டுப் போர்களைச் சேரிப் போர் என்றும் மள்ளர் விழவு என்றும் வழங்குவர். அப்போர்களில் வீரர்கள் புண்களை மார்பிலும் முகத்திலும் விரும்பி ஏற்று

மனமகிழ்வர். திருவோண நாளில் மதுரையில் நிகழும் சேரிப் போரைப் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது:

''மாயோன் மேய வோண நன்னாள்
* * *
மறங்கொள் சேரி மாறுபொரு செருவின்
மாறா தற்ற வடுப்படு நெற்றிச்
சுரும்பார் கண்ணிப் பெரும்புகன் மறவர்''

இக்காலத்தும் திருவிழா நாட்களில் சிலம்பம் விளையாட்டுகள் நடக்கின்றன.

தமிழ்நாட்டுப் பண்டைய வரலாற்றை நாம் துருவி ஆராயும்பொழுது, பிறர் நாட்டைக் கைக்கொள்ளும் நோக்கம் சிறிதுமின்றித் தங்கள் வலிமையை நிலைநாட்டு வதற்காகவே தமிழ் மன்னர்களும் சிற்றரசர்களும் பெரும் போர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். போர்த்தினவு கொண்டு உடற்றிய சில போர்களில் இருதிறத்தார்களும், ஒருவராவது எஞ்சினார் என்றில்லாமல், அனைவரும் மடிந் தும்போயிருக்கிறார்கள்.

சேரி விழவுகளிலும் திருவிழாக் காலங்களிலும் ஆடவ ரும் பெண்டிரும் தம்முட் கலந்து, கைகோத்துத் தழுவித் துணங்கையாடுதலும் குரவையயர்தலும் தமிழ்நாட்டில் பெரு வழக்கிற்றாயிருந்தன. துணங்கை என்பது ஒரு வகைக் கூத்து. அதனைச் சிங்கிக்கூத்து என்றும் கூறுவர். ''பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடை யது துணங்கையாகும்'' என்று அதன் இலக்கணமும் கூறப்பட்டிருக்கிறது. ஆடவர் மகளிருக்கு முதற்கை கொடுத்து ஆடுவார்களாம். மகளிருடைய துணங்கை

நாளும் மள்ளருடைய சேரிப் போரும் ஒன்றாய் நிகழும் என்பது தெரிகிறது.

"வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே"

(குறுந்தொகை-364)

ஆடவர் விளையாட்டுக்களைவிட மகளிரின் விளையாட்டு களே மிகுதியாகச் சங்க இலக்கியத்திற் காணப்படுகின் றன. அக்காலத்தில் இளமகளிர் யாதொரு கவலையுமின்றி விளையாடுவதே தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பெண் குழந்தைகளை விளையாடவிடாமல் வீட்டினுள் அடைத்து வைப்பது பெரும்பாவம் என்றும், அதனால் செல்வம் தேய்ந்துவிடும் என்றும் கருதினார்கள்.
இதனை,

"விளையா டாயமொ டோரை யாடா
திளையோ ரில்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனு மன்றே யாக்கமுந் தேய்ம்மெனக்
குறுநுரை சுமந்து நறுமல ருந்திப்
பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண வாடுகம்"

(நற்றிணை-68)

என்பதால் அறியலாம். இளமகளிரைக் குறிக்கும்போ தெல்லாம் "ஓரையாயம்" என்றும் "பொய்தன் மகளிர்" என்றும் பாடுகின்றனர். ஓரை என்பது ஒருவகை விளையாட்டு. அஃது இன்னது என்று நன்றாக விளக்கப் படவில்லை. அது பஞ்சாய்ப்பாவைகொண்டு மகளிராடும் விளையாட்டு என்று சிலர் கூறுவர்.

மகளிர் ஆடும் விளையாட்டுகள் பலவும் பலவாறாகக் கூடியிருந்து விளையாடுவனவாகும். பெண்களுக்கென அமைந்த விளையாட்டுகள் அவர்களுடைய மெல்லியல் மேனியின் வளர்ச்சிக்கும் எழிலின் எழுச்சிக்கும் ஏற்றபடி இருந்தன. அவர்கள் வயதுவந்து இல்லறம் ஏற்றுக் கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து வாழ்க்கையை இனிது நடத்துவதற்குத் தக்க முறையில் பயிற்சியளிக்கும் விளையாட்டுகளே அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. வண்டலயர்தல், சிறு வீடு கட்டுதல், சிறு சோறு சமைத்தல், பாவையாடல் முதலியன இல்லறக் குறிப்புடனேயே இயன்றுள்ளன. இவ்வாடல்களைப் பன்னிரண்டு வயது வரையில் பெண்கள் ஆடிவந்தனர். அவற்றை விளையாட்டாகக் கருதாது, விழவு நோன்பு அயர்வதாகவே கருதி விளையாடினர். அவற்றை உண்மையோடு செய்துவந்தால் நல்ல கணவனை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் நிலவிவந்தது.

பூந்தாதும் பஞ்சும் பட்டும் கொண்டு அழகான பொம்மைகள் செய்து, அவற்றை ஈன்றெடுத்த குழந்தைகளைப் போலப் பேணி, குழமகன், சிறுமுத்தன் போன்ற பெயர்களைச் சூட்டி அவை ஒன்றோடொன்றை மணம் செய்வித்து மண விளையாட்டு நடத்துவதை ஒரு நோன்பு போலக் கொண்டாடினர். இதற்காகப் பல வீடுகளிற் சென்று ஐயம் எடுத்துவந்தும் பிறர்க்குஇட்டு அறத்தைப் பெருக்கினர்.

"பொய்தல் மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ."
"சிறுமுத் தனைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ."

(கலித்தொகை: 59)

தாம் வளர்க்கும் பாவைக்கு ஏதாவது சிறு துன்பம் நேரிட்டால் அதைப் பெரிதாகக் கொண்டு தாங்களும் துயருறுவார்களாம்:

"தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென" (குறுந்தொகை-48)

அச்சிறு பெண்கள் பாவையை மடியில் வைத்துக் காலை நீட்டி இருந்துகொண்டு இதோ பாலூட்டுவதைப் பாருங்கள்!

"உறுஅ வருமுலை மடாஅ
உண்ணுப் பாவையை யூட்டு வோளே"
(ஐங்குறுநூறு-128)

மார்கழி மாதத்தில் இளமகளிர்கள் கூடிப் புலரிவிடிய பின்கண் நீர்த்துறையை நண்ணி நீராடிப் பாடித்தொழுது நோன்பிருப்பர். இதன் பலன் நல்ல கணவனை யடைதலாகும். இதனைத் தைநீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் கூறுவர்.

"வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ"
(கலித்தொகை-59)

சுனையிலும் ஆற்றிலும் கடலிலும் பாய்ந்து நீந்தி ஓடி விளையாடி. மகளிர் உடற்கட்டுடன் நோயின்றிவாழ்ந்தனர். நுங்கின் நீரும் கரும்பின் சாறும் தேங்கின் இளநீருடனே கலந்து முந்நீருண்டு முந்நீர்ப் பாய்ந்து முழுகியாடினராம். (புறம்-24). அவலை உண்டு அலைகடற் பாய்ந்தனராம் (புறம்-63) இளமகளிரை நீர்த்துறைக்கண் கண்டுவிட்டால் நண்டுகள் பாடு திண்டாட்டம்தான். அலவனாட்டுதலை ஒரு விளையாட்டாகவே பெண்கள் கொண்டிருந்தனர். பொன்னாலும் பளிங்காலும் கழங்குகள் செய்து அம்மானை

விளையாட்டு ஆடினர். நொச்சியும் முல்லையும் வளர்ப்பது ஒரு விளையாட்டு. சிலம்பெதிர் கூவுதலும் ஒரு விளையாட்டு. மலைப் பக்கங்களில் குகைகளின் முன்னால் நின்று கூவி யழைத்து எதிரொலி கேட்டு மகிழ்வர். இது மணமான பின்னர்க் கணவன் சொல்லுவதையே தாம் சொல்லி வாழ்க்கை நடத்துவதற்குப் பயிற்சி போன்றமைந்தது:

''நின்மலைச், சிலல்புபோற் கூறுவ கூறும்
இலங்கே ரெல்வளை யிவளுடை நோயே,''

(கலித்தொகை-46)

இளம் பெண்கள் மலர்களும் இலைகளும் கொய்து தழையுடைகளும் தொடலைகளும் தைத்து உடுத்து விளை யாடினர். வேங்கை மரத்தினடியிற் சென்று 'புலி! புலி!' என்று கூப்பிட்டு, வளைந்த கொம்புகளில் மலர் பறித்து விளையாடினர். கும்மி, கோலாட்டம் என்றால் ஒரே கும்மா ளம்தான். ஊஞ்சல் ஆடுவதில் ஊக்கமாய் முனைந்து நிற் பர். அக்காலத்தில் சந்தன மர உரலிலே முத்து நிறைந்த யானைக் கொம்பால் தினையைக் குத்தி வள்ளைப் பாட்டுப் பாடி விளையாடினர். சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை உரையில் அடியார்க்கு நல்லார். காட்டிய "சிந்துப் பிழுக்கையுடன்" என்று தொடங்கும் மேற்கோளிற் குறிக் கப்பட்ட பல்வரிக் கூத்துக்கள் பலவற்றுள், திருவாசகத் துட் காணப்படும் அம்மானை, வண்டு (திருக்கோத்தும்பி), தோள்வீச்சு (திருத்தோணோக்கம்), சாழல், உந்தி, அவ லிடி (திருப்பொற்சுண்ணம்), கொய்யுமுள்ளிப்பூ, (திருப் பூவல்லி), படுபள்ளி (திருப்பள்ளியெழுச்சி), தெள்ளேணம் முதலியன யாவும், பாடிக்கொண்டே மகளிர் ஆடும் விளை யாட்டுகள் என்பது தெளிவாகும். இவை போல்வன பண்டைக் காலத்தில் பல்கியிருந்தனபோலும். கைகோத்

தாடும் குரவையைத் தெற்றியாடல் என்றும் கூறுவது உண்டு.

அந்நாளில் ஆடவர் விளையாடாத, மகளிர்க்கே உரித்தாயிருந்த விளையாட்டு ஒன்று உண்டு. அதுதான் பந்து விளையாடுதல். பந்துகள் பட்டுத் துணி கொண்டு நூலால் வரிந்து கட்டப்பட்டுக் கண்கவர் வனப்பினவாய் இருக்கும். சிலம்புகள் சலீர் என்று ஒலிக்கப் பெண்கள் காலால் அடித்துப் பந்து விளையாடுவர். பந்து விளையாட்டு காலுக்கு வலிமை ஊட்டும். கால் சலித்துப்போனால் வீட்டு முன்றிலின் மணலிடத்திருந்து கலகலவென்று வளையல் ஒலிக்கக் கழற்காய் ஆடுவர். அம்மானை விளையாட்டு கைகளுக்கு உரம் ஊட்டும்:

"தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்."

(பெரும்பாணாற்றுப்படை)

பண்டை நாளிற் பாவையரே பந்து விளையாடுதலைப் பழக்கத்திற் கொண்டிருந்தனர். ஆடவர் விளையாடுவதில்லை. இதற்குச் சான்று யாதெனிற் கூறுவோம்: பாண்டிய மன்னர் மதுரைக் கோட்டை வாயிலிற் பறக்கவிட்டிருந்த மீனக்கொடிக்குப் பக்கத்தில் பந்தும் பாவையும் கட்டித் தொங்கவிட்டிருந்தனர். "எங்கள் மீது பகைமைகொண்டு போரில் எதிர்த்துவரும் மடவோர் இருப்பார்களேயானால், அவர்களைப் போரில் முறியடித்து மகளிராக்கிக் கையில் அந்தப் பந்தையும் மாலையும் கொடுத்து விளையாட விடுவோம்" என்ற எச்சரிக்கையின் அறிகுறியாகவே அவை அங்குக் கட்டப்பட்டிருந்தனவாம். அவ்வாறு

யாரும் பகைவர் வராததால், அவை வாயிலில் தூங்கிக் கொண்டிருந்தனவாம்.

''செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்.'' (திருமுருகாற்றுப்படை)

இதனால் பந்து விளையாடுதற்குரியார் மகளிரே என்பது தெற்றெனப் புலனும். அக்காலத்து மகளிர் பந்து விளை யாடிய திறனையெல்லாம் சிலப்பதிகாரம், பெருங்கதை போன்ற நூல்களில் விரிவாகக் காணலாம். எஞ்சாது மேற்கோள்களைக் கூறுவதாறைல் இக்கட்டுரை ஒரு பெரு நூலாக விரியும் என்று அஞ்சி ஒரு சில மேற்கோள்களே தரப்பட்டுள்ளன. இக்கட்டுரையும் விளையாட்டாகவே எழுதப்பட்டது. இதைப் படிப்போர்களும் விளையாட் டாகவே படித்து மகிழ்வார்களாக!

# தமிழர் பண்பாடு-
# ஆடையும் அணியும்

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

ஆடையும் அணியும் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிலே உண்டு. "ஆடையில்லாதவன் அரை மனிதன்" என்பது இந்நாட்டுப் பழமொழி. ஆடை நெய்யும் தொழில் நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக இந்நாட்டில் நடந்துவருகின்றது. பட்டு நூலாலும், பருத்தி நூலாலும், கம்பளத்தாலும் பலவகைப்பட்ட ஆடைகள் நெய்யும் தொழிலாளர் பண்டைத் தமிழ்நாட்டில் சிறந்து வாழ்ந்தார்கள் என்று சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. அந்நாளில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெற்ற இடங்களிற் சிலவற்றைத் தெரிந்துகொள்வதற்கேற்ற சான்றுகளும் உண்டு. கொரநாடு என்பது தமிழகத்திலுள்ள ஓர் ஊரின் பெயர். அங்கு நெய்யப்படும் புடவை கொரநாட்டுப் புடவை என்று வழங்குகின்றது. கொரநாடு எங்கே உள்ளது? அதற்குக் கொரநாடு என்ற பெயர் எப்படி வந்தது? என்று பார்ப்போமானால் நெசவுத் தொழில் முன்னாளில் எத்துணை விரிவாக நிகழ்ந்தது என்பது ஒருவாறு விளங்கும். மாயவரம் என்னும் மாயூரத்திற்கு அருகே உள்ளது கொரநாடு. கூறைநாடு என்ற பெயரே கொரநாடு என மருவி வழங்குகின்றது. கூறை என்பது

ஆடை. இப்போது அச்சொல் வழக்காற்றில் இல்லை. ஆனால் முற்காலத்தில் அது எல்லார்க்கும் தெரிந்த சொல். பாட்டிலும் உரையிலும் பயின்ற சொல். தேவாரம் அச் சொல்லை எடுத்தாளுகின்றது.

"இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் களையலாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்பது சுந்தரர் பாடிய தேவாரம். இறைவனை ஈசனை உள்ளன்போடு வழிபட்டால் இம்மையில் உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைக்கும்; மறுமையில் சிவலோக வாழ்வும் சித்திக்கும் என்பது இப்பாட்டின் கருத்து.

இப்பாட்டிலே உள்ள கூறை என்னும் சொல்லைத் தமிழ்நாட்டார் இன்னும் அறவே மறந்துவிடவில்லை. கூறைச் சேலை என்ற தொடர்மொழியிலே அச்சொல்லைக் காணலாம். கூறைச் சேலை என்பது முழுத்த வேளையில் மணமகள் உடுத்துக்கொள்வதற்காக மணமகன் வீட்டார் கொடுக்கும் சேலை. கூறை என்றாலும் சேலை என்றாலும் பொருள் ஒன்றுதான். ஆயினும் கூறை என்ற பழைய சொல்லின் பொருள் மழுங்கிவிட்ட காரணத்தால் சேலை என்ற பதத்தையும் அதனோடு சேர்த்து இக்காலத்தினர் கூறைச் சேலை என்று வழங்குகின்றார்கள். கூறை நெய்யும் நாடாகத் தமிழ்நாட்டில் முற்காலத்தில் பேரும் புகழும் பெற்றிருந்த கூறைநாடு இப்பொழுது பேரும் மாறி, சீரும் குன்றி ஒரு சிற்றூராக இருக்கின்றது.

ஆதியில் மரப்பட்டைகளையும் விலங்கின் தோல்களையும் மக்கள் ஆடையாகச் செய்து உடுத்தார்கள் என்று

ஆராய்ச்சியாளர் கூறுவர் பழந்தமிழ் இலக்கியத்தில் மரவுரி ஆடை குறிக்கப்படுகின்றது. மாதவம் புரிந்த முனிவர் ஒருவரை 'மரவுரி உடையன்' என்று மணிமேகலை உணர்த்துகின்றது சீரை என்ற சொல்லும் மரவுரியைக் குறிக்கும் திருஆவினன்குடி என்னும் பழனிமலையில் முருகனை வழிபடப் போந்த முனிவர்கள் சீரை உடுத்திருந்தனர் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

அயோத்தி மாநகரில் அரச கோலம் துறந்து தவக் கோலம் புனைந்து கானகம் நோக்கிச் சென்ற இராமனும் சீதையும் சீரை உடுத்திருந்தார்கள் என்று கம்பர் பாடுகின்றார்.

'சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை இளையவன் முன்செல
காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
ஊரை உற்றது உரைக்கவும் ஒண்ணுமோ''

என்ற பாட்டில் சீதை மரவுரி தரித்துச் சென்ற செய்தி குறிக்கப்படுகின்றது.

மலை நாட்டில் வாழ்ந்த மக்கள் இலைகளாலும் தழைகளாலும் செய்யப்பட்ட ஆடையை உடுத்தார்கள். மரவுரியும் பசுந்தழையும் மலைநாட்டில் வாழும் மக்களுக்குரிய உடைகள் என்று ஒரு குறத்திப் பாட்டுக் கூறுகின்றது. பொதியமலைக் குறவஞ்சி பாடுகின்றாள்:-

''கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்கு
கல்லி யெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம்

பசுந்தழையு மரவுரியு மிசைந்திடவே யுடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த வியல்பிதுகா ணம்மே''

என்ற பாட்டில் மலைநாட்டு மக்களின் வாழ்க்கை நன்கு எடுத்துக் கூறப்படுகின்றது. நாள்தோறும் வள்ளிக் கிழங்கை அகழ்ந்து எடுப்போம், குறிஞ்சி மலரைப் பறித்து முல்லைக் கொடியில் வைத்துத் தொடுப்போம் பசுந்தழையும் மரவுரியும் ஆடையாக உடுப்போம், செழுந் தினையும் நறுந்தேனும் விருந்தினர்க்குக் கொடுப்போம், பதனிட்ட புலித்தோலிற் படுப்போம் என்று சொல்லிக் கொண்டே போகின்றான் குறவஞ்சி.

காட்டு விலங்குகளாகிய மான், புலி, யானை முதலிய வற்றின் தோல்களும் ஆடைகளாக உடுக்கப்பட்ட செய்தி பழம் பாடல்களால் தெரிகின்றது. ஈசன் புலியின் தோலை ஆடையாகவும் யானையின் தோலைப் போர்வையாகவும் கொண்டான் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. எல்லா உலகமும் தானே ஆகி நின்ற ஈசனார்க்குக் ''கொல் புலித் தோல்'' நல்லாடையாயிற்று என்று திருவாசகம்பாடிற்று.

தமிழ்நாட்டு முனிவர்கள் மான் தோலை மேலாடை யாகப் போர்த்திருந்தார்கள் என்று திருமுருகாற்றுப் படை கூறும்.

''மாசற இமைக்கும் உருவினர் மானின
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்''

என்று அன்னார் தவக்கோலத்தைத் திருமுருகாற்றுப் படை நன்கு எழுதிக் காட்டுகின்றது.

ஆடையைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொற்கள் பலவுண்டு. கலிங்கம், காழகம், அறுவை, துகில் முதலிய பல சொற்களைத் தமிழிலக்கியத்திற் காணலாம். அவற்றுள் கலிங்கம் என்ற சொல்லைப் பார்ப்போம். பாரத தேசத்திலுள்ள ஐம்பத்தாறு நாடுகளுள் கலிங்கம் என்பதும் ஒன்று. தமிழ்நாட்டில் சோழ மன்னர்கள் சிறப்புற்றிருந்த காலத்தில் கலிங்கம் தமிழ் அரசனுக்குத் திறை செலுத்தும் நாடாக இருந்ததென்பது வரலாற்று உண்மை. கலிங்க நாட்டு அரசன் வழக்கம்போல் திறை செலுத்தாமையால் குலோத்துங்க சோழன் அந்நாட்டின் மேல் படை எடுத்து வெற்றி மாலை சூடிய செய்தி கலிங்கத்துப் பரணி என்னும் தமிழ்ப் பாட்டால் விளங்குகின்றது. இத்தகைய சீர்மை வாய்ந்த கலிங்கத்தில் நெய்யப்பட்ட ஆடை கலிங்கம் என்றே பெயர்பெற்றிருந்தது. தமிழ்க் கவிஞர்கள் கலிங்கம் என்ற சொல்லை நயமாக எடுத்து ஆண்டுள்ளார்கள். இரட்டைப் புலவர்கள் என்று தமிழ் நாட்டில் கவிஞர் இருவர் இருந்தனர். அவர்கள் எங்கும் ஒன்றாகவே சென்று கவி பாடுவர். ஒரு நாள் மதுரை மாநகரிலுள்ள பொற்றாமரைக் குளத்தில் இருவரும் நீராடச் சென்றார்கள். ஒருவர் கரையிலிருந்தார். மற்றவர் படியில் இறங்கி ஆடைகளைத் துவைக்கத் தொடங்கினார். அப்போது அவருடைய ஆடைகளில் ஒன்று படியிலிருந்து நழுவித் தண்ணீரில் விழுந்து குளத்தினுள்ளே சென்றுகொண்டிருந்தது. கரையிலிருந்த புலவர் அதைக் கண்டார். 'ஐயோ! கலிங்கம் போகிறதே' என்று கூவினார். துவைத்துக்கொண்டிருந்த ஆடைகளில் ஒன்று தண்ணீரில் மிதந்து செல்வதைக்கண்டார் கவிஞர். ஆனால் அதற்காக மனவருத்தப்படவில்லை. சுவையாக மறுமொழி அளித்தார். இக்கலிங்கம் போனால் போகட்டும். கவலையில்லை; இப்பதியிலே சொக்கலிங்கம் இருக்கின்றார். அவர்

இருக்கையில் நமக்கு என்ன குறை என்ற கருத்தை அமைத்து ஒரு கவி பாடினார்.

> "இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்
> சொக்கலிங்கம் உண்டே துணை."

என்ற பாட்டைக் கேட்டுக் கரையில் இருந்த புலவரும் களிப்புற்றார்.

பலவகைப்பட்ட ஆடைகள் தமிழ்நாட்டில் உண்டு. பொன்னாடை உண்டு. பூவாடை உண்டு. பாவாடை உண்டு. சிற்றாடை உண்டு. கல்லாடை உண்டு. மேலாடை உண்டு. இன்னும் பல உண்டு. இவற்றுள் சில ஆடவர்க்குரிய உடைகள். சில பெண்களுக்குரியவை. இக்காலத்தில் கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்தும் பழக்கம் தலையெடுத்து வருகின்றது. தெய்வங்களுள் திருமாலுக்குரியது பொன்னாடை. "பொலம் பூவாடையில் பொலிந்து தோன்றும் செங்கண் நெடியோன்" என்று திருமாலைப் பாடிற்று சிலப்பதிகாரம். பொன்னாடையைப் பீதாம்பரம் என்று சொல்வதுண்டு. பூவாடை என்பது அழகிய வேலைப்பாடுடைய ஆடை. பாவாடையும் சிற்றாடையும் இளம் பெண்களுக்குரிய ஆடைகள். கல்லாடை என்பது காவித்துணி; துறவியர்க்குரியது. அவ்வாடை. மேலாடை என்ற சொல் நளவெண்பாவிலே நயமாக எடுத்தாளப்பட்டுள்ளது. மேலாடை இப்பொழுது அங்கவத்திரம் என்று சொல்லப்படுகிறது.

ஆடை என்றாலும் உடை என்றாலும் பொருள் ஒன்றே. உடுக்கின்ற ஆடையை உடுக்கை என்றார் திருவள்ளுவர். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்பது அவர் அருளிய திருக்குறள். உடுக்கை என்பதும் உடுப்பு என்பதும்

ஒரே அடிச் சொல்லினின்றும் பிறந்தனவே யாயினும் அவற்றின் இடையே பொருள் வேற்றுமை உண்டு. இடுப்பில் உடுத்தும் உடை உடுக்கை என்றும், மேலே அணியும் சட்டை உடுப்பு என்றும் இக்காலத்தில் வழங்கு கின்றன. முற்காலத்தில் மெய்ப்பை என்பது உடுப்பின் பெயர். பணத்தைப் பாதுகாக்கும் பையைப் பணப்பை என்பது போல உடம்பைப் பாதுகாக்கும் உடையை மெய்ப்பை என்று குறித்தார்கள்.

வட்டுடை என்ற உடையும் முன்னாளில் இருந்ததாகத் தெரிகின்றது. போர்க்களம் செல்லும் வீரர்கள் இடுப்பி லிருந்து முழந்தாள் வரை உடுக்கும் உடையே வட்டுடை என்று பெயர் பெற்றிருந்தது. சீவகன் என்ற வீரன் போர்க்கோலம் கொண்டபோது வட்டுடை தரித்திருந் தான் என்று சிந்தாமணி கூறுகின்றது.

துகில் என்பது மாதர் அணியும் மெல்லிய ஆடை. கடற்கரைக்குத் தன் காதலனாகிய கோவலனோடு சென்ற மாதவி "நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடுத்தி" இருந் தாள் என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே துயிலி என்ற ஊர் ஒன்று உண்டு. அவ் வூரில் நெய்யப்படும் மெல்லிய ஆடையும் துயிலி என்றே வழங்குகின்றது. நேர்த்தியான துகில் நெய்யப்பட்டத னால் அவ்வூர் துகிலி என்று பெயர்பெற்று, அப்பெயர் நாளடைவில் துயிலி என்று மருவியதோ என்பது ஆராய்தற்குரியதாகும்.

ஆடையைக் குறிக்கும் பல அருமையான சொற்கள் இப்பொழுது பழகு தமிழில் இல்லை. அத்தகைய சொற் களில் ஒன்று அறுவை என்பது. ஆடை செய்யும் தொழி லாளரை அறுவையர் என்று மணிமேகலை குறிக்கின்றது.

இச்சொற்களை ஆராயும்பொழுது முன்னாளில் கைத்தறியிலேயே ஆடைகள் நெய்யப்பட்ட முறை நன்றாக விளங்கும். தறியினின்றும் துணிக்கப்பட்டது துண்டு; அறுக்கப்பட்டது அறுவை; குறைக்கப்பட்டது கூறை; எனவே ஆடையின் வரலாறு இந்நாட்டுக் கைத்தறியின் சீர்மைக்கு ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

இனி உடம்பினை அழகு செய்யும் அணிகலன்களைச் சிறிது பார்ப்போம். அவற்றை நகை என்பர் இக்காலத்தார். பொன்னாலும் மணியாலும் நகை செய்து மேனியை அலங்கரித்துக்கொள்ளும் வழக்கம் இந்நாட்டில் மிகப் பழமை வாய்ந்தது. பெண்கள் சிறப்பாகத் தலைமுதல் தாள்வரை நகையணிந்துகொள்ள ஆசைப்படுவர்.

இத்தகைய நகை பிறந்து வளர்ந்த வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்குத் தமிழ்நாட்டில் வழங்கும் சில நகைப் பெயர்கள் சிறந்த கருவியாகும். பாண்டி நாட்டிலே நகையைத் தடையம் என்பார்கள். மணம் பேசும்பொழுது பெண்ணுக்கு என்ன தடையம் போடுவீர்கள் என்று மணமகனைச் சேர்ந்தோர் கேட்கும் வழக்கம் இன்றும் நாட்டுப்புறங்களில் உண்டு. தடையம் என்ற சொல்லை ஆராய்ந்தால் நகை பிறந்த முறை ஒருவாறு விளங்கும். தடையம் என்றாலும் தடை என்றாலும் பொருள் ஒன்றே. நிலை என்பது நிலையம் என்று வழங்குதல் போலவே தடை என்பது தடையம் ஆயிற்று. பேய் பிசாசுகளால் உடம்பிற்கு நோய்நொடிகள் வரும் என்ற அச்சம் ஆதிகாலத்தில் உலகமெங்கும் பரவி இருந்தது. ஆதலால் அவற்றைத் தடை செய்வதற்குக் கழுத்திலும் கையிலும் இடுப்பிலும் காலிலும் மந்திர ஓலைச் சுருள்களை நூலிற் கட்டினார்கள். பீடைகளும் பிணி

களும் வாராமல் அவை தடுத்தமையால் தடையம் என்ற பெயர் வந்தது. பெரும்பாலும் கையில் அணியும் நகை ஒன்றையும் காலில் அணியும் நகை ஒன்றையும் ஆராய்ந்து பார்ப்போம். திருமணம் முதலிய நற்காரியங்களைத் தொடங்கும்பொழுது காப்புக் கட்டிக்கொள்ளும் வழக்கம் இன்றும் உண்டு. அதன் கருத்தென்ன? இடையூறு வாராமல் எடுத்த காரியம் இனிது நிறைவேறுவதற்குக் கையில் கட்டும் நூலே காப்பாகும். பீடைகளைத் தடுத்துப் பாதுகாத்தலாலேயே அது காப்பு என்று பெயர்பெற்றது. ஆதியில் நூலாகக் கட்டிய காப்பு இப்பொழுது தங்கம் முதலிய விலை உயர்ந்த பொருள்களால் செய்யப்படும் நகையின் பெயராயிற்று.

கையிற் காப்புக் கட்டியதுபோலவே காலிலும் தடை கட்டினார்கள். அத்தடைதான் தண்டை என்று பெயர் பெற்றது. பூடு என்பது பூண்டு என்றும், அடு என்பது அண்டு என்றும் வழங்குதல் போலவே தடை என்பது தண்டையாயிற்று. ஐம்பொன்னால் தண்டை செய்து குழந்தையின் காலில் அணிந்தால் பேய் அணுகாது என்ற நம்பிக்கை இன்றும் தமிழ் நாட்டில் உண்டு.

இவ்வண்ணம் கழுத்தில் தடையாக அணிந்த நூல் தாலி என்று பெயர் பெற்றது. தாலிக்கே நூல் என்ற பெயர் உண்டு. தாலியிழந்த பெண்ணை நூலிழந்தவள் என்பர். கவியரசனாகிய கம்பன் இறந்தபொழுது கலைமகள் நூலிழந்தாள் என்று பாடினார் ஒரு புலவர்.

"பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருக்க காமடந்தை நூல் இழந்த நாள்" என்ற பாட்டிலே நூல் என்பது மங்கல நாணாகிய தாலியைக் குறிக்கின்றது. இக் காலத்தில் தாலி பொன்னால் செய்யப்பட்டுப் பொற்றாலி

என்று பெயர் பெற்றாலும் அதனுள்ளே மங்கல நாணாகிய நூலை இடும் வழக்கம் இன்றும் உண்டு. குழந்தைகளுக்கு நோய் வராதிருப்பதற்காக ஐம்படைத் தாலி கட்டும் வழக்கம் முன்னாளில் இருந்தது. காக்கும் தெய்வமாகிய திருமாலின் ஐந்து படைக் கலங்களும் எழுதி நூலிலே கோத்துக் கழுத்தில் அணிந்தால் பீடை அணுகாது என்பது பண்டையோர் கொள்கை. இதனாலேயே இழை என்னும் பெயர் நகைக்கு அமைந்தது. நூலின் பெயராகிய இழை என்பது நகையின் பெயராயிற்று.

பழந்தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கு ஒரு சான்றாக நிற்பது நகை. அந்நாளில் மாதர் அணிந்திருந்த நகைகளை அழகாகக் கூறுகின்றது சிலப்பதிகாரம். கண்ணகி அணிந்திருந்த சிலம்பும் மாதவி அணிந்திருந்த பலவகையான நகைகளும் அழகிய வேலைப்பாடுடையனவாய் அம்மாதரின் அழகுக்கு அழகு செய்தன என்பது சிலப்பதிகாரத்தில் நன்கு விளங்குகின்றது.

சிலப்பதிகாரத்திலே குறிக்கப்படும் நகைகளுள் வளையலை மட்டும் சிறிது பார்ப்போம். தங்க வளையலும், சங்கு வளையலும், பவழ வளையலும் மாதவியின் கையில் அமைந்து அழகு செய்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இக்காலத்தில் வயிர வளையல் முதல் கண்ணாடி வளையல்வரை பலதிறப்பட்ட வளையல்கள் காணப்படுகின்றன. ஆயினும் ஆதியில் வெண்மையான சங்கு வளையல்களையே மாதர் அணிந்தார்கள். சங்கறுத்து வளையல் செய்யும் பணியாளர் பழந்தமிழ் நாட்டில் இருந்தார்கள். ''சங்கறுப்பது எங்கள் குலம் சங்கரனார்க்கு ஏது குலம்'' என்று நக்கீரர் பாடினார் என்பர். சீதை சங்கு வளையல் அணிந்திருந்தாள் என்பது, ''சங்கிற் பொதிந்த கையாள்'' என்று கம்பர் பாடுதலால் தெரிகின்றது. திருஞான சம்பந்தர் தேவாரமும் சங்கு வளையலைக் குறிக்கின்றது. ''வெள்வளை சோர என் உள்ளங்கவர் கள்வன்'' என்பது அவர் திருப்பாட்டு. எனவே ஆதி வளையல் சங்க வளையல்; பின்னே வந்தன தங்க வளையல்; பவழ வளையல்; வயிர வளையல் முதலியன. இந்த வகையில் தமிழ்நாட்டு நகைகள் சொல்லும் கதையை அறிந்துகொள்வது ஓர் ஆனந்தம்.

# பிறநாட்டார் தமிழ்த் தொண்டு

யோகி சுத்தானந்த பாரதியார்

1

உலக மொழிகளில் தமிழுக்குச் சிறப்பான இடம் உண்டு; இதைப் போற்றும் அயலார் குறளையும் போற்றுகின்றனர். என் ஐரோப்பிய யாத்திரையில் ஒவ்வொரு நாட்டிலும், தமிழை விரும்பும் நண்பரைக் கண்டேன். நான் பேசிய கூட்டங்களில் தமிழ்ப் பாடல்களைச் சொல்லி ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் மொழிபெயர்த்தேன். அப்போது ஐரோப்பியர் ஆர்வத்துடன் கேட்டனர். "உங்கள் மொழி அருவி முழக்கம்போல இருக்கிறது" என்றனர். பாரிஸ் பொது நூலகத்தில் சங்க இலக்கியங்கள் பல கண்டேன்; இலண்டன் நூலகத்தில் அரிய தமிழ் நூல்கள் உள்ளன. ரோமில வாடிகன் கோயிலைக் காணவந்த ஒரு பாதிரியார் 'திருக்குறளில் பைபிளைக் காண்கிறேன்' என்றார்.

"இனிய உளவாக இ[illegible] கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்ற குறளையும் சொன்னார். ஒரு ஜெர்மன் அறிஞரை டிரெஸ்டனில் கண்டு பேசினேன்; அவர் "மூன்றும் போரைத் தடுக்க ஒரே வழி — திருக்குறள் வழியே வாழுதல்" என்றார்.

2

தமிழ் வளர்ச்சிக்குக் கிறிஸ்துவப் பாதிரிமார் செய்த தொண்டு தமிழ் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது.

டாக்டர் போப், தெநோபிலி, கால்டுவெல், பர்தலோமியோ, ரேனியர், வீரமாமுனிவர்—முதலியோர் ஆற்றிய தமிழ்ப் பணியை உலகம் அறியும். பர்தலோமியோ ஃஜேகென்பேக்—டென்மார்க்கியர்; அவர் கல்வி கேள்விகளில் வல்லவர். டேனிஷ் மன்னன் பிரெடரிக் IV அவரைத் தரங்கம்பாடிக்கு அனுப்பினான். அங்கே அவர் 1706-ஆம் ஆண்டு வந்து டேனிஷ்மிஷனைத் தொடங்கினார்; ஆறு ஆண்டுகளில் தமிழ் கற்றுப் புலமை பெற்றார்; உடனே தமிழ் இலக்கியம் ஒன்று எழுதினார்; பைபிளைத் தமிழாக்கினார்; ஓர் அச்சகம் நாட்டினார்; பைபிளை வெளியிட்டார்; தமிழைக்கொண்டு சமயப் பணியில் அவர் வெற்றிபெற்றார். ரேனியர் என்னும் பாதிரியார் 1853-ஆம் ஆண்டு தமிழ் இலக்கணம் செய்தார்; தமிழின் இனிமையை உலகிற்கு விளக்கினார்.

ராபர்டு நோபிலி என்ற சாமியார் தமிழும் வடமொழியும் கற்றறிந்தார். காவியுடுத்து அந்தண ஒழுக்கம் பற்றித் 'தத்துவ போத சாமி' என்ற புனைபெயர் பூண்டு, பல்லக்கேறி, ஊர் ஊராகச் சென்று ஏராளமான தமிழரைக் கிறிஸ்துவராக்கினார். இவர் சுமார் இலட்சம் பேர்களை மதம் மாற்றினார். இவர் வேத முழக்கத்துடன் தேவார முழக்கமும் செய்து சென்றார்.

இவர்களைவிடப் பெரும் புலமை பெற்றவர் டாக்டர் ஜீ. யூ. போப்பையர். இவர் 1820-ஆம் ஆண்டு நோவாஸ்காசியாவில் பிறந்து, ஹோக்ஸ்டன் கல்லூரியில்கற்றுப் பட்டம் பெற்றார். 1839-ஆம் ஆண்டு வெஸ்லியன் கோயில் பாதிரியாகத் திருநெல்வேலிக்கு வந்தார். அங்கே இங்கிலாந்து சர்ச்சில் பணிபுரிந்தார். இவருக்குத் தமிழ்ல் அடங்காக் காதல் வளர்ந்தது. தமிழ் மொழியை இவர்

நன்றாகப்பயின்றார். 1849-இல் இவர் இலண்டனுக்கு வந்து ஆக்ஸ்போர்டில் தமிழின் அருமையைப் பற்றிப் பேசினார். திரும்பிவந்ததும் இவர் 1851-இல் தஞ்சையில் ஒருகல்லூரி கண்டார். உதகமண்டலத்தில் இருந்தபோதே அவர் திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் உலகிற்குத் தந்தார்; பங்களூரில் இருந்தபோது மணிமேகலைக் கதையை ஆங்கில உரைநடையில் எழுதினார்; பிறகு நாலடியாரை ஆங்கிலமாக்கினார். நானும் முதலில் போப்பின் மொழிபெயர்ப்பைப் படித்தே திருக்குறளின்பத்தை ஆழ்ந்தறிந்தேன்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகம் பெற்ற தமிழரின் கல்வளத்தைப் போப் சாமியார், ஐரோப்பியர் வியக்கும்படி விளக்கினார். ஆங்கில இலக்கிய இதழ்களில் இவர் தமிழின் பெருமையைக் கட்டுரைகளாக எழுதினார். ராயல் ஆசியாடிக் குவார்ட்டர்லி (Royal Asiatic Quarterly), தி இண்டியன் ஆண்டிக்குவரி (The Indian Antiquary), இண்டியன் மாகஜின் (Indian Magazine) முதலியவற்றில் இவர் எழுதிய கட்டுரைகள் இன்னும் ஆராய்ச்சியாளருக்குப் பயனாகின்றன.

சைவத் திருத்தொண்டரைப் பற்றியும் கவிஞரைப் பற்றியும் இவர் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதினார். புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களின் நயத்தை இவரே உலகிற்கு விளக்கினார். இவர் எழுதிய சிற்றிலக்கியத்தையே நாங்கள் சிறுவயதிற் படித்தோம். இன்னும் அது மாணவருக்குப் பயனாகிறது. டாக்டர் வின்ஸ்லோ என்பவர் தமிழ் ஆங்கில அகராதி யாத்தார். அதையே போப்பையர் வளப்படுத்தினார். அப்போது சென்னையில் அகராதிக் குழு (லெக்ஸிகன் கமிட்டி) இருந்தது. இந்தியா

மந்திரியே அந்தக் குழுவுக்கு மேற்சொன்ன அகராதியை அனுப்பி வெளியிடச் செய்தார். இந்த அகராதியே சிறு வயதில் எங்களுக்குப் பயனுளது. இவ்வாறு பல துறையில் தமிழ்ப்பணி ஆற்றிய போப்பையரை. மந்திரி ஜான் மார்லி பிரபு "பெரும் புலவர் மணி" எனப் போற்றினர். இவர் மொழி பெயர்த்த திருக்குறளை, விக்டோரியா மகாராணிகூடப் படித்தாள்.

அயராத் தமிழ்ப் பணி ஆற்றிய இப்புலவர் மணிக்கு 1906-ஆம் ஆண்டு ஆசிய அரசவைச் சங்கம் (ராயல் ஆசியாடிக் சொசைட்டி) தங்கப் பதக்கம் வழங்கியது. 1880-ஆம் ஆண்டு இவர் தமிழகத்தை விட்டு இங்கிலாந்து சென்றபோது நமது புலவர் மணிகள் போற்றி செய்து வழியனுப்பினர். ஆக்ஸ்போர்டு கழகம் இவருக்கு எம். ஏ. பட்டம் வழங்கியது. ஆர்ச்பிஷப்பு இவருக்கு டி. டி. பட்டம் வழங்கினர். இவர் இறுதிமட்டும் பாலியல் கல்லூரியில் ஐ. சி. எஸ். (இந்திய ஊழிய) மாணவருக்குத் தமிழும் தெலுங்கும் கற்பித்தார். தமிழ்ப் பணியை இவர் தவமாகக் கொண்டார். 1907-ஆம் ஆண்டு இவர் பரம பிதாவின் திருவடி சேர்ந்தார். அப்போதும் இவர் அருகே திருவாசகமும், திருக்குறளும், பைபிளுடன் இருந்தன. தமிழ் மாணவனாகவே வாழ்ந்த இவர் தமது நடுகல்லிலும் தமிழ் மாணவன் என்றே குறிக்கச் செய்தார்.

3

கால்டுவெல் பாதிரியார் மதுரையிலும், திருநெல்வேலியிலும் அரிய சமயப்பணியுடன் தமிழ்ப்பணியும் செய்தார். தொல்காப்பியம் முதல் திருக்குறள் வரையில் அவர் பல காப்பியங்களை ஆராய்ந்தார். தமிழ் மொழியைப் பிற மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். பல மொழிகளில்

தமிழ்மொழி கலந்து பயில்வதை அவர் கண்டுபிடித்தார் தமிழர் வரலாற்றையும் அவர் ஆராய்ந்தார். கிராம மக்களுக்கு அவர் தமிழறிவு புகட்டினார். அவர் செய்த தமிழ்த் தொண்டுகளைத் தமிழர் என்றும் மறக்க முடியாது.

4

அனைவருக்கும் சிகரம்போலத் தோன்றினார் வீரமாமுனிவர். பாதிரிமார் பணிகளுக்குப் பொன்முடி கவித்ததுபோல் இவரது பணி நலம் துலங்குகிறது. தமிழ் உள்ள மட்டும் இவர் நூல்களும் புகழோங்கி விளங்கும். இவரைத் தமிழ் வளர்த்த தந்தை என்பது மிகையாகாது.

வீரமாமுனிவர் 1680-ஆம் ஆண்டு பெருங்கவி விர்ஜில் (Virgil) பிறந்த இத்தாலியில், வெனிஸ் நகரில் ஒரு செல்வக் குடும்பத்தில் தோன்றியவர். இவரது இயற் பெயர் கான்ஸ்டன்ஸியஸ் பெஸ்கி. பெஸ்கி என்பது குடும்பப் பெயர். கான்ஸ்டன்ஸியஸ் என்றால் உறுதி, வீரம், தைரியம் வைராக்கியம் என்று பொருளாகும். ஆதலால் இவர் தமிழ்நாட்டில் வீரமாமுனிவராகவும், தைரியநாதராகவும் விளங்கினார். இவர் ரோமில் கலையும் சமய சாத்திரங்களும் பயின்று 30-ஆம் ஆண்டில் குருக்களானார். இலத்தீன், இதாலியம், பிரெஞ்சு, கிரேக்கம், ஆங்கிலம் ஆகிய ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சிபெற்ற இப்புலவர் பிரான்சிஸ் முனிவர் போன்ற கிறிஸ்து பக்தியும், சாவேரியார் போல் சிலுவைத் தொண்டார்வமுங்கொண்டு, போப் பாண்டவர் கட்டளையைத் தாங்கி மதுரைக்கு வந்தார்.

பாண்டிநாடு இவர் உள்ளத்தைக் கவர்ந்ததுடன், தமிழ் இவர் மனத்தைக் கொள்ளைகொண்டது. சுப்ரதீபக் கவிராயர் என்னும் பெரும் பாவலரிடம் இவர் இருபத்தைந்தாண்டுகள் தமிழ் மொழியை நிறைவாகக் கற்று

உணர்ந்து ஐந்திலக்கணமும் அறிந்தபாவலரானார். 67வயது வரையில் தமிழகத்திலிருந்து சுமார் நாற்பதாண்டுகள் பொதுநலம் புரிந்தார் இப்புண்ணியர். இவர் எப்போதும் சிற்றூர்களிலேயே அடக்கமாய் இருந்து பொதுமக்களுக்குத் தமிழும் அறநெறியும் பயிற்றினார். கோனான்குப்பம் என்ற சிற்றூரில் அழகான மாதாக்கோயில் கட்டி, அங்கேயே கலைத்தவம் புரிந்து இவர் தேம்பாவணி அருளினார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தேம்பாவணி அரங்கேறியது. அதைச் செவிமடுத்த புலவர்களே இப் பாவலருக்கு 'வீரமா முனிவர்' என்ற காரணப் பெயரைச் சூட்டிப் பெருமை செய்தனர். இதைத் தவிர இவர் திருவாரூர்க் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை, சித்தரின் அம்மானை முதலிய பல செய்யுள் நூல்களைச் செய்தார். தமிழ் உரைநடைக்கும் வழிகாட்டியவர் இவரே. இவர் எழுதிய பரமார்த்தகுரு கதை நகைச்சுவையில் இணையற்றது. வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம் என்னும் இவருடைய இரண்டு நூல்களும் சிறந்த சன்மார்க்க விளக்குகளாகும். நிகண்டை உருத்தள்ளி வருந்திய அக்காலப் புலவருக்குச் சதுர அகராதி வகுத்தளித்தவர் இம்முனிவரே. இவர் வகுத்த அகராதியைத் துணைக்கொண்டே பிற்காலத்தில் பல அகராதிகள் எழுந்தன. தமிழ் இலக்கணத்தை இவர் தொன்னூல் விளக்கமாகச் செய்து அளித்தார். இத் தொன்னூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் தழுவிய நன்னூலாக விளங்குகிறது. அந்நூலை மதுரைப் புலவர் வியந்து இவருக்குத் 'திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகர்' என்ற பட்டமளித்தனர்.

தைரியநாதர் இலக்கிய-சமயத் தொண்டு மட்டும் செய்யவில்லை. இவர் அரிய தியாகி. தம்மையே பொது

நலத்திற்குத் தந்த தூய துறவி. சன்மார்க்கத்தை நிலை நாட்ட இவர் பட்ட இடர்கள் பலகோடி. போரும் பொறாமையும் நிறைந்த அந்தக்காலத்தில் துரோகிகளா லும். பகைவராலும், திருவிலி மூடராலும் இப்புண்ணியப் புலவர் பட்டபாடு கொஞ்சநஞ்சமன்று. வீரமாமுனிவர் கயிற்றாற்றின் அருகே குருக்கள்பாடியில் அருட்பணி செய் திருந்தார். ஒரு கயவன் அன்பன் போல நடித்து அவரிடம் பெறவேண்டியதெல்லாம் பெற்றுக்கொண்டு, பக்கிரி வேடம்போட்டுத் தப்பி, அலங்குளத்திற்குச் சென் றான். அங்கே மதுரை நாயக்கர் படை வரிவசூலுக்காக முகாம் போட்டிருந்தது. கயவன் படைத் தலைவரிடம் கண்டபடி கோள்ளோற்றி. குருக்கள்பாடி கிறிஸ்துவச் சாமியார் தன்னை அடித்து விரட்டியதாகவும் ஏராளமான பணம் புதைத்து வைத்திருப்பதாகவும், பாமரர்களை ஏமாற்றுவதாகவும் பொய்கட்டிவிட்டான் முரட்டுப்படை சினந்து வந்தது கயவன் முனிவரைக் காட்டிக் கொடுத் தான். படை வெறியர் முனிவரைப் பிடித்துக் கட்டிச் சிறையிட்டு வருத்தினர். திருமடத்தைக் கொள்ளையடித்த னர் ஆனால் அங்கே விலைமைக் தகடுகளே இருந்தன. முனிவர் பொறுமையைக் கண்டு வெறிதணிந்த படை வீரர் மன்னிப்புக் கேட்டனர்.

ஆவூரில் அவர் சபைகூட்டி, சிறுவையடியாரைச் சேர்த்து அரிய பணி செய்தபோது, சந்தாசாகெபு படை யெடுத்தான். ஊர் நடுங்கியது. பொதுமக்களுக்கு அஞ்சலளித்து, வீரமாமுனிவர் தாமேபகைவரிடம்சிறைப் பட்டுச் சந்தாசாகெபு முன் சென்றார். சந்தாசாகெபுடன் அவர் பாரசீக மொழியிற் பேசினார். அவர் அறிவை வியந்த சாகெபு தைரியநாதரைத் தன் மந்திரியாக்கி, விருதுகளும், பல்லக்குகளும் அளித்துப் பெருமைப்படுத்தி

ளுன். அந்தக்காலம் எங்கும் போர்வெறியும், படுகொள்ளை யும் கொடுமை செய்தன. தாம் இருந்த ஊர்களிலெல்லாம் தைரியநாதர் பொதுமக்களுக்குப் புகலளித்து, சன்மார்க்க போதனை செய்து கடவுளை நம்பும்படி வழிகாட்டினார்.

## 5

கலைக்கோயில் பொதுக்கோயில். சாதிமத வேறு பாடே அதில் இல்லை. உலக ஒற்றுமைக்குக் கலைப்பண்பு பெரிய சாதனமாகும். தமிழ்க் கலைக்கோயிலில் மேற்கும் கிழக்கும் இணைந்து விளங்கும். சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிருஸ்துவர்-அனைவரும் அக் கோயிலில் அன்புத்தொண்டு செய்திருக்கிறார்கள். அறிவு விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள்; ஆர்வ மாலை சூட்டி அணிசெய்திருக்கிறார்கள். இந்த அணிமணி மாலைகளில் ஒரு வாடாக் கற்பகமாலை காண்கிறது. அதுதான் வீரமா முனிவரின் "தேம்பாவணி" என்ற பெருங் காப்பியமாலை. 36-படலங்களும் 3615 செய்யுட்களும் கொண்ட இக்காப் பியம் புலவருக்கும், கடவுளடியாருக்கும் அரிய சிந்தனை விருந்தாகும். 'என்றுமுள தென்றமிழ் இயற்றி இசை கொண்டான்' என்று கம்பர் அகத்தியரைச் சிறப்பித்த மொழிகளே, தேம்பாவணி அருளிய முனிவருக்கும் பொருந்தும். இம்முதுபெருங் கவிஞருக்கு அமரத்தன்மை அளித்த இம்மாபெருங் காவியம் கம்பராமாயணம், சிந்தா மணி, திருக்குறள்-போன்ற சீரிய நூல்களைக் கற்றுணர்ந் ததால் எழுந்தது. இதில் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளும் காணும்; இயற்கையழகின் விளக்க மும் காணும். முதன்மையாகப் பேரின்பச்சுவை இக் காவியத்தில் பெருகக் காணும். ஆகிர்த மரியாள் எழுதி வைத்த சூசை முனிவர் கதையே இந்நூலுக்கு முதல் நூலாகும். உலகந்தரும் இடர்களையெல்லாம் கடந்து

கடவுளன்பர் மோட்ச வீடடைதலை இப்பாவலர், மலையருவிக்கு உவமித்து அரிய செய்யுள் ஒன்று பாடியிருக்கிறார்:

'அஞ்சிலாஎதிர் அடுக்கிய கல்லெலாங் கடந்தே,
எஞ்சிலாஎழில் இமைத்தநீள் மருதமும் நீக்கித்
துஞ்சிலாநதி தொடர்ந்தகல் கருங்கடல் நோக்கல்,
விஞ்சையாரெலாம் வெறுத்துவீ டடைகுதல் போன்றே.''

ஆற்று வெள்ளத்தை, அணைபோட்டுத்தடுத்துக் கால்வாய்களாக்கி, உயிரை ஊட்டும் பயிர்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். அதுபோலத் துறவிகளும் பொறிபுலன்களைப் புறஞ்செல்லாமல், தடுத்தடக்கிப் புண்ணிய வழியில் செலுத்துகிறார்கள். இக்கருத்தை முனிவர் அழகாக விளக்கியிருக்கிறார்:

'தெறியு லாம்புனல் சிறைசெய்து பயன்பட ஒதுக்கி,
வெறியு லாமலர் மிடைந்தல வயல்வழி விடுவார்,
பொறியு லாம்வழி போக்கிலது இயல்பட அடக்கி,
நெறியு லாவுற நேரவை நிறுத்தினர் போன்றே''

தொட்ட இடமெல்லாம் இப்படித் தேனும் பாலும் கனிரசமும் கசிந்து பேரின்பச் சுவை தரும் தேம்பாவணியைச் செய்த வீரமாமுனிவர் வளர்த்த தமிழ் வாழ்க!

6

இவ்வாறு பிறநாட்டார் செய்த தமிழ்ப் பணியால் உந்தப் பெற்று, யானும் எந்தாயின் பெருமையை உலகிற்கு விளக்க எழுந்தேன். முதலில் இந்தியில் இராமலிங்க சுவாமிகள் வரலாறும், அருட்பா மொழிபெயர்ப்பும் எழுதினேன். பிறகு ஆழ்வாராதிகள் வரலாறும், திவ்யப் பிரபந்தமும் இந்தியில் எழுதினேன். இவை வடநாட்டிற்

சிறந்து விளங்கும் ‘கல்யாண்’ இதழில் வெளிவந்தன. வட நாட்டு நண்பர் தமிழ்ப் பெரியார் வரலாறுகளைக் கேட்டனர். தமிழ் அளித்த அருட்செல்வத்தை அறிந்தனர். ஆங்கிலத்தில் மகாத்மா ராமலிங்கம், மகரிஷி தாயுமானார், மாணிக்கவாசகர், திருவள்ளுவர், திருக்குறள் மொழி பெயர்ப்பு முதலியவற்றைப் பல பத்திரிகைகளில் வெளியிட்டு நூலாக்கினேன். இந்நூல்களைக்கண்டு எனது நண்பரான மோனுட் ஹெர்ட்ஸன், ரோமாரோலான் முதலியோர் தமிழ்ப் பெரியார் வரலாறுகளை முறையாக ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும், ஜெர்மெனியிலும் வெளியிட ஊக்கினர். ரோமாரோலான் எழுதிய மொழிகளை நான் மறக்க முடியாது. அவற்றை இங்கே தமிழாக்கித் தருகிறேன்.

“தங்கள் ஆங்கில நூல்கள் என்னைத் தமிழகத்திற்குக் கொண்டு சென்றன. தமிழில் இத்தகைய ஆத்மஜோதிகளும், அருட் செல்வங்களும் உள்ளன என்பதை இன்றே அறிந்தோம். அவற்றை முறையாக வெளியிட நாங்கள் விரும்புகிறோம். முதலில் திருக்குறளைப் பிரெஞ்சில் சரியானபடி மொழிபெயர்த்து வெளியிடுவோம். பிறகு அருட்பா வரட்டும் அவை ஐரோப்பாவைப் பிடித்த இரத்தக் காய்ச்சலுக்குச் சரியான மருந்தாகும். எங்கள் எண்ணத்தைப் போர் வெறிப் புயல் ‘சுப்’பென்று அணைத்து விட்டது. ஆனால் இன்றும் அந்த முயற்சி நடக்கிறது. தக்கார் கூட்டுறவிருந்தால் உலகெலாம் அருள் முழக்கம் செய்யலாம்”

எனது ஜப்பான் செலவின்போது பாங்காக்கில் சில நாட்கள் தங்கினேன். அங்கே மரகத புத்தர் கோவில் இராமாயண ஓவியங்களைக் கண்டு வியந்தேன் அவை

கம்ப ராமாயணத்தை ஒட்டி அமைந்தன. சையாம் மந்திரி எனக்கு விருந்தளித்தார். அவரிடம் தமிழின் இனிமையைப் பற்றிப் பேசும்போதே 'கம்ப ராமாயணம் எங்களுக்கு விருப்பம். தாங்கள் சையாம் சங்கத்தில் கம்ப ராமாயண நயங்களைப் பற்றிப் பேசுங்கள்-கம்பனைப் பற்றி ஆங்கிலத்தில் விளக்குங்கள். நாங்கள் சையாமில் மொழிபெயர்த்துச் சுவைப்போம்'' என்றார். நான் அவ்வாறே சில சொற்பொழிவுகள் ஆற்றினேன். சுந்தரகாண்டச் செய்யுளைக் கேட்டுக் கேட்டுச் சயாமியர் மகிழ்ந்து போனார்கள். என் சொற்பொழிவு பத்திரிகைகளில் வந்தது. சையாம் மந்திரி கம்பராமாயண மொழி பெயர்ப்புவேண்டினார்; வ. வே. சு. ஐயரின் 'கம்ப ஆராய்ச்சி (Study of Kamban) என்ற நூலை அனுப்பினேன். சையாம் மொழியில் இராமகீர்த்தி என்ற நூலும் உள்ளது. மலாய், சையாம், இந்தோசீனு, கம்போடியா, இந்தோசியா-முதலிய தென் கிழக்கு நாடுகளிலெல்லாம் இராமாயணக் கலை பரவியுள்ளது. அதிலும் கம்பன் கலை பரவியுள்ளது என்னலாம்.

7

சோவியத் ரஷ்யாவில் லெனின்கிராடு கலைநகரம். அங்கே ஆசிய மொழிகள் பயிலும் கல்லூரியுள்ளது அக் கல்லூரிப் புலவர் 'கல்யாண்' என்பவர் எனக்கு விருந்தளித்தார். ஓர் அம்மையார், மொழிபெயர்த்த பகவத் கீதையை எனக்குத் தந்தார். அங்கே ஆரியப் புலவர் இருந்தனர். அவர்கள் சமுஸ்கிருதத்தில் என்னுடன் பேசினர். நான், 'சமுஸ்கிருதத்திற்கு முன்பே இந்திய நாட்டில் வழங்கிய மொழி தமிழ். அது மிகச் சுவையுடையது' என்றேன். எல்லோரும் செவி கொடுத்தனர். உங்கள் கம்யூனிசம் உண்டாவதற்கு முன்பே மார்க்சும் லெனினும் தோன்று முன்பே, எங்கள் வள்ளுவர் மாசற்ற

சமதர்மம் பேசினர். பொதுவுடைமைக்கு வித்திட்டார்" என்றதும் அவர்கள் வியந்தனர்;

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது
பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.
ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.
முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

என்ற குறள்களை விளக்க விளக்க, அவர்கள் தமிழிடம் அன்பு கொண்டனர். நான் ஐந்து நிமிடம் தமிழில் பேசிப் பிரெஞ்சில் மொழி பெயர்த்தேன். இவ்வாறே ஐரோப்பிய நாடுகளில் தமிழை ஆர்வத்துடன் கேட்கிறார்கள். தக்க முயற்சி எடுத்துத் தக்காரை ஆதரித்தால் உலகில் வடமொழிக்குள்ள பெருமை தென் மொழிக்கும் எய்தும்.

ஜெனிவா, ஜூரிச், வராகா, பெர்லின், பாரிஸ், லண்டன் சர்வகலாசாலைகளில் தமிழின் சுவையை அறிய ஆர்வமுள்ள புலவர் உண்டு; இங்கெல்லாம் சமுஸ்கிருதம், இந்தியும், வங்கமும், மராட்டியும் கூடப் பாடமாக உள்ளன. அவ்வாறே தமிழையும் உலகப் பல்கலைக் கழகங்களில் புகுத்த வேண்டும். அதற்குத் தகுந்த செல்வர் மானியம் அளித்துப் புலவர்களை அனுப்ப வேண்டும்.

தமிழர் விழித்தெழுந்து முயன்று முன்னேறுக.
தமிழ்நாட்டுக் கல்விமுறை தமிழர்கையில்.
தாய்நாட்டுத் தொழில்களெல்லாம் தனயர் கையில்!
தமிழர் வாணிகமெல்லாந் தமிழர்கையில்.
தமிழ்த்துறையில் இயங்குவதும் தமிழர் கப்பல்!
தமிழ்ச்சமுதாயத் தொண்டு தமிழர் கூட்டால்.
தமிழ்நாடு தமிழருக்கே தமிழர் சேமம்.
தமிழ்மக்கள் ஒற்றுமையே தமிழர் உள்ளம்;
தமிழ்உள்ளம் எனில்வாழ்வு தழைப்ப தாமே!

# தமிழர் வீரம்

பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவண முதலியார்,
திருச்சி.

'தமிழர் வீரம்' என்னும் இத்தொடர் தமிழர்களின் வீரம் என விரிந்து பண்டைக் காலத்தில் நம் தமிழ்ப்பெரு மக்கள் காட்டிய வீரச் செயல்களை உணர்த்தும் வாயிலாக, நிகழ்காலத்தில் நாம் அடைந்துள்ள பிறபோக்கையும் எதிர்காலத்தில் எவ்வாறு பண்டையநிலையை அடையலாம் என்பதையும் அறிவிக்கும் பொருட்செறிவுடையதாகும்.

## தமிழர் என்பார் யார்?

பரந்த இந்நில உலகத்தில் முதல் முதல் மக்கட் பிறப்பு எடுத்தவர்களால் பேசப்பெற்றதும், அவர்களது முதிர்ந்த அறிவு வளர்ச்சியின் பயனாக வெளிவந்த பலப்பல இலக்கியங்களைக் கொண்டதும், குல்லாவுக்குத் தலை செய்யாமல் தலைக்குக் குல்லாச் செய்தது போன்ற இலக்கணங்களை யுடையதுமாகிய தெய்வச் செந்தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்டு. அத் தாய்மொழிப் பற்றுக் காரணமாக அதற்கு ஏதேனும் இடையூறு நேருமாயின் தம் உயிரைக் கொடுத்தேனும் அவ்விடையூற்றை நீக்கி அம் மொழியைப் பேணுபவர்கள் அனைவரும் தமிழர்களே!

பண்டைக் காலத்தில் இவர்கள் வாழ்ந்த இடம், வடக்கே திருவேங்கட மலையும், தெற்கே (கன்யா)குமரியும், கிழக்கும், மேற்கும் கடல்களும் எல்லையாக உடையது என்பதை,

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"

என ஒல்காப்புகழ்த் தொல்காப்பியரும்,

"வடவேங்கடம் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறும் நல்லுல கத்து"

எனப் பனம்பாரனாரும்,

"வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென் (று)
இந்நான் கெல்லை தமிழது வழக்கே"

எனச் சிகண்டியாசிரியரும்,

"வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்(று)
அந்நான் கெல்லை அகவயிற் கிடந்த
நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்"

எனக் காக்கை பாடினியாரும்,

"வடதிசை மருங்கு வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட்(டு) எஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்கம்"

எனச் சிறு காக்கை பாடினியாரும்.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் படுத்த தண்புனல் நன்னாட்டு"

என இளங்கோவடிகளும் கூறியிருப்பவற்றால் அறியலாம். இத்துணை விரிந்த எல்லையைக் கொண்ட நமது அருமைத்

தாய்நாடாகிய தமிழ்நாடு இப்போது எத்துணைச் சுருங்கி விட்டது என்பதை நினைத்தால் உண்மையான தமிழனின் குருதி கொதிக்காமல் இராது. அச்சுருக்கம் தமிழ்மொழியாகிய நம் தாய்மொழியினிடத்து நாம் வைத்த அன்புச் சுருக்கத்தையே காட்டுகின்றது.

எனவே மேலே காட்டிய எல்லைக்குள்ளிருந்து தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவரும் தமிழராவார் என்பது பெறப்பட்டது.

**வீரம் என்பது யாது?**

இஃது எல்லா மக்களிடத்தும் இயல்பாக அமைந்துள்ள உயிர்க்குணங்களுள் ஒன்று. மற்றப் பிராணிகளிடத்து இது காணப்படுவதாயினும் அஃது அவ்வுயிர்களிடத்து இயல்பாக அமைந்தது; ஆனால் பகுத்தறிவோடு பொருந்தாததாகும். மக்களிடத்துக் காணப்படுவது பகுத்தறிவோடு பொருந்தியதாகும்; பகுத்தறிவற்ற பிராணிகளிடத்து இயல்பாக அமைந்த செயலைப் புலவன் கண்டு அதற்கொரு காரணம் கற்பித்து அதனை ஒரு வீரனுடைய வீரச் செயலுக்கு உவமையாக்குகின்றான் என்பதை அடியில்வரும் நாலடியாரிலுள்ள பாடல் ஒன்றால் அறியலாம். அது,

> "கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
> இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
> வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
> மானம் அழுங்க வரின்"

என்பது. புலி ஒன்றுதான் உண்டு பசியைப் போக்கிக் கொள்ள யானை ஒன்றை அறைந்து வீழ்த்தும். அக்களிறு அக்கொடுவரியின் வலது பக்கத்தில் வீழ்ந்தால் உண்டு

பசி தீருமாம்; அஃதின்றி இடப்பக்கத்தில் வீழ்ந்தால் உண்ணுதொழியும்; இது அப் புலியினிடத்துக் காணப் படும் பரம்பரைப் பழக்கம். பெரியோர்கள் தங்கள் மானம், வீரம் முதலியவற்றை இழத்தலால் தேவலோகப் பதவி கிடைப்பதாயினும் அதனை விரும்பமாட்டார்கள் என்பதற்கு அப்புலியின் செயலை உவமையாக்கினுன் புலவன்.

வீரம் என்பது உள்ளத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு அடங்கிக் கிடக்கும்போது ஒரு குணமாகஇருந்து வெளியே வருகையில் வீரச் செயல் என்னும் பெயரைப் பெறுகிறது. மனத்துக்கண் மாசிலாதவனுய் எல்லா உயிர் கட்கும் நலம் செய்ய வேண்டுமென்று ஒருவன் கருதினுல் அக்கருத்து அறம் என்னும் பெயர் பெற்றுப் பின் அது செயலாக வெளிப்படும்போது 'அறவினை' என்று சொல் லப்படுதல்போல மேலே காட்டிய வீரமும், உள்ளத்தில் அடங்கியிருக்கும் நிலை ஒன்று, வெளிப்படும் நிலை ஒன்று ஆனுல் 'அறவினை' (அறமன்று) காலந்தோறும் மாறுபடும் இயல்புடையது. வீரச்செயல் அவ்வாறு மாறுபடாமல் எக்காலத்தும் ஒரே தன்மையாயுள்ளது. இவ்வீரத்தை எண்வகைச் சுவைகளுள் ஒன்ருக வைத்துப் 'பெருமிதம்' என்ற பெயரால் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலுள் கூறுகின்ருர். அப்பெருமிதம் என்பது கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் நான்கையும் நிலைக்களமா கக் கொண்டு தோன்றும் என்பதை,

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

என்ற சூத்திரத்தால் அவர் பெறவைக்கிருர். அவற்றுள் நாம் இங்குத் 'தறுகண்' அதாவது அஞ்சாமை வாயிலாக வரும் வீரத்தை எடுத்துக்கொள்வோம்.

## முடியுடை வேந்தர் மூவரின் வீரச் செயல்கள்

திருவள்ளுவர் 'கல்வி' என்னும் அதிகாரத்தை அரசர்களுக்குச் சிறப்பும் பயனும் கருதிக் கூறி மற்றவர்களுக்கும் பெறவைத்தாரல்லவா? அதுபோல நாமும் நம் பண்டைத் தமிழர் வீரத்தைத் தமிழ் மன்னர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் வீரச்செயல்களை உணரும் வாயிலாக அறிந்துகொள்வது சால்புடையது.

> ''மண்ணில் வாழ்தரும் மன்னுயிர் கட்கெலாம்
> கண்ணும் ஆவியும் ஆம்பெங் காவலன்''

என மநுநீதி கண்ட சோழ மன்னனைச் சேக்கிழார் பெருமான் தம் தெய்வத் திருவாக்கால் செப்பியருளியது போல உயிர்களனைத்திற்கும் (மக்கட்கு மட்டும் அன்று) கண்ணும் உயிரும் போல இருந்து செங்கோல் நடாத்திய முடியுடை வேந்தர் மூவரும் நீதியையும் வீரத்தையும், கொடையையும் தமது உயிர்போலப் போற்றிவந்தார்கள் என்பதற்கு அவர்கள் அரண்மனை வாயிலில் காலையில் முழங்கிய நீதி முரசும் உச்சிப்போதிற் கொட்டப்பட்ட வீர முரசும், மாலையில் ஒலித்த கொடை முரசுமே போதிய சான்றாகும். அம்மூன்றனுள்ளும் வீரத்தால் வரும் புகழையே அவர்கள் சிறந்ததாகக் கருதினார்கள் என்பதையும், அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு செய்த வீரச் செயல்களையும், அவர் காலத்தில் உடன் இருந்தவர்களாகவும், அவர்கட்குப் பிற்காலத்தில் இருந்தவர்களாகவுமுள்ள நல்லிசைப் புலவர் பெருமக்கள் பலர், ''பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச் செய்யா கூறிக் கிளத்தல் எய்யாதாகின்று எம் சிறு செந்நாவே'' என்னும் ஏக்கழுத்தமுடையவர்களாய்ப் பாடிய பாடல்களிலிருந்து தெள்ளத்தெளிய அறியலாம். இறந்த காலம் என்னும்

பரந்த திரையால் மறைக்கப்பட்ட அவர்களின் வீரச் செயல்கள் முதலியவற்றைப் படம் பிடித்துக் காட்டியது போல அப்புலவர் பெருமக்கள், தங்கள் கவி ஓவியங்களாற் காட்டியிருக்கின்றூர்களாதலால், அப்பாடல்களைக் கொண்டு அறிவோமாக.

## பாண்டிய மன்னனின் பரிசுத்த வீரம்!

முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்கள் நிறுவிப் பண்டைக் காலத்துக் கயற்கொடி கொண்ட தென்னர்குல மன்னர்கள் "என்றுமுள தமிழை" வளர்த்ததும், அப் பரம்பரை இயல்பு அழியாமல், தமிழ்நாடு செய்த தவப் பயனாய்த் தோன்றிக் காலஞ்சென்ற பாண்டித்துரைத் தேவர்களாலே தோற்றுவிக்கப்பெற்று இன்றும் வளர்ந்து விளங்கும் சங்கமிருப்பதுமான இம்மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னரின் வீரச்செயலை முதலில் அறிதல் பொருத்தமுடையதல்லவா?

இம்மன்னர்கள், தம்மோடு மாறுகொண்டு அமர் செய்யும் மாற்றுரை வென்று, அவர்கள் ஆண்மையை அழித்துப் பெண் தன்மையுடையவர்களாக அவர்களை மதித்து, அவர்கள் விளையாடுவதற்குப் பாவையும் பந்தும் கொடுப்போம் என்பதற்கு அறிகுறியாகத் தங்கள் அரண்மனை முகப்பில் பாவையும், பந்தும் கட்டித் தொங்க விட்டிருக்கும் செய்தியைக் கல்வி வீரராகிய நக்கீரர் பாடியருளிய,

"செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடல்"

என்னும் திருமுருகாற்றுப்படை அடிகளால் அறியலாம். மேலும் அவர்கள் வடநாடு சென்று அங்குள்ள ஆரிய மன்னர்கள் பலரையும் வென்றுவந்தார்கள் என்பதை,

"வட ஆரியர் படைகடந்து, தென் தமிழ்நாடொருங்கு காணப், புரைதீர் கற்பிற் றேவிதன்னுடன் அரசு கட்டி விற்றுஞ்சிய பாண்டியன்"

என்பதால் அறிகிறோம். அவர்களின் தூயவீரத்திற்கு மற்றுமோர் அழகிய சான்றைக் காண்போம்.

விதர்ப்பநாட்டு வேந்தன் மகளாகிய தமயந்தி என்பாள் நளனுக்கு மணமாலை சூட்டியபோழ்து, அவளை மணம் செய்துகொள்ளும் விருப்பத்துடன் அங்கு வேற்றுருக்கொண்டுவந்திருந்த தேவேந்திரன் அழுக்காறு காரணமாக அங்குக் குழுமியிருந்த அரசர்களைநோக்கித் "தானும் ஒளியுடையதாய்ச், சந்திரனுக்கும் ஒளிதருவதாயுள்ள பகலவன் குலத்திலே தோன்றிய நீவிர் அனைவரும் இத் திங்கட்குலத்திலே தோன்றிய நளனுக்கு மாலை சூட்டுவதைக் கண்டு சும்மா இருக்கின்றீர்களே! உங்கட்கு மான உணர்வு சிறிதும் இல்லையா?" என்று கூறிக் கலகத்தைத் தூட்ட, அதனைக் கேட்ட பாண்டிய மன்னன் சந்திர குலத்தவனாதலால் தனது குலத்தை இழித்துக் கூறிய அவன் தலையைத் துண்டிக்கிறேன் என்று வாளை உருவிய செய்தியும், அங்குள்ளவர்களால் அவன் இந்திரன் என்றறிந்து, உடனே நாணமுற்று, 'நம் முன்னோர்களால் பண்டு மகுட பங்கம் செய்யப்பட்ட இந்தப் பேடியின் தலையை அறுத்தல், எங்கள் பரம்பரை வீரத்திற்கே இழுக்கைத் தருவதல்லவா?" என்று கருதி உருவிய ஒள்வாளினை உறையிற் செறித்துச் சென்றான் என்பதை,

"என்றலுங் கடவுட் டிங்கள் இருங்குலம் இழித்துக் கூறல்
நன்று நன்றென்ன நக்குநாமவேல் வழுதி சீறி
உன்தலை துணிப்பன் என்னு ஒளிறுவாள் உறையி னீக்கிக்
குன்றெறிவயிர ஒள்வாட் குரிசின்மேற் கனன்று சென்றான்"

"வெகுளனை அணங்கிற் காக நளனுருக் கொண்டு மேய
அகல்விசும் பளிக்கும் வேந்தன் இவனென அமரர் கூறத்
துகளெழ மௌலி பண்டு தோற்றவன் தன்னோ டென்கொல்
இகலெனப் புகையும் ஒள்வாள் உறைசெறித் தேகினனே"

எனவரும் நைடதச் செய்யுள் அறிவிக்கின்றன.

## சோழ மன்னரின் சொல்லரும் வீரம்

"பரணிக்கோர் சயங்கொண்டார்" எனப் புலவர் பெருமக்களால் பாராட்டப்பெற்றவரும், தன்மை நவிற் சியே பாடும் தகுதியுடையோருமாகிய கவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டார். கலிங்கத்துப்பரணி என்னும் நூல் பாடினார். பரணி என்பது ஒரு வீரன் போர்க்களத்தில் ஒரே காலத்தில் ஆயிரம் களிறுகளைக் கொன்று குவித்தா னுகில் அவன் மீது பாடப்பெறுவது. மேலே காட்டிய பனுவல் இற்றைக்கு 800 ஆண்டுகட்கு முன் கருணாகரத் தொண்டைமானைப் படைத் தலைவனாகக் கொண்டு கலிங்கத்தை அழித்த முதற் குலோத்துங்கன் மீது பாடப் பெற்றதாகும். இச்செய்தி அவனது அளப்பரும் வீரத்தை உணர்த்துகின்றது.

மேலும் விக்கிரம சோழனுலாவில், "பற்றலரை வெப் பத்தடுகளத்தில், வேழங்களாயிரமும், கொப்பத் தொரு களிற்றாற் கொண்டோனும்" எனவும், சங்கர சோழ

னுலாவில் "புண்ணூறு தன் திருமேனியிற் பூணுகத் தொண்ணூறும் ஆறும் சுமந்தோனும்" எனவும் வரும் அடிகளால் அவர்களின் வேழப் போர்த் திறமும், தொண்ணூற்ருறு விழுப்புண்களை முகத்தினும், மார்பினும் கொண்டு அமர்க்களத்தில் சலியாது நின்று செய்த வெம்போர்த் திறமும் கண்டு களிப்புறுவோமாக.

கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழ மன்னன் தமிழ் எல்லையுள் தன்னேடு எதிர்த்து நின்று போர்புரியவர் யாருமில்லையாதலால், 'வடநாட்டு ஆரிய அரசர்களுள் யாரேனும் எதிர்த்து வந்தாலும் என் போராசை தீருமே' என்று கருதித் தன் படையோடு அந்நாட்டிற் செல்ல, அங்குள்ள அரசர்கள் பலரும் அஞ்சித் திறையாக முத்துப்பந்தர் முதலியவற்றைக் கொடுத்து வணங்க அவற்றைப் பெற்று மீண்டான் என்னும் செய்தி சேர நாட்டு இளங்கோ அடிகளாற் பாடப்பெற்ற முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் உள்ள,

"இருநில மருங்கிற் பொருநரைப் பெருஅச்
செருவெங் காதலின் திருமா வளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கில்என் வலிகெழு தோள்எனப்
புண்ணியத் திசைமுகம் போகிய அந்நாள்
..........................................................
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்

அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்''

என்னும் அடிகளால் அறியக்கிடக்கின்றது.

மேலும் அவர்கள் வடநாட்டு மன்னர்கள் அனைவரையும் வென்று தமது புலிக் கொடியை இமய மலையில் உச்சியிற் பொறித்து வைத்துள்ளார்கள் என்பது ''இமயவர் உறையும் சிமயப்பிடர்த் தலைக்கொடுவரி ஏற்றி'' என்ற சிலப்பதிகார அடிகளாலும்

'செண்டு கொண்டு கரிகாலன் ஒருகாலில் இமயச் சிமய மால் வரை திரித்தருளி மீள அதனைப் பண்டு நின்றபடி நிற்க அதுவென்று முதுகிற் பாய்புலிப் பொறிகுறித்தது மறித்த பொழுதே'' என்னும் கலிங்கத்துப் பரணிப் பாடலாலும் புலனாகின்றது.

### சேர மன்னரின் செப்பரும் வீரம்

சேரன் செங்குட்டுவன், கண்ணகி என்னும் கற்புக் கடம் பூண்ட தெய்வத்திற்குச் சிலை செய்யும் பொருட்டு வடபால் சென்று தமிழரசர்களை இகழ்ந்துகூறிய கனகன், விசயன் முதலியோரை வென்று பனி மலையிற் கல்லெடுத்துக் கங்கைப்பேரியாற்றில் அக்கல்லைத் தூய்மைப்படுத்தி அக் கனகவிசயர் தலையிலே அக்கல்லைக் கொணர்ந்து, பத்தினிப் படிமம் செய்து கோட்டம் எடுப்பித்து அப் படிமத்தை அதன்கண் எழுந்தருளச் செய்து வழிபட்ட செய்தி சிலப்பதிகாரத்தால் அறியக் கிடக்கின்றது.

இவ்வீரச் செயலைச் சேரன் தம்பி இசைத்த சிலம்பால் அறியலாம்.

'வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண் டல்லது

வறிது மீளுமென் வாய்வாள் ஆகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுங்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலேன் ஆக''

என்று வஞ்சினம் கூறி.

'பகைப்புலம் புக்குப் பாசறை யிருந்த
தகைப்பரும் தானை மறவோன் தன்முன்
உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்—
சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவர் எல்லாம்
தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசயர்
நிலந்திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர
இரைதேர் வேட்டத் தெழுந்த அரிமாக்
கரிமாப் பெருநிரை கண்டுளம் சிறந்து
பாய்ந்த பண்பிற் பல்வேல் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப''

என்னும் சிலப்பதிகார அடிகளும்,

''பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
.................................. ...........
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றங் கொண்டிச் சேனை செல்வது''

என்னும் அடிகளும் எத்தகைய வீர உள்ளத்திலிருந்து வெளிவந்திருக்குமென்பது உணர்வுடன் ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகாது போகாது.

இன்னும் பெருஞ்சேரலாதன் என்பவன் கரிகாற் சோழன் என்பவனோடு எதிர்த்து வெண்ணிப் பறந்தலை என்னும் இடத்துப் போர் புரிந்தகாலை அச்சோழன் எய்த கூரிய அம்பொன்று சேரனுடைய மார்பிற்பட்டு முதுகின் வழியே சென்றது. 'அம்முதுகுப் புண்ணும் புறப்புண்தானே! இவ்விழிசெயலுக்கு ஆளான யான் உயிரோடு வாழ்தல் தகாதென'க் கருதி வடக்கிருந்து உயிர் நீத்த செய்தி அம் மன்னனது மானத்தோடு கூடிய வீரச் செயலைக் காட்டுகின்றது.

இங்ஙனம் காட்டியவற்றைத் தாலிபுலாக நியாயமாகக் கொண்டு, மற்றும் அவர்களின் வீரச் செயல்களின் பரப்பை நமது பண்டைய இலக்கியங்களிற் காண்க.

இவ்வீரச் செயல்களுக்குக் காரணமாயிருந்தவர்கள் நம் தண் தமிழ்நாட்டின் தாய்மார்கள் என்று சொல்லின் அது மிகையாகாது. "நரம்பெழுந்துலறிய" எனவும், "கெடுக சிந்தை" எனவும் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்களாலும் அவை போன்ற பிற பாடல்களாலும் நம் குடிமகளிரின் வீரம் அறியக்கிடக்கின்றது.

எனவே அப்பெண்களின் கருவிலிருந்து வெளிவந்த தமிழருக்கு அவ்வீரம் இகலையாயின் வியத்தற்குரியது இருத்தல் இயல்பு.

## இற்றைய நிலை

இத்துணைச் சிறந்த தமிழர்களின் பரம்பரையில்வந்த நமது இற்றையநிலை என்னவென்று சிந்தித்தால் வெட்கித் தலைகுனிய வேண்டாவோ? இவ் வீழ்ச்சிக்குக் காரணம் பலவாயினும், அவற்றுள் தலைசிறந்து நிற்பது மொழிப் பற்றின்மையே. பிறநாட்டு நாகரிகத்தில் ஈடுபட்டுப் பிற

மொழி மோகத்தில் தலைசிறந்து தம் தாய்மொழியைப் புறக்கணித்து இகழ்ந்த செயலில் தமிழருக்கு இணையானவர் யாரும் இல்லையென்றே அறுதியிட்டுச் சொல்லலாம்.

இருபது ஆண்டுகட்குமுன் பெரிய ஆங்கிலப் பட்டதாரிகளாக உள்ள நம் தமிழர்கள் மேடைகளிற் பேச நேர்ந்தால், தமக்குத் தமிழிற் பேசியே பழக்கமில்லையென்றும், தாம் படித்த காலத்துத் தமிழ் வகுப்பை அவமதித்த விதத்தையும், தமிழாசிரியர்களைத் தாம் படுத்திய பாட்டையும் விரித்துக் கூறிவிட்டுப் பின் ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்ட பழைய அன்பர்களின் காதில் அவை இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கலாம்.

அப்படி அவர்கள் பேசுவதற்கு அடிப்படை, தம்மை ஓர் ஆங்கில மேதை என்று கருதிப் பிறர் பாராட்ட வேண்டுமென்பதே!

சில ஆண்டுகளுக்கு முன்னும், ஏன்? தமிழ் மறுமலர்ச்சிக் காலம்' என்று சொல்லிக்கொள்ளும் இந்நாளிலும் கூட, கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் அறைகளிற் சென்று பார்த்தால் மலையாள மாணவர்கள் இருக்கும் அறையில் அவர்கள் தாய்மொழியிலேயே பேசுவார்கள். தெலுங்கு மாணவர்களும் அப்படியே. ஆனால் நம் தமிழ் மாணவர்கள் மட்டும் ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள்.

நாட்டின் விடுதலை இயக்கம் தோன்றிய பிறகுதான் மேடைகளிலே தமிழிலே பேசத்தொடங்கினார்கள். அதுவும் பாமர மக்கள் அறிந்துகொள்ள வேண்டுமே என்ற கருத்தினாலேயன்றி மொழிப் பற்றினால் அன்று.

மொழிப் பற்றுக் குறையாத காலத்தில் தமிழர்களிடத்தில் இயல்பாக அமைந்துள்ள பண்பாடு ஒன்றும் அவர்களின் உலகியல் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது என்று கூறினால் அது மிகையாகாது. அஃது என்ன? வெளிநாடுகளில் உண்டான கலகம் காரணமாக ஓடிவந்து தஞ்சம் புகுந்தவர்களை ஏற்று அளவுக்கு மீறிய ஆதரவு அளித்து அவர்கட்கு 'மாப்பிள்ளை' என்ற முறைப் பெயரும் சூட்டிக் காப்பாற்றியது. "ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக் கோட்டக்க துடைத்து" என்னும் பொய்யாமொழி பொய்க்காதபடி 'ஓண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டியது' என்ற பழமொழிப்படி நாம் விற்கப்படுபவர்களாகவும் ஓட்டப் படுபவர்களாகவும் ஆகிவிட்டோம்.

## எதிர்காலம்

'ஒரு மொழி வைத்து உலகாண்ட' நமது பழைய காலத்தை இனி நாம் கனவிற்கூடக் காணமுடியாது. பல மாறுதல்கள் ஏற்பட்டதே அதற்குக் காரணம். எனினும் அதனை நினைந்து சோம்பியிராமல் பண்டைத் தமிழர்களின் மொழிப் பற்றையும் அவர்களின் வீர உணர்வையும் கொண்டு வீறிட்டு எழுவோமானால் தமிழ்ச் சமுதாயமும் ஒரு சிறந்த சமுதாயந்தான் என மற்றவர்கள் மதிக்கும் நிலையைப் பெறலாம் என்பது முக்காலும் உறுதி.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி" எனப் பெருமக்களால் பாராட்டப் பட்ட நம் முன்னோர்கள் தம் வாழ்க்கையின் அனுபவப் பயனாகக் கண்ட கடவுட் கொள்கையும் புறக்கணிக்கப்படு வது அன்று. தமிழ் எழுத்துக்கட்குப் பெயர் இடுவதற்கு முன்பே தத்துவ ஞானம் கைவரப்பெற்றவராக இருந்

தார்களென்பதற்கு எந்த மொழியாளரும் கையாளாத காரணப்பெயராக உயிர் எழுத்து என்றும், மெய் எழுத்து என்றும் பெயரிட்டதே தக்க சான்றாகும். எனவே, கடவுட் பற்று இல்லாத மொழிப் பற்று முதலியன உயிரற்ற உடலை நிகர்க்கும்.

புறக் கருவியாகிய போர்க் கருவிகள் பலவற்றைக் கொண்டு புறப் பகைவர்கள் பலரைக் கொன்று குவித்த ஒருவன் வீரத்தைவிட, கடவுட் கொள்கை, பொய்யாமை முதலிய அகக் கருவிகளால் உள்ளத்தே நிகழும் தீய சக்திகளாகிய பகைவர்களை ஒழித்த ஞானிகள் வீரம் சிறந்தது என நம் முன்னோர்கள் பனுவல்கள் பலவற்றுள் கூறியிருப்பது சிந்தித்தற்குரியது.

எனவே. நம் வீழ்ச்சிக்குரிய காரணங்களை ஐயம் திரிபற அறிந்து அவற்றை நீக்கி உயர்நிலையடையுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

வாழ்க தமிழர் வீரம்! வாழ்க தமிழர்! வாழ்க தமிழ் நாடு!

# தமிழ் இலக்கண வளர்ச்சி

ஆசிரியர் திரு. நா. அப்பனையங்கார்,
தமிழ்ச் சங்கம், மதுரை.

தமிழ் மொழியை, தெய்வத் தமிழ், கன்னித் தமிழ், என்றுமுள தென்றமிழ் என்றெல்லாம் நாம் போற்றுகிறோம். இதனால் தேர்ந்தது என்ன? தமிழின் பழமையும், பெருமையும் மக்கள் அறிவால் அளவிட அரியன என்பதே.

என்றுமுள்ளது, அழிவில்லாதது தமிழ் என்றால், அதன் சிறப்பியல்பான இலக்கணமும் என்றுமுள்ளது, அழிவில்லாதது ஆகவேண்டும். இயல்பு, பண்பு, அழகு, இலக்கணம் என்பன ஒரு பொருள் சொற்கள். தமிழுக்குரிய தனிச் சிறப்பான பண்புகளே தமிழிலக்கணம். ஆகையால் அதற்கு வளர்தலும் குன்றுதலும் இல்லை; என்றும் ஒரு தன்மையதாகவே நின்றுநிலவும். ஒரு காலத்தில் வளரும் பொருள் எல்லாம் மற்றொரு காலத்தில் மறைந்து கெடுவது உலக இயற்கை. ஆகவே, இலக்கணம் பயில்வோரும், அதனை உணர்த்திய நூல்களும் எண்ணிக்கையால் குறையினும் குறைபடும்; அன்றி, கன்னித் தமிழ் தன் என்றும் மாறா இயலுடன் மன்னித் திகழுமென்பது ஒருசார் கருத்து.

இவ்வாற்றால் இலக்கணக் கலையும், எண்ணுக் கலையும் ஒரு தன்மைய என்னலாம். எண்ணுக் கலையாவது கணித நூல். தமிழ்க் கணிதமும், அதனைப் பயிலும் தமிழ் முறை

யான வழிகளும் இக்காலத்தில் இறந்தன. ஆயினும் அக் கலைக்குக் கேடில்லை. அது போலவே தமிழிலக்கணமும் பயில்வோர் குறையால் வழக்கழியினும், தனக்குக் கேடில தாம் என்பது வெளிப்படை.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என்ற திருவள்ளுவர் வாக்கில் இவ்விரு கலைகளும் சேரப் பயின்றுள்ளன. இதில் எண் என்றது கணிதத்தை. எழுத் தென்றது எழுத்தும் அதனோடு ஒற்றுமையுடைய சொல் லுமாகிய இயற்றமிழ் இலக்கணத்தை. இந்த இரண்டும் அறம் முதலான உறுதிப் பொருளை அடைவார்க்கு இன்றி யமையாத கருவிகளாம் என்று ஆன்றோரால் போற்றப் படுகின்றன. இதனுண்மையை,

''அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ எண்ணிறந்தால் செப்பு''

''எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்—
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதுநூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்''

என இவ்வாறு வரும் நூற் சான்றுகளால் நன்கு வலி யுறும். இது நிற்க.

மற்றொரு சாரான கருத்தும் இங்கு மனங்கொள்ளற் குரியது. இயற்கையாய் அமைந்த இலக்கண வரம்பில் லாத ஏனைப் புதுமொழிகளெல்லாம் நாள்தோறும் வளர் வதுபோல, நமது தாய்மொழியும் ''வளரும் தமிழ்'' எனவே கொள்ளப்படுமெனின், அப்போது அதன் இலக்கணமும் வளர்ச்சியுடையதே என்று சொல்வதில்

சிறிதும் தடையில்லை. ஆதலால், "தமிழ் இலக்கண வளர்ச்சி' என்ற இத்தலைப்புப் பெயரும் இவ்வாற்றால் இங்குப் பொருந்துவதே என்னலாம்.

அறிவின் எல்லையைக் கடந்து அப்பாற்பட்ட பன்னெடுங் காலத்திற்கு முன்னர், முதன்முதல் சொல் இலக்கணமே தோன்றியது; அதன் பின்னர் நெடுங்காலம் சென்று எழுத்திலக்கணம் தோன்றி வளர்ந்தது; என்று இவ்வாறு நிலவும் ஆன்றோர் வழக்கும் உண்டு. நேமிநாத உரை சொல்லதிகாரத் தொடக்கத்தில் இங்ஙனம் கூறும்: "போக பூமியான காலத்து, எழுத்து இன்றிக் கன்ம பூமியான காலத்து எழுத்துத் தோன்றின; இத்துணையல்லது சொல்போல எக்காலத்தும் தொடர்ந்து வாராத எழுத்தினை முன் வைத்தல் பிழை; சொல்லையே முன்வைக்கற்பாலது எனின், அற்றன்று. எழுத்தாலே வந்தது சொல் ஆதலால் ஆக்குவதனை முன் உணர்த்தி அதனால் ஆயதனைப் பின்னுணர்த்தினால் பிழையின்று; மரபு என்க; இஃது எழுத்ததிகாரத்தோடு அடைவு" என்ற இவ்வுரை ஆராய்ச்சிக்குரியது. இலக்கண வளர்ச்சிக்கு முதன்முதல் அடியிட்டபடி இது என்று சொன்னால் மிகவும் பொருந்தும். இஃது ஏதோவொரு பண்டை ஊழியின் நிகழ்ச்சி என்ன வேண்டும். இது நிற்க.

நமக்குத் தெரிய, தமிழ் வரலாற்றின் மிகவும் முற்பட்ட காலத்திலேயே "முத்தமிழ்" என்ற உருவத்தில் இலக்கண வளர்ச்சி முற்றி முதிர்ந்து நிரம்பி நின்றது. இயல், இசை, நாடகக் கலை நூல்கள் அக்காலம் செழித்தோங்கி வளர்ந்து சிறந்து விளங்கின. இதன் உண்மையை விளக்கத் தொல்காப்பியத்தில் பற்பல சான்றுகள் உள்ளன. நூலுக்கும், நூற்பா முதலிய நூலுறுப்புக்களுக்கும் தொல்காப்பியம் நன்றாக இலக்கணம் வரைந்தது இவ்

விலக்கணத்திற்கு இலக்கியம் முன்னைய இலக்கண நூல்களேயன்றி வேறில்லை என்பது சொல்லவும் வேண்டுமோ? அன்றியும் புலவர், புலனுணர்ந்தோர், உணர்ந்திசினோர், நுண்ணிதினுணர்ந்தோர், நேரிதின் உணர்ந்தோர் எனப் பலவாறுபோற்றி. முன்னூலாசிரியர் எத்துணையோ பலர் இருந்ததை அந்நூல் தெளிவாகக் குறித்துச் சென்றது

இவை எல்லாம் ஒருபுறமிருக்கத் தொல்காப்பியத்திற்கு முதனூல் செய்தார் அகத்தியர்; அந்நூலில் அவர் முத்தமிழுக்கும் இலக்கணம் வழிப்படுத்தார் என்று சொல்லப்படுவது உண்டு. இங்கு வழிப்படுத்தார் என்றது நெறிமுறை கண்டு ஒழுங்கு செய்தார் என்பதையே குறிக்கும். அன்றி அவரே தமிழை முதலில் உண்டாக்கினார் என்பதாகாது. அவரும் ஒரு முந்து நூலினைச் சிவபிரானிடம் ஓதியுணர்ந்தார் என மேற்கோளொன்று நமக்கு விளக்கா நின்றது.

''ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்''

என்ற பழைய செய்யுள் பகுதியே அது. இதுவேயன்றி, ''பாரதம்'' என்ற நாடகத் தமிழ் இலக்கண நூல் ஒன்று அகத்தியத்திற்கு முன்பே இருந்ததாக அடியார்க்குநல்லார் உரையால் நாம் அறிகின்றோம். அந்த முன்னூல்களெல்லாம் இப்போது அழிந்துபோயின. அவற்றோடு அகத்திய நூலும் வழக்கில் இல்லாமல் மறைந்துவிட்டது. அதனால் அகத்தியனாரையும், அவர் நூலினையும் பற்றி இன்று சிலர்க்கு ஐயம் எழுகின்றது. அகத்தியர் என்ற ஆசிரியர் தமிழ்நாட்டில் இருந்தனரா? அகத்தியம் என்ற தமிழ் நூல் இயற்றியதுண்டா? என்றெல்லாம் நம்மவர் ஆராய்ச்சி நிகழ்த்துகின்றனர். சாதி மதக் கொள்கை

களால் ஒருவரோடொருவர் மாறுபட்ட சைன, பௌத்த, சைவ, வைணவ சமய ஆசிரியரும் பிறருமாகிய பேரறிவாளர் அனைவரும் ஒன்றுபட்டு அகத்திய நூலின் உண்மையில் உடன்பாடு கொள்ளக் காண்கிறோம். ஆதலால் அருந்தமிழ்ச் சான்றோராகிய நம் முன்னோர்க்கு அறியாமை ஏற்றிக் குற்றங்கூறும் இக்கொடிய பழக்கம் நம்மிடை அறவே நீங்குதல் நன்று. இது நிற்க.

அகத்தியர் அருளிய முத்தமிழ் இலக்கணம் ஒன்றாய் நின்ற பெற்றி நீங்க, அவருடைய மாணாக்கர் அதனைப் பலவாய் விரியப் பாகுபடுத்தினர். ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு புலவரால் அகன்று பரந்தது. அவர்க்குப் பின் வந்த ஆசிரியர்களாலும் நூல்கள் பெருகி வளர்ந்தமை மிகவும் வெளிப்படை. தொல்காப்பிய உரைகளும், யாப்பருங்கல விருத்தியும் இதனை நன்கு புலப்படுத்தும்.

இவ்வளர்ச்சி கடைச்சங்க காலம் வரை நீண்டு நிலைபெற்ற தென்னலாம். "முத்தமிழ்க் காப்பியம்" என்ற பாராட்டுக்குரிய சிலப்பதிகார மூலத்தாலும் உரையாலும் விளங்கிக்கிடந்த மெய்ம்மை இது.

இளங்கோ அடிகளுக்குப் பிறகு நெடுங்காலம் செல்ல, அடியார்க்குநல்லார் காலத்தில் இசை நாடகத் தமிழின் வீழ்ச்சியைக் காண்கிறோம். "பரதம், அகத்தியம் முதலிய தொன்னூல்களும் இறந்தன; பின்னும், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நடக்கின்றன அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும்!" என்ற அவருரை அவலம் நிரம்பியுள்ளது.

இசை நாடகப் பகுதியைச் சார்ந்தனவாய் அவர் பெயர் கூறிய நூல்கள் இன்னும் பல உள. அவை இசை

நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனுபதியம், பெருநாரை, பெருங்குருகு என்பனவும் பிறவுமாம். அவற்றுள் இறந்தனபோக அவர் நாளில் எஞ்சிநின்றன சிலவும்கூட இந்நாள் மறைந்தொழிந்தன என்றால் இதற்கு மனம் வருந்தாதார் யாவர்?

இங்ஙனம் இசைநாடகத் தமிழ்க்கலை வளர்ச்சி நீங்கித் தளர்ச்சியுற்ற தென்றாலும், இயற்றமிழ் இலக்கண நிலை நமக்குச் சிறிது ஆறுதலளிக்க வல்லதாம். இப்பகுதியில் தன்னிகரில்லாத் தனிப்பெருநூல் தொல்காப்பியம். முன்னூல்கள் ஒழியவும் தான் அழியாமல் நின்றது; பின்னூல்கள் பெருகவும் தான் அருகாமல் நிற்பது; இவ்விருவகை மேம்பாடும் இஃது ஒன்றற்கே உரியதாம் அன்றி வேறு எந்த நூலுக்கும் வாய்த்ததில்லை. இவ்வாற்றால் இது முழுதும் பழுதற்றது என்று சொல்லின் மிகப் பொருந்தும்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பிரிவுகளுடையது இந்நூல். ஒவ்வொரு பிரிவிலும் உணர்த்தும் பொருள்கள் கடல்போற் பரந்து கரை காண அரியன. அதனால் 'தொல்காப்பியக் கடல்'' என்றே இதனை ஆன்றோர் வழங்கினர். இதன் பொருள்வளம் எல்லாம் புலங்கொளத் தெரிந்து உலகுக்களிக்க முன்வந்த உரையாசிரியர் பலராவர். அவர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் எனப் பெயர் வாய்ந்து விளங்குவர். தமிழில் வேறு எந்த நூலுக்கும் இத்தனை நல்லாசிரியர்கள் உரை எழுதினரல்லர். இவ்வுரையாளர் எல்லோரும் தமிழ் வழக்கிற்குத் தலையாய சான்று இந்நூல் ஒன்றே எனக்கொண்டனர். ஏனை நூல் உரையாசிரியர்களுக்கும்கூட இக்கொள்கை

ஒப்ப முடிந்ததே. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் ஒன்றே முற்ற முடிந்த இலக்கண நூல்; ஏனை நன்னூல், சின்னூல் என்பன நிரம்பிய இலக்கணத்தன அல்லஎன்று வெளிப்படையாக விளம்பிவிட்டார்.

இங்கே சின்னூல் என்றது சிறிய நூலான நேமிநாதத்தை. எழுத்தும் சொல்லுமாகிய இரண்டின் இலக்கணம் மட்டும் கூறும் இது எளிய இனிய வெண்பாக்களாலாகியது. இதில் நூற்பா முறையைவிட்டு வெண்பா முறையைக் கொண்டதற்கு, இலக்கண வரலாற்றில் சிறியதொரு வளர்ச்சியே நோக்கம் எனின் இழுக்காகாது. இந்நூலுக்கு "வயிரமேக விருத்தி" எனச் சிறந்ததொரு உரையுமுண்டு.

"தொல்காப்பியக் கடலின் சொல்தீபச் சுற்று அளக்கப்
பல்காற்கொண் டோடும் படகென்ப"

என இதனைப் பாராட்டிய சான்றோர் தொல்காப்பியச் சிறப்பையும் சேர்த்தே சொல்லியுள்ளார்.

இவ்வாறே நன்னூலின் சிறப்பைப் பாராட்டிய சான்றோரும்,

"முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும்
நன்னூ லார்தமக் கென்னூ லாரும்
இணையோ என்னும் துணிவே மன்னுக"

எனத் தொல்காப்பியப் பெருமையும் சேரக் கூறினர். இது போல இன்னும் பல எடுத்துக்காட்ட இயலும். சுருங்கச் சொல்லின் பிற்காலத்தில் தோன்றின பிற நூல்கள் அத்தனையும் தொல்காப்பியத்துடன் தொடர்புகொண்டே பெருமை பெறவேண்டி நின்றன. இது நிற்க.

நன்னூலில் "பதவியல்" என்ற ஒரு பகுதி உண்டு. அஃது ஒரு மொழி முடிபு கூறும் இலக்கணத்தது. தனி மொழிகளை எடுத்துக்கொண்டு அவற்றைப் பகுதி, விகுதி முதலான உறுப்புக்களாகப் பிரித்து ஆராயும் இடம் அது. இவ்விலக்கணம் தொல்காப்பியத்தில் விவரமாகக் காணப் பெறவில்லை. ஆனாலும் உரையாசிரியர்கள் சிறிது விவரித்தனர். அவரைப் பின்பற்றி நன்னூலாரும் இப்பதவியலை விரித்தமைத்தார். இஃது ஒரு நிலையாய இலக்கண வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டதே ஒழிய வேறில்லை. இது போலவே இன்னும் சில இடங்களிலும் நன்னூல் விரித்துரைத்ததுண்டு. இது நிற்க.

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரத்திலும் முன்னைய இரண்டை மட்டும் பிரித்துக் கூறிய நூல்களிவை. மூன்றாவதான பொருளதிகாரத்தில் அகப்பொருளை மட்டும் பிரித்து வேறாக விளக்கியது அகப்பொருள் விளக்கம் என்னும் அரிய நூல். இது நாற்கவிராசநம்பி என்பவரால் செய்யப்பெற்றது; "நம்பியகப் பொருள்" எனவும் மறுபெயர் வழங்குவது. இது நிற்க.

முன்னாளில் எழுத்து, சொல், பொருள் என மூன்றாய் அடங்கிய இயற்றமிழ் இலக்கணம், பின்னாளில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாய்ப் பெருகி அகன்று, பரந்தது. இவ்வளர்ச்சி இலக்கண வரலாற்றிலேயே மிகவும் முதன்மை வாய்ந்ததென மொழியும் தரத்தது.

இந்த ஐந்திலக்கணங்களையும் தனியே தொகுத்து ஒன்றாய் உணர்த்திய முழு நூல்களுள் பழமையானது வீரசோழியம். இதனை இயற்றினார் புத்தமித்திரனார் என்னும் புலவர் பெருந்தகை. இந்நூல் நூற்பாவாலன்றி,

கட்டளைக்கலிப்பாவாலியன்றது. வடமொழிக்கும், தென் மொழிக்கும் ஒத்த இலக்கணமாக உணரத்தகும் பகுதிகள் இதில் பல உள. இவையெல்லாம் புதிய வழியில் புகுந்த இலக்கண வளர்ச்சி என்னலாம்.

இனி இதே முறையில் ஐந்திலக்கணமும் அமைந்த இரண்டாவது நூல் இலக்கண விளக்கம் என்பது இது திருவாரூர் வைத்தியநாத தேசிகர் செய்தது: "குட்டித் தொல்காப்பியம்" எனவும் வழங்கும் இந்நூலேயன்றி, வேற்று நாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர் என்பவரால் செய்யப்பட்ட 'தொன்னூல்' என்பதும், முத்துவீர ஆச்சாரி என்பவரால் செய்யப்பட்ட 'முத்துவீரியம்' என்பதும் ஐந்திலக்கணமும் அமைந்தவைகளே. இவை மிகவும் பிற்காலத்தில் பிறந்தன.

இனி, நம்பியகப் பொருளுக்கும் முன்பே அகப் பொருளை மட்டும் உரைத்த பழைய பெருமை வாய்ந்த நூல் 'இறையனார் அகப்பொருள்' எனப்படும். இதற்குத் தெய்வப் பெருமை சாற்றிப்புகழும் புராண வரலாறும் உண்டு. களவியலைச் சிறப்பாக விரிப்பதாகையால் 'இறையனார் களவியல்' என இதற்குப் பெயர் கூறுவர். களவியல் என்ற பெயருக்கு வேறு வகையாகவும் காரணம் விரித்தது இதன் உரை. இந்நல்லுரை கண்டார் நக்கீரனார் என்பர். தமிழ் உரைநடை புதிய வழியில் வளர்ந்து வளம் பெறுவதற்கு அடிப்படை உதவியளித்தது இவ்வுரையே என்னில் மிகையாகாது.

இன்னும் பிற்காலத்தில் எழுந்த "மாறனகப் பொருள்" என்னும் நூலும் இவ்வகையைச் சார்ந்ததே. நம்மாழ்வாரிடம் அன்பும் அடிமையும் பூண்ட திருக் குருகைப் பெருமாள் கவிராயர் என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றது இது.

இவை ஒருபுறம் நிற்க; புறப் பொருள் பகுதியில் பன்னிருபடலம் என்னும் பழைய நூல் தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவராலும் இயற்றப்பெற்றதென்பர். அஃது இக்காலத்து வழங்கவில்லை. தொல்காப்பியர் ஏழு திணையாக வகுத்த புறப்பொருளைப் பன்னிருதிணை எனப் பாகுபடுத்திய இலக்கண வளர்ச்சி இதன்பாலுள்ளது. "புறப்பொருள் வெண்பாமாலை" இதன் வழி நூலாகும். தொல்காப்பியத்தினின்று இவற்றிற் காணும் வேறுபாடுகள், சொல் முடிபும் பொருள் முடிவும் மாறுபடாதன வாகையால் மரபுநிலை திரியாதன என்று ஆன்றோர் அமைதி கூறியுள்ளனர்.

இனி யாப்பிலக்கணத்தை மட்டும் தெளிவாக விரிப்பன யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையுமாகும். இவை இரண்டையும் இயற்றியவர் 'அமுத சாகரர்' என்னும் ஆசிரியர் ஒருவரே. இவற்றுள் முன்னது நூற்பாவால் இயன்றது; பின்னது கட்டளைக்கலியால் அமைந்தது. இக்கலிப்பாக்களில் மகடூஉ முன்னிலை பயின்றன. இம்முறை 'குணகாங்கியம்' என்னும் கன்னட யாப்பிலக்கண நூல்வழியைத் தழுவியதென்று காரிகைஉரை காட்டாநின்றது. இதுவும் ஒரு புதிய சிறிய இலக்கண வளர்ச்சியன்றோ?

இவற்றுள் முதலாவதான யாப்பருங்கல நூலுக்கு அரிய பெரிய விருத்தி உரை உளது. அஃது ஆரிய நூல் வழியே தமிழ் நூல் வழியும் பல்கிப் பெருக அடிகோலுகின்றது. இந்த இரண்டு நூல்களும் தமிழ் வளர்ச்சியோடு சைன சமய வளர்ச்சியும் நோக்கமாகக் கொண்டவை.

இனி அணி இலக்கணத்தை மட்டும் வளர்த்து விரித்த நூல் 'அணி இயல்', தண்டியலங்காரம், மாறனலங்கா

ரம் என்பவை. இவற்றுள் அணி இயல் இப்போது வழக்கிலில்லை. தண்டியலங்காரம், இப்பெயர் வாய்ந்த வடமொழி நூலை அடிப்படையாகக்கொண்டு தோன்றியது. இதன் பின்னூலாகிப் பெருகி விரிந்த 'மாறனலங்காரம்' திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றியது. இதற்கு உரை செய்தார் காரி இரத்தின கவிராயர் என்பவர். தமிழ் வளர்ச்சியோடு வைணவ சமய வளர்ச்சியிலும் நோக்குடையது இது.

இந்த ஐந்திலக்கணத் துறையே யன்றி, தமிழ்மொழி வேறு துறையிலும் விரிவடைந்துள்ளது. அது பாட்டியலக்கணமும், பொருத்த இலக்கணமும் கூறும் பகுதியாம். பாட்டென்பது பிரபந்தம். அவை தொண்ணூற்றாறு என்னும் அளவாகப் பிற்காலத்தில் தொகைபெற்றன. பொருத்தமாவது மங்கலம் முதலாக, பாட்டுடைக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் உரிய பொருத்தங்களாம். இவ்விலக்கணங்களைத் தொகுத்தும் விரித்தும் கூறும் நூல்கள் பழையனவும் புதியனவுமாகப் பலவுள.

இவை ஒருபுறமிருக்க; 'பிரயோக விவேகம்', 'இலக்கணக் கொத்து' என்ற சிறுநூல் இரண்டு பிற்காலத்துத் தோன்றின. இவை அளவால் சிறியனவாயினும், பயனால் பெரியன. இலக்கண நுண்கலை உணர்விற்கு இன்றியமையாத இரு கண்போல் உதவுவன இவை.

இனி மேல்புல அறிஞர் "கால்டுவெல்" பாதிரியார் ஆங்கிலத்தில் வரைந்த 'திராவிடமொழி ஒப்பிலக்கணம்' போல்வனவும், புது வழிகளில் புகுந்து ஓரளவு இலக்கண வளர்ச்சிக்கு உதவி செய்வனவாம். இங்ஙனம் நமக்குக் கிடைத்த அறிவுக் கருவூலங்களால் அரும்பயன் ஆய்ந்து நம் தமிழ் மக்கள் நல்வாழ்வு பெறுவாராக.

# பழந் தமிழர் சமயம்

சித்தாந்த கலாநிதி, பேராசிரியர்,
ஔவை சு. துரைசாமி பிள்ளை, மதுரை.

பழந்தமிழர் என்ற சொற்றொடர் நம் கண்ணிலும் காதிலும் பட்டவுடனே நமது நினைவு தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் ஆகிய நூல்கள் எழுந்த காலத்துக்கு நம்மைக் கொண்டு செல்லுகிறது. அக்கால மக்களின் வாழ்க்கைக் கூறுகள் நம் மனக் கண்ணில் தோன்றுகின் றன. அவர்களின் சமய உணர்வு ஒழுக்கங்களை உணர்தற் கெனச் சில சொற்களும் சொற்றொடர்களும் சிறந்த சான்றுகளாக அக்கால நூல்களில் நின்று நம் அறிவைப் பணி கொள்கின்றன. அந்நாளைய கல்வெட்டுக்களோ ஓலைச் செய்திகளோ பிறவோ கிடைக்கவில்லை. நல்லிசைப் புலமைச் சான்றோர் சிலர் அவ்வக்காலத்தில் பாடிய பாட்டுக்கள் சிலவற்றைப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனப் பண்டையோர் வகுத்துள்ளனர். அவை பலவும் தேர்ந்து கொள்ளப்பட்ட ஒரு சில சான்றோர்களின் சிலவும் பலவுமாகிய பாட்டுக்களாதலால் அவற்றைக் கொண்டு வரலாற்று முறையில் வைத்துச் சமய வுண்மை களைக் காண்பது அரிதாகவுளது.

தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும் சங்க இலக்கியங்களும் அக்காலத்தே நிலவிய உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை வழக்குகளையும் முதலாகக் கொண்டு எழுந்தவை. "தமிழ் கூறும்

நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்" என்றே தொல்காப்பியத்துக்குப் பாயிரம் வழங்கிய பனம் பாரனார் குறிக்கின்றார். இவ்விருவகை வழக்குகளில் நிலவிய சமயக் கொள்கைகளைக் காண்பதே நமது முன் னிற்கும் பணியாகிறது.

சமய வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படை. கடவுட் கொள்கையாகும். கடவுள் ஒருவர் உண்டு என்ற உணர்வும், அவரை வாழ்த்தி வழிபட்டு இயலுவது சமய வாழ்வு என்ற கருத்தும் சமயத்தின் உட்கிடை. இவற்றை மேற்கொண்டு ஒழுகுவது சமய வாழ்வாகும் என்பது நாடறிந்த கொள்கை. சமயத்தின் தோற்றம் மிகமிகத் தொன்மையான மக்கள் இயற்கையில் கண்ட பெரு நிகழ்ச்சிகளால் உள்ளத்தே கொண்ட அச்சமும் அவலமும் காரணமாகக் கொண்டது என்பர் வரலாற்றறிஞர். அச்சத்திற் கருவுற்றெழுந்த சமயம், இயற்கையின் கூறுக ளான நிலம், நீர், தீ, காற்று, வான் என்ற ஐந்துக்கும் அப்பாலாய் அவற்றை ஆக்கிப் படைத்து ஆட்டிவைக்கும் முதற்பொருள் ஒன்று உண்டு என வுணர்ந்து அதற்கும் உலக வாழ்க்கைக்கும் தொடர்பு அமைத்து, அதனை உணர்ந்து இனிது ஒழுகச் செய்யும் முறையில் நல்ல தொண்டாற்றியிருக்கிறது. அந்த முதற்பொருளைப் பழந் தமிழர் கடவுள் என்றும் இயவுள் என்றும் வரும் இரண்டு சொற்களால் குறித்துள்ளனர். "கடவுள் வாழ்த்து" "பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்" என்ற தொடர்மொழிகள் யாவரும் நன்கு அறிந்தன. கடவுள், இயவுள் என்ற சொற்கள் கடத்தல், இயக்குதல் என்ற பொருட்குரியன. அக்குள் விக்குள் என்றாற்போல இவை யும் கடவுள் இயவுள் என்று இயலுவதால், உள்ளும் புறமும் கடந்து நிற்பது இயக்கி நிற்பது என்று பொருள்

பட்டுக் கடவுள் எனப்படும். முதற்பொருள் என்பது எல்லாப் பொருட்கும் உள்ளும் புறமும் கலந்து நின்று இயக்குவதும் அவற்றைக் கடந்து நின்று அவற்றின் செயல்முறைகட்கு ஆணை செலுத்துவதும் செய்தொழுகுவது என்ற கருத்தை உணர்த்துகின்றன.

இக்கடவுட் கொள்கைக்கு நிலைக்களம் உயிரும் உலகமும் ஆகும். உலகமாவது "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம்" என்பது தொல்காப்பியம். சமயச் சூழ்நிலையில், "காலம் உலகம் உயிரே உடம்பே, பால்வரை தெய்வம் வினையே பூதம் ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம் ஆயீரைந்தும்" சிறந்த பொருள்களாக நிற்கின்றன. உயிர்கள் புல் பூடுகளாகிய ஓரறிவுயிர் முதல் மக்கள் ஈறாக ஆறு வகையாகப் பிரிகின்றன. இவ்வுயிர்கள் யாவும் "மன்னுயிர்" என்றும் "தொல்லுயிர்" என்றும் சிறப்பிக்கப்படுவதால் அவை கடவுளாகிய முதற் பொருளால் படைக்கப்படாமல் அப்பொருளே போல என்றும் நிலை பேறுடைய உள்பொருளாகும். ஏனை உலகமும் உலகிலுள்ள பொருள்களும் அம்முதற் பொருளால் படைக்கப் படுவனவாம். கடவுளை முதற்பொருள் என்று குறிப்பதோடு "உலகு இயற்றியான்" எனவும், "உலகு படைத்தோன்" (நற்.240) எனவும் குறித்திருப்பது இக்கருத்துப் பற்றியேயாம்.

உயிர்கள் இன்ன உரு இன்ன நிறம் என்று சொல்லவொண்ணாத உருவுடையன; ஆயினும் அவை உலகியற் பொருள்களான உடம்பையும் ஏனைப் பொருள்களையும் இயக்குவதும் அவற்றோடு கூடி இயங்குவதும் செய்வன; அவ்வியக்கத்தால் அவற்றிடையே வினைகள் தோன்றி நிலவுகின்றன, "வினையெனப்படுவது வேற்றுமை கொள்

ளாது நினையுங்காலைக் காலமொடு தோன்றும்'' என்று நூலோர் கூறுகின்றனர். செய்யும் தொழிலுக்கேற்ப ஊதியமும் உறைகளும் அமைவது போலச் செய்யும் வினைக்கேற்ப உயிர்கட்கு நுகர்ச்சியும் உடம்பும் அமைகின்றன. உடம்பையும் நுகர் பொருளையும் படைத்து அளிக்கும் வகையில் முதற் பொருளாகிய கடவுள் மேன்மையுற்று விளங்குகிறார். இதனால் கடவுட்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு படைப்போனுக்கும் படைக்கப்படுபொருட்கும் உள்ள தொடர்பாய்க் கடவுளை உலகைத் தனக் குரியதாகக் கொண்ட உடையவனாகவும், உலகம் அவனது உடைமையாகவும் நிறுத்துகிறது. உயிர்கள் உலகிடைத் தோன்றும் உடம்பை இடமாகக்கொண்டு வினை (தொழில்) செய்து பயன்பெறுவதால் இவ்வுலகம் உயிர்களின் பொருட்டே படைக்கப்பட்டு அவற்றிற்கு உதவப்பட்டிருப்பது என்பது பழந்தமிழர் சமயக் கொள்கை. இதனால் கடவுட் பொருட்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பு உதவி செய்வோனுக்கும் உதவி செய்யப்பட்டோர்க்கும் உள்ள தொடர்பாய், உதவி பெற்றோன் உதவி செய்தோனுக்குக் கடமைப்பட்டு அவன் நன்றியினை நினைந்தொழுகுவது போல உயிர்கள் கடவுளது அருளை நினைந்து வழிபட்டொழுகுவது கடனாகும் என்பதை வற்புறுத்துகிறது. இதனால்தான் தொல்காப்பியனார் கடவுள் வாழ்த்துப் பகுதிக்குச் சிறப்பாக இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளார்.

உயிர் வகையுள் மக்களைத் தனிப்பட நிறுத்தி உயர்திணை உயிர் என்றும், ஏனை உயிர் வகையை அஃறிணையுயிர் எனவும் பழந்தமிழர் கொண்டனர். ''உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே, அஃறிணை என்மனார் அவரல பிறவே'' என்பது தொல்காப்பியம். மக்களினத்துள் அடங்காமல், கடவுளாகிய முதற் பொருளுமாகாமல்

இரண்டற்கும் இடைப்பட்டநிலையில் தெய்வங்கள் காணப் படுகின்றன. இவை மக்களுயிர் போல மனவுணர்வும் வினை செய்தலும் இன்ப துன்ப நுகர்ச்சியும் உடைய வாய்ப் பிறத்தலும் இறத்தலும் செய்வன. இவற்றின் செயல் முறையும் வாழ்க்கையும் மக்களுயிரின் மேனிலையில் உள்ளன. "தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவி" மக்கள் இனத்தன அல்லவாகலின் "இவ்வென அறியும் அந்தம் நமக்கு இல" என்றும், சொல்லுலகில் "உயர்திணை மருங் கின்பால் பிரிந்து இசைக்கும்" என்றும் ஆசிரியர் தொல்காப்பியர் வகுத்துரைக்கின்றார்.

பழந்தமிழர் சொல்லுலகை உயர்திணை அஃறிணை எனக் கொண்டாற்போலப் பொருளுலகைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐந்தாக வகுத்துக் கொண்டனர். இப்பகுதியுள் வாழ்ந்த மக்கள் முறையே குன்றவர், ஆயர், வேளாளர், பரதவர், எயினர் எனக் குறிக்கப்பெற்றனர். அவர்களைத் திணைநிலை மக்கள் என்பது வழக்கம். அவரவர் வாழ்க்கைக்குரிய உணவு, தொழில் முதலியன தனித்தனியே உள்ளன. அவற்றோடு சமய வொழுக்கத்தைக் கூட்டி மேலே குறித்த தெய்வங்களையும் ஒவ்வொரு பகுதிக்கு உரிமை செய்துள்ளனர். குறிஞ் சிக்கு முருகனும், முல்லைக்கு மாயவனும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் கொற் றவையும் தெய்வமாவர். இவர்கட்கு நாட்பூசனையும் விழா வும் வழிபாடும் செய்வது சமய வொழுக்கமாகிறது. கடவுள் என்பது இத்தெய்வ வகைகட்குமேற்பட்டு நின்று எல்லாம் வல்ல முழு முதற் பொருளாக நிலவுகிறது. எல்லா நிலப் பகுதிகட்கும் நீர் தீ வளி விசும்பு ஆகிய அனைத்திற்கும் மேலாய் எல்லாம் தன் ஆணை வழி நிற்கப் பண்ணுவது பற்றிக் கடவுட் பொருட்கெனத் தனியே

நிலம் கிடையாது; எல்லா நிலங்களிலும் இக்கடவுட் குறிப்புப் பொதுவாகக் காணப்படுவதொன்றே இதற்குப் போதிய சான்று.

குறிஞ்சி நிலத்து முருகன் முதலாய தெய்வ வகை எல்லாவற்றிற்கும் தோற்றம் நிலே வேறு கூறப்படுவது போலக் கடவுளாகிய முதற் பொருளுக்குத் தோற்றமும் ஈறும் கூறப்படுவதில்லே. இப்பொருளேக் குறிக்கும் போதெல்லாம் சங்க இலக்கியங்கள் பிறை முடியும், முக்கண்ணும், கறைமிடறும் உடையனுகக் குறிக்கின்றன. இதனுல் இன்று சிவம் என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் இவ்வடையாளங்களேத் தன்பால் கொண்டிருப்பது கொண்டு, சிவ பரம்பொருளே பழந்தமிழர் சமயத் துறையில் நிலவிய கடவுள் என்பது தெளிவாகத் தோன்றுகிறது. தெய்வங்கட்குத் தோற்றமும் கடவுட்கு அது கூறப்படாமையும் நோக்கின், பிறவா வாழ்க்கைப் பெருமையுடையது கடவுள் என்றும், பிறந்து நிலே வேறு கொண்டு இயலுவன தெய்வங்கள் என்றும் பழந்தமிழர் கருதிய கொள்கைகளாகின்றன.

மக்கள் வாழ்வில் விணேயுணர்வும் மறுபிறப்பும் வீடு பேற்றின்பமும் நிரயத் துன்பமும் சொல்வழக்கில் நிலவுகின்றன. மக்களுடைய மனம் மொழி உடம்பு மூன்றின் அசைவு அசைவின்மைகளால் விணேகள் தோன்றுகின்றன. விணேயில்லாத உயிரே உலகில் இல்லே. ஒவ்வொரு விணேக்கும் பயன் உண்டு. இன்பம் பயப்பது நல்விணே; துன்பம் தருவது தீவிணே. நல்விணே செய்தோர் இன்பத்துக்கும் தீவிணே செய்தோர் துன்பத்துக்கும் உரியராவர். விணே உயிரோ உணர்வோ இல்லாததாகலின், அது தானே சென்று விணே செய்தவனுக்கு உரிய பயனே நல்குவதில்லே.

வினை செய்தோனுக்கு வினைப் பயன் அவனையே அடைதற் குரிய தொழிலைச் செய்யும் வகையில் தெய்வங்கள் பணி புரிகின்றன. அதுபற்றியே அவற்றைப் "பால்வரை தெய்வம்" என்று சான்றோர் குறிக்கின்றனர். செய்யப் படும் வினைப்பயன்களுக்கேற்ப உயிர்கட்கு இம்மை மறுமை வீடுபேறு என மூவகையுலகுகள் காட்டப்படுகின் றன. வினை செய்தற்குரிய உலகம் நாம் வாழும் மண் ணுலகம். நல்வினைப் பயனை நுகர்தற்குரிய மறுமை யுலகம் நிரயம் என்றும், வினைத்தொடர்பினின்றும்அறவே நீங்கி விளங்கும் அறிவுடைச் சான்றோர்க்குரியது வீடுபேறு என்றும் பழந்தமிழர் கருதினர்.

வினை தோன்றும்போதே அதன் பயனும் உடன் தோன்றுகிறது. வினை முடிவில் அதன் முழுத்த பயன் உருவாகி வினைசெய்த ஒருவனை அடையும் நிலையை எய்து கிறது. அவன் அப்பயனை நுகரும்வரை அவனுக்கு அஃது ஊழ்கனிபோல் நின்று நுகர்ச்சிக்குரிய காலம் வந்ததும் தெய்வத்தின் ஆணையால் அவனை எவ்வகையாலேனும் அடைந்துவிடுகிறது. அதனால் அதனை ஊழ்வினை என்று அறிஞர் அறிவிக்கின்றனர். ஊழ்வினையை ஊட்டுவிக்கும் பணி கடவுட்பொருளின் ஆணைவழி இயங்கும் தெய்வங் களின் செயலாதலால், தெய்வ வழிபாட்டால் வினைப்பய னது நுகர்ச்சி காலவகையில் வேறுபடும் என்ற கருத்துப் பண்டையோர் கொண்டிருந்தனர். குன்றவர் முருகனுக்கு வழிபாடாற்றி வேட்டம் செல்வதும், ஆயர் மாயோனுக் குக்குரவையாடி வழிபாடியற்றுவதும், வேளாளர் இந்திர விழா எடுத்தலும், பரதவர் சுறவுக்கோடு நட்டு வருண னுக்கு வழிபாடுசெய்து மீன்வேட்டம் புரிவதும், கொற் றவையை வழிபட்டு எயினர் மறத்தொழில் செய்வதும் சங்க இலக்கியங்களில் காணப்படுவது இது பற்றியே யாகும்.

உலக வாழ்வில் காணப்படும் உயிர்கள் அனைத்துக்கும் இன்பம் பெறுவது ஒன்றே குறிக்கோளாகும். ''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பதுதான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும்'' என்பது தொல்காப்பியம். இந்த இன்பப் பயன்பெறுவது குறித்தே உலக வாழ்வு நடைபெறுகிறது; உயிர்களால் செய்யப்படும் வினைகள் யாவும் இக்குறிக் கோளையே நாடிநிற்கின்றன. இந்த இன்பப் பயன்பெறு வது பற்றித் தோன்றும் வினை இடையீடு படுமிடத்தும் இடையூறு எய்துமிடத்தும் அவற்றை நீக்கும் செயல் வகைகளில் மக்களின் அறிவும் முயற்சியும் பெரிதும் ஈடு படுகின்றன. இடையீடும் இடையூறும் அவ்விரண்டின் எல்லையைக் கடந்து போகிறபோது சமயவுணர்வும் வழி பாடும் தோன்றுகின்றன. பெருமழை, மழையின்மை, கடுங்காற்று, கொடுவிலங்கு, பெரும்பகை முதலியவற்றால் இடையூறு உண்டாகுமாயின் மக்கள் தெய்வவழிபாட்டில் சிறந்து நிற்கின்றனர். பெருமழைக்கு வருந்திய மலையுறை குறவர்,

''மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையர்'' (புறம்: 143)

எனச் சான்றோர் குறிப்பது காண்க. செய்யும் வினை கார ணமாகத் தோன்றும் சமய வழிபாடு, வினையின் தொடக் கத்தில் இடையூறு வாராமை கருதியும், இடையில் வந்த இடையூறு நீங்குவது கருதியும், முடிவில் வினைப்பயன் நல்கும் இன்பம் குறித்தும் நடைபெறுகிறது.

மக்களுடைய வாழ்வை அகம் புறம் என இரண்டாக வகுத்து முறை செய்து கொண்டவர் பழந்தமிழர். அகம்

என்பது தனியே இருந்து வாழ்க்கை நடத்தும் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் ஒருங்கு பெற்ற ஒருவனும் ஒருத்தியும் ஒருவரையொருவர் தனித்துக்கொண்டு காதலுறவுகொண்டு உள்ளத்தால் ஒன்றுபட்டு மணம்செய்துகொண்டு மனையறம் புரியும் ஒழுகலாறாகும். அக்காலத்தே தோன்றும் காதலுறவு இடையீடும் இடையூறும் எய்துமிடத்து, காதலர் மேனிக்கண் தோன்றும் வாட்டமும் மெலிவும் குறித்துத் தெய்வ வழிபாடு நடைபெறுகிறது. குன்றவரிடையே நடக்கும் வெறியாட்டு இதற்குச் சிறந்த சான்றாகும். புற வாழ்வு என்பது மனையறம் புரிந்தொழுகும் மக்களிடையே பொருளும் புகழும் போர் வென்றியும் பிறவும் பற்றி நிகழும் ஒழுகலாறாகும்.

புறவாழ்வின்கண், அகத்துறை இன்பம் நுகர்ந்தும் புறத்துறைப் புகழும் வென்றியும் எய்தியும் உவர்ப்புற்ற சான்றோர் "சிறந்தது பயிற்றல்" என்னும் துறவு வாழ்க்கை மேற்கொள்வது பண்டைத் தமிழர் சமயக் கொள்கையாகும். "காமம் சான்ற கடைக்கோட் காலை ஏமம் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்த தன் பயனே" என்பது தொல்காப்பியம். இங்கு இறத்தல் என்றது வயது முதிர்தல். பொருள் இன்பங்களின் சுவை காணாத ஒருவன் துறவு மேற்கோடல் என்பது தமிழர் சமயக் கொள்கைக்குப் புறம்பானது. இச்சான்றோர் இன்பமும் துன்பமுமாகிய இரண்டினையும் ஒருசேரவுவர்த்து வினையின் நீங்கி விளங்குபவராதலின், இவர்கட்குத் தெய்வ வழிபாடு கிடையாது. இவர்களால் வழிபடப்படுவது கடவுள் எனப்படும் முழுமுதற் பெரும்பொருளேயாகும். அதனால் இத்துறவிகளையும் கடவுளர் என்பது பழந்தமிழ் மரபாயிற்று. சடை முடித்துப் பலகாலும் நீராடித் தோலுடுத்துக் காய்கனி கிழங்கு இலைகளை உண்டு காடும்

குன்றுமாகிய இடங்களில் வாழ்வது துறவோர் நிலைமை யாகும். இவர்கள் ஏனையோர் போல நல்வினை செய்து துறக்க வின்பம் பெறவிழையாது, உற்ற நோய் பொறுத் தலும் உயிர்கட்கு ஊறு செய்யாமையுமாகிய தவம் மேற் கொண்டு மெய்யுணர்ந்து அவாவறுத்து ஒழுகுவர். இப் பெருமக்களது வாழ்வு முழுதுமே சமய நெறியில் இயங்கு தலால், இவர்கட்கெனத் தனி நிலையில் சமய வாழ்வும் வழி பாடும் இல்லை. இவர்கள் சொல்லுவனவும் நினைப்பனவும் யாவுமே கடவுட் பெரும் பொருளோடு கலந்து பிரிப்பின் றிப் பிறங்கும். இவர்கள் நெஞ்சின்கண் நின்று நிலவும் கடவுள், "பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி நீலமணி மிடற்றுப்" பெரும் பெயர்க் கடவுள். முற்றுந் துறந்த முனிவரும் முடியுடைய மூவேந்தரும் தலை சாய்த்து வணங்கியது இக்கடவுளையேயாகும். "பணீஇயர் அத்தை நின்குடையே முனிவா முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே" என்று சான்றோர் தெருட்டுதல் காண்க.

முழுமுதல் கடவுட்கும் மண்ணுலக வுயிர்கட்கும் இடையே நிலவும் தெய்வங்கள் மக்களுடைய வழிபாட்டை யேற்று அவர்கள் நலம்பெறத் துணைபுரியும் என்ற கருத் தால் பகைப் பொருளை வெல்வதற்கும் துன்பத்தினின்றும் உயிர்களைக் காத்தற்கும் அத்தெய்வங்களின் தொடர்பு சமய வாழ்வில் சிறந்து நின்றது. மக்களுயிர்களுள்ளும் அல்லன கடிந்து நல்லனவே புரிந்தவை மறுமையில் தெய்வங்களாயினவும் உண்டு. இவ்வாற்றால் தெய்வங்களைப் பற்றிப் பல வேறு வரலாறுகள் சமயத்துறையில் காணப் பட்டன. அவற்றை இந்நாளில் புராண வரலாறுகள் என்பது வழக்கம். மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டெழுந்த பழந்தமிழ் இலக்கியங்களில் தெய்வங்கள் சார்பான புராண வரலாறுகள் பல உளவாயின.

குறிஞ்சிநிலத் தெய்வமான முருகனைப்பற்றியவரலாறு களில், அம்முருகன் தாமரைப்பூவில் பிறந்தான் என்பதை "நிவந்தோங்கு இமயத்து நீலப்பைஞ்சுனைப், பயந்தோர் என்ப பதுமத்துப்பாயல்" என்று பரிபாடல் முதலிய நூல்கள் குறிக்கின்றன. கடலிடத்தே இருந்து குறும்பு செய்து உயிர்களை வருத்தித் திரித்தசூரவன்மாவின்காவல் மரமான மாமரத்தைத் தடிந்து அவனையும் கொன்று முருகன் மேன்மையுற்றான் என்பதை,

"நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை யவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள்"

என்று பதிற்றுப்பத்தும்,

"அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்"

என்று முருகாற்றுப் படையும் பிறவும் குறிக்கின்றன. "குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்த" முருகனைச் சிறப்பிக்கும் சான்றோர், வள்ளியை "முருகுவுணர்ந்தியன்ற வள்ளி" என்றும், அவளுடையபெற்றோரைக்,"குறிஞ்சிக்குன்றவர் மறங்கெழு வள்ளி தமர்" என்றும் எடுத்துரைக்கின்றனர்.

முல்லை நிலத் தெய்வமான மாயோன், கண்ணனால் முல்லை நிலத்து ஆயரிடையே யமுனைக் கரையில் விளையாடிய வரலாறு,

"வடா அது.
வண்புனல் தொழுநை வார்மணலகன்றுறை

அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல்''

என்றும், கஞ்சன் விடுப்பக் குதிரை வடிவில்வந்த அசுரனை வென்ற செய்தியை,

''காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகைகண்டை
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத்திட்டுப் புடைத்த ஞான்று இன்னன்கொல்
மாயோன் என்றுஉட் கிற்றுஎன் நெஞ்சு''

என்றும் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இவ்வாறே மருதத்துக்குரிய தெய்வமான இந்திரன், முருகன் முதலிய தெய்வங்கட்குப் படையுதவிய பண்பும், அகலிகை பொருட்டு மேனி முழுதும் கண்பெற்ற கதையும் பழந் தமிழரிடையே நிலவின. பாலைக்குரிய தெய்வமான கொற்றவையை முருகனுக்குத் தாய் என்றும், அவளே எல்லாத் தெய்வங்கட்கும் பழையவள் என்றும் கூறுகின்றனர். தாருகன் உரம் கிழித்த தறுகண்மையும், எருமை வடிவில்வந்த அவுணனை வென்று சிறந்த வீறுடைமையும் அவள் செய்தியில் விளக்கம் பெறுகின்றன. வருணனாகிய நெய்தல் நிலத் தெய்வத்தைப் பற்றி ஒரு செய்தியும் பழந் தமிழ் நூல்களில் எவராலும் எவ்விடத்தும் கூறப்பட வில்லை. இச்செய்திகளை விழாக்காலங்களில் மக்கட்குக் காவியங் கூறியும் ஓவியம் காட்டியும் உரைப்போர் இருந் திருக்கின்றனர். இதனை,

''இந்திரன் பூசை இவள்அக லிகைஇவன்,
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றியபடி இதுஎன்று உரைசெய் வோரும்''

உளர் எனப் பரிபாடல் பகர்வது காண்க.

இத்தெய்வங்கட்கெல்லாம் மேலாய் உலகு உயிர்களின் வேருய் ஒன்ருய் உடனுய் நிலவும் கடவுள் நிலையில் சிவ பரம்பொருளை வைத்து அவன் வடிவத்தை,

' பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன்''

என்றும்,

' பேரிசை நவிரம் மேஎய் உறையும்
காரியுண்டிக் கடவுள்''

என்ற கூறுவர். அவன் முப்புரம் எரித்த வரலாற்றை,

ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்''

என்றும்,

''தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயம் செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணுல் மூவெயிலும்
உடன்ருன்''

என்றும்,

''உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்''

என்றும் பழந்தமிழர் தம்முட் பாராட்டிப் பரவிவந்துள்ளனர்.

பழந்தமிழர் சமய வாழ்வில் கார்த்திகை விளக்கீடும், மார்கழித்தைந் நீராட்டும் பங்குனி உள்ளி விழாவும், சித்திரை இந்திர விழாவும், வேனில் விழாவும் பிறவும் சிறந்து விளங்கின. கார்த்திகை விளக்கீட்டு விழா இன்றைய தீபாவளிப் பொங்கற் புதுநாள் விழாவும் ஆகிய இரண்டின் சிறப்புக்களை ஒருங்கே தன்கண் கொண்டிருந்தது. இதனை,

"மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம"

என்றும், இக்காலத்தே புது மணமகளிர் புதுநெல் கொண்டு அவலிடித்துப் பாற் பொங்கல் இட்டு மகிழும் திறத்தை, இதே பாட்டில்,

"புதுமண மகடூஉ வயினிய கடிநகர்ப்
பல்கோட் டடுப்பிற் பால்உலை இரீஇக்
கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும் இருங்கால் உலக்கை"

என்று நக்கீரனார் நவில்வதனால் நன்கு அறியலாம். மார்கழித் திருவாதிரை நாளில் தொடங்கித் தைப் பூசம் வரையில் நடைபெறும் தைந்நீராட்டு, பரிபாடலில் பாரித்துக் கூறப்படுகின்றது. விசயநகர வேந்தர் காலத்துத் தோன்றிய மொழி நிலை உணர்வு வேறுபாட்டால் கார்த்திகை சிறழிந்தது; தீபாவளி புதிது தோன்றிற்று; தைந்

நீராடல் தலை நடுமாறிற்று. வேனில் விழா காமன் பண்டிகையாயிற்று. இக்காலத்தில்தான் தெய்வ நிலையங்களில் வழிபாட்டில் வடமொழி இடம் பெற்றது. ஊர்ப் பெயர்களும் தெய்வங்களின் பெயர்களும் வடமொழியில் மாறின: பின்னர் மக்கட்பெயரும் வடமொழிப்பெயர்களாயின.

பழந்தமிழரிடையே சமயவழிபாட்டில் அவரது தமிழ் மொழியேநிலைபெற்றிருந்தது. தெய்வங்கட்குக்கோயில்கள் இருந்தன. அவற்றை நகர் என்றும் தேவகுலம் என்றும் வழங்கினர். மலை முடியும் கடற்கரையும் தெய்வங்களுறையும் கோயில் எடுக்கும் சிறப்புடைய இடங்களாயின. தவிர மலையின் முடியில் முக்கட் செல்வனுக்கு இருந்த கோயிலை மலைபடுகடாம் என்ற சங்க இலக்கியம் குறிக்கின்றது. இக்கோயில்கள் பலவும் மரத்தாலும் மண்ணாலும் பண்டை நாளில் கட்டப்பெற்றன. பல்லவர் காலத்தில்தான் கோயில்களைக் கருங்கற்களால் அமைக்கும் முறை உருக்கொண்டு சிறப்பதாயிற்று. சிவபரம்பொருள் எல்லாத் தெய்வங்கட்கும் மேலாம் நிலையில் எல்லா நிலங்கட்கும் பொதுவாய் இலங்குவது பற்றிச் சிவத்துக்கு எடுக்கும் கோயில்களில் சிவனை நடுவில் வைத்துக் குறிஞ்சிக்குரிய முருகனையும், முல்லைக்குரிய மாயோனையும், பாலைக்குரிய கொற்றவையையும் பிறவற்றையும் "பரிவார தேவதைகள்" என்ற பெயரால் சூழவைத்துச் சமய ஒருமை கண்டவர் பழந்தமிழர்.

இவையேயன்றி, ஊர்தோறும் அன்பர்கள் கூடிப் பரவுமிடந்தோறும் தெய்வங்கட்குக் கோயில்கள் இருந்தன. இவற்றின் வேறாக,

"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்

சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்,
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்''

தெய்வ வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றன. கந்துடை நிலை என்றது பிற்காலத்தே சிவலிங்கம் என மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது. சிவ வடிவம் கந்தும், அதன் பீடம் நிலையுமாகும். இவ்வுண்மையறியாத படவோர் கந்தினை ஆண்குறி என்றும், நிலையினைப் பெண்குறி என்றும் பிதற்றினர். சிலர் இப்பேதைமையை அறிவுடைமையாக எண்ணிப் பொய்க் கதை புனைந்து மனத்தே மான வுணர்வின்றி எழுத்தால் வரைந்துவிட்டனர். தெய்வ வழி பாட்டில் உயிர்ப்பலியும் குருதி கலந்த சோறும் படைக் கப்படுவதுண்டு. எங்கும் விளக்குகளை ஏற்றித் தெய்வங் கட்கு நீராட்டிப் பூச்சூடி மணி இயக்கி நறும்புகை எடுப் பர்; அக்காலை பலவேறு வாச்சியங்களும் முழங்கும். பின் னர்ப் பலவேறு நிறமுடைய பூக்களைத் தூவி வழிபாட்டுக் குரிய தெய்வங்களைப் பரவுவர். முருகனை வழிபடுவோர், கையால் தொழுது காலுற வணங்கி,

''நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ,
ஆல்கெழு கடவுட் புதல்வ, மால்வரை
மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே,
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ,
இழையணி சிறப்பின் பழையோள் குழவி,
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை

மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள
அலர்ந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்நின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில்.

எனச் சொல்லி முடிவில்,

"நின்அளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்"

என்று கூறி வணங்குவர். வேறு சிலர்,

"யாஅம் இரப்பவை,
பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ளேயே"

என்றும், வேறு சிலர்,

"யாமும் எம்சுற்றமும் பரவுதும்
ஏம வைகல் பெறுகயாம் எனவே"

என்றும் வழிபடுகின்றனர். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுக என்பது தமிழர் வழிபாட்டு முறை. இன்றைய தமிழர், தெய்வ வழிபாட்டில் தாம் அறியாத மொழியில் "முறம் போன்ற

காதுகளையுடையவனே", "குடம் போன்ற வயிற்றை யுடையவனே", "பெண்ணின்பத்தைப் பெரிதும் விரும்பு பவனே", என்று ஆண் தெய்வங்களையும், "மலைபோன்ற கொங்கைகளையுடையவளே" "கடல்போன்ற நிதம்பத்தை யுடையவளே" "இடையறாத போகத்தை விரும்புபவளே" என்று பெண் தெய்வங்களையும் வழிபாடு என்ற பெயரால் வசைபாடுகின்றனர். இன்றைய வழிபாட்டு அருச்சனை களில் தெய்வ தூசணமும். வஞ்சனையும் பெருகியிருக்கிற தேயன்றிப் பூசனையும் வணக்கமும் இல்லை என்றால் அது மிகையாகாது. வடமொழித் தொடர்களைக் கேட்கும் வடமொழி அறிஞர் மனத்தே வெறுப்பும், முகத்தே சுளிப்பும் கொண்டு வருந்துகின்றனர். அரசியல், கல்வி, வாணிபம் முதலிய எல்லாத் துறைகளும் மக்கள் வழங்கு கின்ற மொழியிலேயே இயங்க வேண்டும் என்ற வேட்கை மீதூர்ந்திருக்கும் இந்நாளில் தமிழருள் சிலர் மொழி வெறி கொண்டு நாம் சமய வழிபாட்டில் செய்துவரும் பெரும் பிழையைத் திருத்திக்கொள்ளாமல் விடாப்பிடி யாக இருப்பது சமய வளர்ச்சிக்கு ஆதரவு தருவதாகத் தோன்றவில்லை. வடமொழியறிஞர்க்கும் வெறுப்பைத் தந்து, நாட்டு மக்களுக்கு இருளை விளைவித்துச் சமய உணர்வொழுக்கங்களில் மக்கள் உள்ளத்தில் புறக் கணிப்பை நல்கும் இப்பிழைபட்ட வழிபாட்டுமுறையைச் சமய நிலையங்கள் இனியும் நீடிக்க விடுவது அறமாகாது. மேலும் வடமொழி ஆகமங்களோ தமிழ்ச் சமய இலக்கி யங்களோ யாதும் எக்காலத்தும் எவ்விடத்தும் வட மொழியில்தான் வழிபாடு நடைபெற வேண்டுமென்ற விதியை வகுத்ததே கிடையாது. வாழ்க்கைத் துறையில் தான் போலிச் செயல் பெருகிற்றென்றால் வழிபாட்டிலும் போலியுரை வளருமானால் தெய்வங்களின் அருள்தான் கைவருமோ என்று உள்ளம் அஞ்சுகின்றது. தெய்வந் தான் துணை செய்ய வேண்டும்.

# மறுமலர்ச்சி - உரைநடை

திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.

உரைநடையின் மறுமலர்ச்சியினை ஆராய்வதன் முன்னர் அதன் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் அறிதல் இன்றியமையாததாகும். தமிழ் இலக்கியத்தி லுள்ள உரைநடை வளர்ச்சியினை முக்கூறுபடுத்திக் கூற லாம்: 1. பண்டைக்காலம் (கி. பி. 200-க்கு முன்), 2. இடைக்காலம் (கி.பி. 200 கி.பி. 1500வரை), 3. இக்காலம் (16-ஆம் நூற்றூண்டுமுதல்) தமிழ்இலக்கியத்தில்பண்டைக் காலத்தில் செய்யுள் நூல்களே இடம் பெற்று வந்தன. கி. பி. 16-ஆம் நூற்றூண்டு முதல் தனிப்பட்ட உரைநடை நூல்கள் தோன்றின. மக்கள் பேச்சு மொழியைக் கற்றுக் கொள்வதற்கு முன் தம் உணர்ச்சிகளைப் பாட்டுக்களின் மூலம் தெரிவித்தனர் என்பர் ஜெஸ்பர்சன் (Jesperson) என்ற மேனாட்டு ஆசிரியர்.[1] இலக்கிய வரலாற்றில் உரை நடை நூல்களுக்கு முன்னர்ச் செய்யுள் நூல்களே இடம் பெற்றன என்பர் எமர்சன் (Emerson) என்ற ஆசிரியர்.[2] இக்கருத்துத் தமிழ் மொழிக்கும் பொருந்துவதாகும்.

---

[1] "Men sang out their feeling long before they were able to speak their thoughts" (Jesperson-Language its Origin, Theory and Development", p. 46):

[2] "In the History of Literature poetry precedes prose" (R. W. Emerson's "Poetry and Imagination" p. 439.)

தமிழர், இலக்கணம் இலக்கியம் சோதிடம் மருத்துவம் முதலிய எல்லா நூல்களையும் செய்யுள்களிலேயே இயற்றி வந்தனர். இவைகளுக்கு உரையாசிரியர்கள் இயற்றிய உரைகளைத் தவிரத் தனிப்பட்ட உரைநடை நூல்கள் முற்காலத்தில் இயற்றப்படவில்லை. ஆனால், உரைநடையும் செய்யுளுமாகக் கலந்த சில நூல்கள் பண்டைக் காலத்தில் இயற்றப்பட்டன. இதனை,

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"[3]

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தில் அறியலாகும். இச் சூத்திரத்திற்கு உரை எழுதப்போந்த பேராசிரியர் "தொன்மை என்பது உரை விராஅய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது; அவை, பெருந்தேவனாற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன" என எழுதியுள்ளார். இத்தகைய நூல்களை உரையிடை இட்ட பாட்டுடைச் செய்யுள் எனக் கூறுவர். இந்த இரண்டு நூல்களும் இறந்து ஒழிந்தன. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு இப்போது உதாரணமாக உள்ளது சிலப்பதிகாரம் ஒன்றேயாகும். சிலப்பதிகாரத்துள் உரைபெறு கட்டுரையில் வந்துள்ள உரைநடையின் நடையினைக் காண்க.

"அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து
நங்கைக்கு
விழவொடு சாந்திசெய்ய மழைதொழி லென்றும்
மாறாதாயிற்று"[4]

உரைநடை என்பது நடப்பது போன்று மெதுவாகச் சொல்லுதல் எனப்பொருள்படும். இலத்தீன் மொழியிலும்

---

[3] தொல்காப்பியம் செய்யுளியல்-சூ 237.

[4] சிலப்பதிகாரம் - உரைபெறு கட்டுரை.

வசனத்தைக் குறிக்கும் உரைநடை என்ற சொல்லுக்கு இதே பொருளாகும். உரைநடையில் சொற்கள் வேக மின்றி மெதுவாகச் செல்லும். [5]

தொல்காப்பியம் செய்யுளியலில் உரைநடையைப் பற்றிய குறிப்புக் காணக்கிடக்கின்றது. செய்யப்படுவது செய்யுளாகும். இவற்றுள் அடி வரையறை யுடையன பாட்டு எனப்படும். வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா இதன்கண் அடங்கப்பெறும். அடிவரையறை யின்றி வருவனவற்றை ஆசிரியர் தொல்காப்பியர் 1. நூல், 2. உரை (Prose), 3. பிசி, 4. முதுமொழி, 5. மந்திரம் 6. கூற்றிடை வைத்த குறிப்பு என அறுவகைப்படுத்திக் கூறியுள்ளார். இவற்றுள் உரை என்பது உரைநடையைக் (வசனம்) குறிப்பதாகும். இந்த உரைநடையினை நான்கு வகைப்படுத்திக் கூறுவர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

"பாட்டிடை வைத்த குறிப்பினானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப" [6]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதனால் உரைநடை

---

[5] The Tamil word for prose is Urai.Nadai (உரை நடை) which means "the speech on foot" and it will be interesting to observe that the Latin Expression 'Oratio Pedestris' for prose means also 'Speech on foot, (i.e) the launguage that walks and does not profess to fly'. (History of the Tamil Prose Literature by V. S. Chengalvaraya Pillai, p. 14).

[6] தொல்காப்பியம்-செய்யுளியல்-173.

யும் செய்யுளும் கலந்துள்ள நூல்களும், பாட்டிற்கு உரை யாகக் கூறப்படும் உரை நூல்களும், ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லும் நவீனங்களும், நகுதற்கு ஏதுவாகிய நாடகங்களும், சிறுகதைகளும் உரைநடை நூல்களாம் என்பது பெறப்படுகின்றது.

இதனோடு பல உரை விசேடங்களை ஆசிரியர் தொல் காப்பியர் மரபியலில் பகுத்துக் கூறியுள்ளார். பண்டை நூலாசிரியர் உரைநடை எழுதுவதில் திறமை பெற்றவர் என்பதை விளக்க இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரம் ஒன்றே போதிய சான்றாக விளங்குகின்றது. ஆனால் அதன் நடைமிகக்கடுமையாகஉள்ளது. அவற்றுள் சில வரிகளைக் காண்போம்:

'அக்காலத்துப் பாண்டியநாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங் கூவி 'வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னை யுள்ளி வம்மின்,' என்றான்."[7]

## இடைக்காலம்

(கி. பி. 200-1500 வரை)

சமணர்கள் தமிழில் பல இலக்கண இலக்கிய நூல் களை இயற்றித் தமிழ்த் தொண்டாற்றினர்.[8] சமணர்

---

[7] இறையனார் அகப்பொருள் உரை.

[8] "It was through the fostering care of the Jainas, that the South first seems to have been inspired with new ideals and its literature with new forms of expression" (A Literary History of India by R. W. Frazer, p.310)

களாலும் பௌத்தர்களாலும் தமிழ் மொழியில் வட மொழிக் கலப்பு அதிகமாக ஏற்பட்டது. சமண சமயத்தாரால் இயற்றப்பட்ட ஸ்ரீபுராணம் என்ற வசன நூல் தமிழும் சமஸ்கிருதமும் கலந்த மணிப்பிரவாள நடையில் இயற்றப்பட்டது. ஸ்ரீபுராணத்தில் 24 தீர்த்தங்கரரின் வாழ்க்கை வரலாறு விளக்கப்பட்டுள்ளது. இந்நூலில் வந்துள்ள மணிப்பிரவாள நடையினைக் காண்க:

"மற்றொருநாள், சிரேணிக மகாராஜன், ஸமவ சரண மடைந்து அசோக வனத்துள் அசோக விருக்ஷ மூலத்து ரூபயௌவந சுபலக்ஷணஸகிதராகித் தியாநா ரூடராகியிருந்த ஜீவந்தர முனிகளைக் கண்டு அத்தியந்தம் (க) விஸ்மிதனாகி ஸுதர்மகணதாரரை அடைந்து, "பகவானே! (உ) ஈதிருசலக்ஷண சகிதராகிய இந்தத் தபோதனர் யார்?" என்று வினவ அவரும் அருளிச் செய்வார்."[9]

பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிரப் பிரபந்தத்திற்கு 14-வது, 15-வது நூற்றாண்டுகளில் விளங்கிய வைணவ ஆசிரியன்மார் மணிப்பிரவாள நடையில் விளக்கவுரை இயற்றினர். பேராசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் முதலியோர் தாம் இயற்றிய உரைகளால் உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினர்.

இக்காலம் (17ஆம் நூற்றாண்டு முதல்)

ஐரோப்பியரின் தொடர்பால் தமிழர் வசனநடையில் நூல் எழுதும் வழக்கத்தினைப் பெற்றனர் என மார்டாக் (Dr. Murdoch) என்பவர் எழுதியுள்ளார். கிறித்தவப்

9 சீவகசிந்தாமணி-Dr. சாமிநாத ஐயர்-3-ஆம்பதிப்பு. பக்கம்-45.

பாதிரிமார்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காகப் பல உரைநடை நூல்கள் எழுதிப்போந்தனர். கி. பி. 1577-ஆம் ஆண்டில்தான் தமிழில் முதன்முதல் வசன நூல் உண்டானதாகத் தெரிகின்றது. இந்நூலுக்குக் "கிறிஸ்தவ வேதோபதேசம்" (Flossanctorum) என்பது பெயர்."[10] 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ராபர்ட்-டி நொபிலி (Robet-De Nobili) என்னும் தத்துவ போதக சுவாமி ஞானோபதேச காண்டம், சேசுநாதர் சரித்திரம் முதலிய 18 வசன நூல்கள் இயற்றினார். 17-ஆம் நூற்றாண்டில் விளங்கியவரும் இலக்கண விளக்கம் என்ற நூலினை எழுதி அதற்கு உரையும் வகுத்தவருமாகிய வைத்தியநாத தேசிகர் உரைநடை பண்டைக்கால உரைநடையின் சாயலைப் போன்று விளங்குகின்றது என்பதைக் கீழ்க் காணும் வரிகள் விளக்குதல் காண்க:

> "மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே" என்பவாகலின் மனத்தாற் றுணிவு தோன்ற நினைத்தலும், மொழியாற் பணிவு தோன்ற வாழ்த்தலுங், தலையாற்றணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப் பொதுப்பட 'வணங்கி'யென்றும்"[11]

18-ஆம் நூற்றாண்டில் பெஸ்கி (Father Beschi) என்ற வீரமாமுனிவர் "தேம்பாவணி", "திருக்காவலூர்க் கலம்பகம்" முதலிய செய்யுள் நூல்களும் "வேதியர் ஒழுக்கம்" "பரமார்த்தகுரு கதை", வேதவிளக்கம்" முதலிய வசன நூல்களும், "தொன்னூல் விளக்கம்" என்ற ஐந்திலக்கண நூலும் இயற்றினார். சதுரகராதி என்ற அகராதி இவரால்

---

10 கிறிஸ்தவமும் தமிழும்-மயிலை. சீனி.வேங்கடசாமி. பக்கம்-24.

11 இலக்கண விளக்கம்-எழுத்து, பக்கம்-10.

இயற்றப்பட்டது. இதுவே தமிழில் இயற்றப்பட்ட முதல் அகராதியாகும். கீழ்க்காணும் வரிகளால் வீரமா முனிவரின் உரைநடையின் அழகினைக் காண்க.

> "எப்பொருளினும் அதனுண்மை யுணர்தலே ஞானம். உணர்ந்த பொருளினிவையே நல்லவை யெனவும் இவையே யல்லவை யெனவுந் தெளிதலே காட்சி. தெளிந்த வழியே யல்லவை யொருவி நல்லவை மருவி யொழுகலே யொழுக்கம். இந்நல்லொழுக்கமே யனைத்தற னுகையிலிவை யெலா மன முயற்சி யாலாக வேண்டுமி, மனவொவ்வா வறனெல்லாம் பொய்யென விகழப்படுவது முறையே யென்பது."[12]

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிவ ஞான முனிவர் காஞ்சிப் புராணம், சோமேசர் முதுமொழி வெண்பா முதலிய செய்யுள் நூல்களேயன்றிப் பலவகை உரைநடை நூல்களும் இயற்றியுள்ளனர். சித்தாந்த மரபு கண்டனம், சிவசம்வாதவுரை மறுப்பு முதலியன இவரது கண்டனத் திறமையினையும், தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலியன இவரது ஆராய்ச்சித் திறமையினையும் விளக்குவனவாம். இவர் இயற்றிய சிவஞான போதப் பேருரையாகிய திராவிட மாபாடியம் ஒன்றே இவரது சாத்திரப் புலமையை விளக்கப் போதியசான்றாக விளங்கு கின்றது. ஆறுமுக நாவலர் (1823-1879) அவர்களை இக் கால வசன நடையின் தந்தை என்றே கூறுவதுண்டு. இவர் பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், பாலபாடம், சைவ வினு விடை என்ற உரைநடை நூல்கள் இயற்றியுள்ளனர்.

---

12 தொன்னூல் விளக்கம்-பொருளதிகாரம்-அறம்.

திருவருட்பா பாடியருளிய இராமலிங்க அடிகள் (1823-1874) ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம் முதலிய உரைநடை நூல்கள் நமக்கு அளித்துள்ளார். தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் (1882-1921) தமது கதைகளாலும் கட்டுரைகளாலும் தமிழ் உரைநடைக்கு ஆக்கம் அளித்தார். தனித்தமிழ் நடையினைத் தமிழ்நாட்டிற்கு அளித்த பெருமை மறைமலையடிகளாரைச் சாரும். அவர் தூய தனித்தமிழ் நடையில், அறிவுரைக் கொத்து, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி முதலிய நூல்களை இயற்றிப் பொன்றாப்புகழ் பெற்றனர். திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் வசன நடை, உணர்ச்சி ததும்பும் நடையாகும். சிறுசிறு வாக்கியங்களில் பல நுண்பொருள்களை விளக்கும் தனிப் புலமை திரு. வி. க. அவர்களிடமே விளங்கியது. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் அவர்களின் இனிய எளிய நடையினை, அவர் எழுதிய "நான் கண்டதும் கேட்டதும்" "நல்லுரைக் கோவை" "நினைவு மஞ்சரி" முதலிய நூல்களிற் காண்க. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரின் "உரைநடைக் கோவை" என்ற நூலில் அவரது வசனநடையின் திட்பநுட்பத்தினைக் காணலாம். கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "இலக்கிய வரலாறு" "சைவசமயாசாரியர் சரித்திரம்" முதலிய உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார். நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நடையினை அவர் இயற்றிய கட்டுரைத் திரட்டில் காண்க. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள் "தமிழர் பண்பாடு", "இலக்கியச் சிந்தனை" முதலிய உரைநடை நூல்கள் இயற்றிப் போந்தார். சொல்லின் செல்வர் R. P. சேதுப்பிள்ளை, நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, கி. வா.

ஜகந்நாதன், M. இராகவையங்கார், தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகிய இவர்கள் எழுதிய நூல்கள் உரை நடையின் மறுமலர்ச்சியினை விளக்கப் போதிய சான்றாக விளங்குகின்றன.

ஐரோப்பியரின் தொடர்பால் தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சியினைக் காண்கிறோம். அறிஞர் பலர் மேனாட்டு மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் உள்ள சிறு கதைகளையும் நவீனங்களையும் நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்த் தாய்க்குப் புதிய அணிகலன் சூட்டினர். முன்பு தமிழ்மக்கள் பஞ்சதந்திரம், விநோதரச மஞ்சரி, விக்கிரமாதித்தியன் கதை முதலிய கதைகளைப் படித்து இன்புற்றனர். ஆனால் இப்போது நாம் மிகச் சிறந்த சிறுகதைகளையும், நவீனங்களையும் பெற்றுள்ளோம். கல்கி (R. கிருஷ்ணமூர்த்தி) அவர்களைச் சிறுகதையின் தந்தை எனக் கூறுவோமாகில் அது புனைந்துரையாகாது. சிறந்த சிறு கதைகளை எழுதிய புதுமைப் பித்தன் (S. விருத்தாசலம்), கு. பா. இராசகோபாலன் இவர்களை நாம் மறக்கமுடியாது. சுப்பிரமணியபாரதியார் எழுதிய சிதம்பரம் என்ற சிறுகதை. C. இராசகோபாலாச்சாரி (இராஜாஜி) அவர்கள் எழுதிய "கூனி சுந்தரி" கு. பா. இராசகோபாலன் இயற்றிய "தமிழ் மங்கை", ஜீவா (நாரண. துரைக்கண்ணன்) எழுதிய "வேதாந்த கேசரி" என்பவை நமது உணர்ச்சியை எழுப்பக்கூடிய சிறுகதைகளாக அமைந்துள்ளன. டாக்டர் மு. வரதராசனார், கி. வா. ஜகந்நாதன் ஆகிய இவர்கள் எழுதிய சிறு கதைகளில் தமிழ் இலக்கிய நறுமணம் இலங்கக் காணலாம். C. இராசகோபாலாச்சாரியார், A. S. P. ஐயர், யோகி சுத்தானந்த பாரதியார், C. N. அண்ணாத்துரை ஆகிய இவர்கள் தாம் எழுதிய சிறுகதைகளின் வாயிலாகத் தமது கருத்துக்களைப் பரப்பி வருகின்றார்கள்.

தமிழ்நாட்டில் பல நவீனங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முதன்முதலாகத் தோன்றிவெளிவந்த நவீனம் மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமாகும். இரண்டாவது B. A. இராஜம் ஐயர் அவர்கள் எழுதிய கமலாம்பாள் சரித்திரம்; ஆரணி குப்புசாமி முதலியார், பொன்னுசாமி பிள்ளை, வடுவூர் துரைசாமி ஐயங்கார், வை. மு. கோதைநாயகி அம்மாள், நாடோடி, வா. ரா., எஸ். வி. வி., மு. கருணாநிதி ஆகிய பல அறிஞர் சிறந்த நவீனங்கள் எழுதியுள்ளனர். அவற்றுள் பல நவீனங்கள் ஆங்கிலத்திலும் பிறமேனாட்டு மொழிகளிலும், எழுதியுள்ள நவீனங்களைப் பின்பற்றி எழுதப் பட்டன என்பதை அவைகளைக் கூர்ந்து படிப்போர் அறிந்து கொள்வர்.

சிலப்பதிகாரம் ஒன்றே நமக்குக் கிடைத்துள்ள பண்டை நாடக நூலாகும். 17-ஆம் நூற்றாண்டில் சில கூத்து நூல்கள் வெளிவந்தன. சீர்காழி அருணாசலக் கவி ராயர் இயற்றிய இராம நாடகமும், குமரகுருபரர் செய்த மீனாட்சியம்மைகுறமும், திரிகூடராசப்பக்கவிராயர்செய்த குற்றாலக் குறவஞ்சியும் கூத்து நூல் வகையைச் சேர்ந் தவை. 19-ஆம் நூற்றாண்டில் கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் சரபேந்திர பூபாலக் குறவஞ்சியை இயற்றினார். பின்னர் 1878-இல் சித்திராங்கி விலாசம், பவளக்கொடி, நல்லதங்கை, அரிச்சந்திரன், மதுரைவீரன், சகுந்தலை விலாசம், முதலிய நாடகங்கள் தோன்றின. ஷேக்ஸ்பியர் எழுதிய வெனிஸ் வர்த்தகன் என்ற நாடகத் தினை 1876-இல்வேணுகோபாலாச்சாரியார்மொழிபெயர்த் தார்; 1897-இல் சலசலோசன செட்டியார் ஷேக்ஸ்பியரின் சிம்பலைன் நாடகத்தினை மொழிபெயர்த்து அதற்குச் "சரசாங்கி" என்ற தலைப்பினை அளித்தனர். பிரஞ்சு

நாடகப் பேராசிரியர் மோலியேர் எழுதிய "லோபி" என்ற நாடகத்தினை 1898-இல் ஐபாசாமி முதலியார் தமிழ்ப்படுத்தினார். வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார் "ரூபாவதி", "கலாவதி", "மானவிசயம்" என்ற நாடக நூல்களை இயற்றினார்; அதுவன்றி நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலினையும் செய்தார். P. சம்பந்த முதலியார் அவர்கள் தமிழ் நாடகத்திற்கே புத்துயிர் அளித்து 50-க்கு மேற்பட்ட நாடக நூல்களை எழுதினார். முன்பெல்லாம் மத விடயமாகத் தோன்றிய நாடகம் பிற்காலத்தில் சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற கருத்தோடு அமைக்கப்பட்டது. எனவே நாடகத் தமிழிலும் ஒரு மறுமலர்ச்சியினைக் காண்கின்றோம்.

விஞ்ஞான வளர்ச்சியால் பல புதிய கருவிகளும் உண்மைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வுண்மைகள் அனைத்தும் தமிழில் உரைநடையில் விளக்கமாக எழுதப்பட்டன. "சூரியன்", "வானக் கப்பல்", வானக் குமிழ்" முதலிய நூல்கள் E. T. இராஜேஸ்வரி அம்மையார் அவர்களால் இயற்றப்பட்டன. "சக்தி", "ஒளியும் ஒலியும்" முதலிய நூல்களை R. K. விசுவநாதன் என்பவர் எழுதினார். J. P. மாணிக்கம், பெ. நா. அப்புசாமி ஆகிய இருவரும் சேர்ந்து "அணுவின் கதை" என்ற நூலினை நமக்கு அளித்துள்ளனர். எனவே விஞ்ஞான வளர்ச்சியால் பெற்ற உண்மைகளை விளக்கும் வகையில் பல உரைநடை நூல்கள் தோன்றின என்பது பெறப்படுகின்றது. இதுவும் தமிழ் உரைநடையில் காணக்கிடக்கும் மறுமலர்ச்சியேயாகும்.

இதுகாறும் உரைநடையின் தோற்றம் வளர்ச்சி வரலாறு முதலியன கண்டோம். இனி உரைநடையின்

போக்கினையும் இலக்கணத்தையும் ஆராய்வோம். சங்க நூல்களில் காணக்கிடக்கும் உரைகளின் நடையும், இடைக்காலத்தில் தோன்றிய வசன நூல்களின் நடையும் இக்காலத்திலுள்ள உரைநடை நூல்களின் போக்கும் வேறுபட்டு விளங்குவதை நாம் பார்க்கின்றோம். "ஆகவே பேச்சு வழக்குள்ள பாஷைகள் அழியாது நீடித்த காலம் இயங்க வேண்டுமாயின், அவற்றிற்கு வேறுபாடு இன்றி யமையாதது"[13] என்பது பெறப்படுகின்றது. இவ்வாறு நடையின் வேறுபாட்டிற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசாங்க மாறுபாட்டாலும், தமிழர் பிறநாட்டு மக்களிடம் கொண்ட வாணிகம் காரணமாகவும், பிறநாட்டுச் சொற்கள் தமிழ் மொழியில் கலந்து விட்டன. சமயத் துறையிலும் பல சமயநூற் சொற்கள் தமிழ் மொழியில் இடம்பெற்றன. தமிழ் மக்களின் நாகரிக முதிர்ச்சிக்கு ஏற்ற வண்ணம் தமிழ் மொழியும் முதிர்ச்சி அடைந்தது. விஞ்ஞான வளர்ச்சியால் பல அறிவியற் சொற்கள் தமிழில் இடம்பெற்றன. முஸ்லிம்கள் ஆட்சிக் காலத்தில் சபாசு சலாம் முதலிய இந்துஸ்தானி சொற்கள் தமிழ் இலக்கியத்திலும் புகுந்துவிட்டன. முருகன், வள்ளி அம்மையாருக்குச் சலாம் இட்டான் என்ற கருத்தில் குமரகுருபர சுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில்

"குறவர் மகட்குச் சலாம்இடத்து ஏக்கறு
குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்"[14]

எனப் பாடியுள்ளார். சபாசு என்ற சொல்லை அருணகிரி நாதர் தாம் பாடிய திருப்புகழில் கையாண்டுள்ளார்.

---

[13] தமிழ் மொழியின் வரலாறு - வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பக்கம்-79.

[14] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-காப்புப் பருவம்-4.

தமிழில் பேச்சு வழக்கில் பல பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. உதாரணமாக ஆசாமி, கஜானு, வசூல் முதலிய அரேபியச் சொற்களும், கடதாசி, சிப்பாய், பக்கிரி முதலிய பாரசீகச் சொற்களும், உஷார், குல்லா, ஜல்தி, தொப்பி முதலிய இந்துஸ்தானி சொற்களும், அலமாரி, கிராம்பு, ஜன்னல் முதலிய ஆங்கிலச் சொற்களும் தமிழ் மொழியில் புகுந்துவிட்டன. பிற மொழியிலுள்ள பரியாயச் சொற்களை (Technical Terms) தமிழ் மொழியில் அவ்வாறே புகுத்திவிடுவதோ அன்றி, அவைகளை மொழிபெயர்த்துத் தமிழில் எழுத வேண்டுமோ என்பது குறித்துப் பலர் பலவாறு கூறுகின்றனர். இத்துறையில் ஆசிரியர் தொல்காப்பியனார் நமக்கு வழிகாட்டியுள்ளார்.

"கடிசொல் இல்லைக் காலத்துப் படினே"[15]

என்பது தொல்காப்பியச் சூத்திரம். புதிய சொற்கள் அவ்வக் காலத்தில் தோன்றி நன்மக்கள் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின் அவை, தொன்றுதொட்டுவந்தன அல்ல என்ற காரணம்கொண்டு அவைகளைத் தள்ளிவிடுதல் கூடாது என்பதே இச்சூத்திரத்தின் பொருளாகும். எனவே, துவிச்சக்கர வண்டி என்பதற்குப் பதில் சைக்கிள் என்றே கூறலாம். பிற மொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளும்போது அவைகளைத் தமிழ்மொழியின் இனிமைக்கும் பண்புக்கும் ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, விஞ்ஞாபனம் என்ற வடமொழிச் சொல் விண்ணப்பம் எனத் தமிழ்ல் வழங்குகின்றது. Christ என்பது கிறித்து எனவும், David என்பது தாவீது எனவும், Bible

[15] தொல்காப்பியம்-எச்சவியல்-56.

என்பது விவிலிய நூல் எனவும் தமிழில் வருவது காண்க. பாண்டிய நாட்டில் 300 ஆண்டுகளுக்கு முன் வள்ளலாக விளங்கிய ஷெய்கு அப்துல்காதர்மரைக்காயர் என்பவரின் பெயரைத் தமிழர் தமிழ்ப் பண்புக்கும் ஓசைக்கும் ஏற்பச் சீதக்காதி என்று மரூஉ மொழியாக்கினர்.

இக்காலத்தில் சிலர் நாம் பேசுவது போலவே எழுத வேண்டும் எனக் கூறுகின்றார்கள். இது எம்முறையில் பொருந்தும் என்பதை ஆராய வேண்டும். பேச்சு வழக்கில் பல கொச்சைப் பதங்களை (Slang) நாம் உபயோகிக்கின்றோம். மேலும் ஏட்டு வழக்கு மொழிக்கும், பேச்சு வழக்கு மொழிக்கும் உள்ள வேறுபாடு மிகவும் அதிகமானது. வசனமானது ஒரே நடையில் விளக்கமாக எழுதப் படல் வேண்டும் என்பர் மாத்யூ அர்னல்டு (Mathew Arnold) என்ற மேனாட்டு ஆசிரியர்.[16] "சொற்கள் திரியும் திரிபுகளை ஆராயும்போது சொற்களின் வடிவம் வரவரக் குறுகி வருவதைக் காண்கின்றோம்" என்பர் ஜெஸ்பர்சன் (Jesperson).[17]. இருக்கிறது என்ற சொல் இருக்குது இருக்கு எனப் பலவிதமாக வழங்கப்படுவதைக் காண்க. "மக்கள் பேச்சு வழக்கில் சொற்களைச் சுருக்கியே வழங்குகின்றனர். ஆனால் ஏட்டு வழக்கில் சொற்கள் சிதையா வண்ணம் காக்கப்படுகின்றன என்பர் சாயஸ் (Sayce)

---

16 The needful qualities for a fit prose are regularity, uniformity, precision, balance. (Mathew Arnold- Essays in Criticism.)

17 "The general tendency of all languages is towards shorter and shorter forms." (Jesperson-Language, its Origin Theory and Development, p 330)

என்ற ஆசிரியர்[18]" ஆய்விட்டது என்ற சொல் ஆச்சு எனப் பேச்சு வழக்கில் திரிந்துள்ளது. அவ்வாறே போயிற்று என்பதனை மக்கள் பேச்சு வழக்கில் போச்சு என வழங்குகிறார்கள். எனவே நாம் பேசுவது போன்று எழுதுவது முறையன்று எனப் பெறப்படுகின்றது. சிலர் கொச்சைத் தமிழில் எழுதுவதுதான் நல்ல தமிழ் என்று கூறுகின்றனர். எளிய நடையில் எழுத வேண்டும் எனக் கூறுவதில் எவர்க்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் இக்காலத்தில் பலர் புத்தகங்களிலும், வார வெளியீடு, பருவ வெளியீடு, திங்கள் வெளியீடு முதலியவைகளிலும் கொச்சைச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும் கலந்த நடையில் எழுதி வருகின்றனர். உரைநடையில் கொச்சைச் சொல் கலத்தல் முறையன்று என்பதைத் திரு. வ. சு. செ. பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.[19] எனவே தமிழ் மக்கள் அனைவரும் கொச்சைச் சொற்களைத் தவிர்த்து, இனிய எளிய பயின்ற நடையில் எழுதித் தமிழ் உரைநடையினை வளர்ப்பாராக.

---

18 'A literary dialect is naturally less subject to the inroads of decay than an unwritten one." (A. H. Sayce, Introduction to the Science of Language, p. 199)

19 Prose diction should be distinct from colloquial diction, and it requirs a moderate elevation." (The History of Tamil Prose Literat ure-V. S. Chengalvaraya Pillai, p. 50)

# தமிழ் இசைப் புலவர்கள் வரலாறு

அ. கி. பரந்தாமனுர், எம். ஏ.

## தமிழிசைத் தோற்றம்

உலகில் மொழி தோன்றுவதற்குமுன்னே இசைதான் உண்டாயிற்று. ஆட்டோ யெஸ்பர்சன் என்னும் மொழி நூலறிஞர் 'இசையிலிருந்தே மொழி எழுந்தது' என்று கூறியுள்ளார். இதைக் கண்டு வியப்படைய வேண்டுவதில்லை. இதுவே உண்மை. தங்கள் கருத்துக்களைச்சொல்லால் வெளிப்படுத்துவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பு மக்கள் தங்கள் உணர்ச்சிகளைப் பாட்டால், இன்னிசையால் இல்லையெனில் ஏதோ ஒருவகை இசையால் வெளியிட்டார்கள். ஆதலாற்றான், மொழி தோன்றுவதற்கு முன்பு மொழிக்குத் தாயாய் இன்னிசை உண்டாயிற்று என்பதாகும். தமிழிசையும் அங்ஙனமே தோன்றியது என்பதில் ஐயமில்லை.

## இசைச் சிறப்பு

சேக்கிழார் இசையை'அமுத இசை'என்றும், 'என்பூடு கரைந்துருகும் இன்னிசை' என்றும் இசையைப்பாராட்டியிருக்கிறார். உண்மையில் இசை வயப்படாத உயிர்கள் உலகில் உண்டோ? இல்லை. அப்படியிருக்குமாயின் அது கொடியதாக இருக்க வேண்டும். எல்லா மக்களையும் எல்லாப் பிறவிகளையும் உள்ளியக்கவல்லது இசை ஒன்றே. துன்பங்களையும் தொல்லைகளையும் நம்மை மறக்கச் செய்வது இசை. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருள்வது

இசை. நெஞ்சைத் தூய்மையாக்கிப் பக்தியுணர்ச்சியை ஊட்ட வல்லது இசை. உடன் உணர்ச்சியை (Sympathy) உண்டாக்கக் கூடியதும் இசையே.

## முத்தமிழ்

இசையை நுண்கலை என்பர். ஹெர்பர்ட் ஸ்பென்சர் என்பார், 'நுட்பக்கலையினும் நுட்பக்கலையாக இயங்குவது இசை' என்று கூறினார். நம்முன்னோர்கள் நுண்கலையினும் நுண்கலையாகிய இவ்விசைக் கலையைச் செவ்வையாகப் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். எல்லா மொழிகளிலும் இயல் இசை நாடகங்கள் இருக்கின்றன. எனினும், பிறமொழியினர் இம்மூன்றையும் இணைத்துத் தம் மொழியில் பெயரிட்டார்களில்லை. வட மொழியினர் மூவாரியம் என்றார்களில்லை. ஆங்கிலரும் மூவாங்கிலம் என்றுரைத்தார்களில்லை. தமிழர் மட்டும் பிற மொழியினரைப் போலல்லாது இயல் இசை நாடகம் ஆகிய மூன்றையும் பாதுகாத்து வளர்க்கும் பொருட்டு முற்காலத்திலேயே 'முத்தமிழ்' என்றும், 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்றும், 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்றும் வற்புறுத்திப் பாடல்களில் பாடி வந்ததைப் பரக்கக் காண்கிறோம். அதுமட்டுமன்றி, நம்முன்னோர்கள் பொதுவாகத் தேனினும் இனிய தீஞ்சொல் பயின்று வரும் காப்பியம் பாடவேண்டுமெனில், முத்தமிழ்ப் பயிற்சி பெற வேண்டும் என்று கருதியதாகத் தெரிகிறது. ஆதலால், கம்பர் பெருமான் உத்தமக் கவிஞரை விளக்குமிடத்தில்,

> "முத்தமிழ்த்துறை யின்முறை போகிய
> உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவன்"

என்று குறிப்பிட்டுள்ளார். விருத்தப்பாடலும் சந்த விருத்தங்களும் பாட விரும்பும் கவிஞர்களுக்கு இசைப் பயிற்சி

ஓரளவு இன்றியமையாதது என்று கூற வேண்டுவதில்லை. இயற்றமிழிலும் இசைத் தமிழ் கலந்திருக்கிறது. இயற்றமிழ்ப் பாக்கள் உண்மையில் இசையை வளர்க்கும் இனிய செவிலித் தாய்மார்களாக இருக்கின்றன என்றால் மிகையாகாது.

## தமிழ் மக்களின் இசை விருப்பம்

தமிழ் மக்கள் இசையை மிகமிக விரும்புகிறவர்கள். பாட்டுப் பாடுகிறார்கள் என்றால், ஒப்பாரிப் பாட்டாயிருந்தாலும், பல்லாயிரக்கணக்கான மக்கள் அதைக் கேட்டின்புற நாட்டங்கொள்வார்கள். கல்லாத பெண்களும் சாவு வீடுகளில் புதிதுபுதிதாக ஒப்பாரிப் பாட்டைக் கட்டிப் பாடக் கேட்கிறோம். பாமர மக்களாயினும் தேமதுரத் தமிழிசை கேட்க மிகவும் விரும்புகிறார்கள். இசை விருப்பம் தமிழர்களுக்கு அமைந்துள்ள பண்பாடுகளுள் ஒன்று என்றே கூறலாம். இங்ஙனே இன்று மட்டும் தமிழகத்தில் காண்பதன்று; அன்றும் கண்டதொன்று. இதனால், தமிழிசை உருமாறினாலும் கருமாறாது வந்திருக்கிறது. சங்க காலத்திலும் இசைப் பாடல்கள் இருந்தன; இசை வகுத்தோர் இருந்தனர்; இசையிலக்கண நூல்கள் இருந்தன. அக்காலத்தில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம் முதலிய இசை இலக்கண நூல்கள் இருந்தன. அவையனைத்தும் நமக்குக் கிடைக்காமல் மறைந்தன. இடைக்காலத்திலும் தமிழ் நாடெங்கும் ஊரெங்கும் இசை முழக்கம் கேட்டது. 'காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடும் கவினார் வீதிகள்' நாடெங்கும் விளங்கின. இசை நூல்களை இயற்றிய புலவர்களும் சங்க காலத்திலும் இருந்தார்கள்; இடைக் காலத்திலும் இருந்தார்கள்; பிற்காலத்திலும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள்.

இவ்விசைப் புலவர்கள் வரலாற்றைப் பண்டைக் காலம் முதல் இக்காலம் வரையில் சுருங்கிய அளவிலே காண்போம்: இசைப் புலவர் என்று குறிப்பிடுவது ஈண்டு இசை பாடிய அல்லது பாடும் புலவர்களைக் குறிக்காமல், இசை நூல்கள் இயற்றியவர்களையே குறிப்பிடுவதாகும். இசைப் பயிற்சி பெறுவது அருமை. இசைப்பாடல் இயற்றுவது மிக அருமை. இசைப் பயிற்சியோடு இசைப் பாடல் இயற்றும் திறமை பெறுவது அருமையினும் அருமையாகும். இவ்வரிய திறனைப் பெற்றவர்களே இங்கே குறிப்பிடும் இசைப் புலவர்கள் ஆவார்கள்.

இசைப் புலவர்கள் வரலாற்றைக் கீழ்வரும் வகையில் பாகுபாடு செய்யலாம்:

1. சங்க கால இசைப் புலவர்கள். கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலமே சங்க காலம் என்பது. இது வரலாற்றுக் காலம்.

2. இருண்ட கால இசைப் புலவர்கள். இது கி. பி. 350 முதல் 550 வரையுள்ள காலமாகும். இதனைக் களப்பிரர் காலம் என்பர்.

3. சமய மறுமலர்ச்சிக்கால இசைப் புலவர்கள். இது கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள காலம்.

4. வேற்றரசுக் கால இசைப் புலவர்கள். இது கி. பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் 1947 வரையிலாகும்.

5. மறுமலர்ச்சிக்கால இசைப் புலவர்கள். இது இக்கால இசைப் புலவர்களைக் குறிக்கும்.

## சங்க கால இசைப் புலவர்கள்

வீரமும் ஈரமும் மிக்க பேரரசர்களும், சிற்றரசர்களும் இமிழ்கடல்சூழ் தமிழகத்தில் ஆங்காங்கு ஆட்சிபுரிந்த

காலம் சங்ககாலம். பதியெழு அறியாப் பண்பு நிலைத்திருந்த காரணத்தால் நாடெங்கும் அமைதி நிலவிற்று; பொருளாதார நிலை பெருகிற்று. மக்கள் அதனால் களித்தார்களன்றிக் கவன்றார்களில்லை. எனவே, செந்தமிழ் இலக்கியங்கள் நாட்டிலே தோன்றின; எங்கும் பைந்தமிழ் இசை பொங்கியது.

பரிபாடல் என்னும் நூல் எட்டுத் தொகையுள் ஒன்று; 'ஓங்கு பரிபாடல்' என்று பாராட்டப்படுவது. இந்நூல் பரிபாடல் என்னும் பாவால் தொகுக்கப்பெற்றமையின் இப்பெயர்பெற்றது. பண்ணமைந்த பாட்டு, பரிபாடல். ஒருவகை இசைப்பாட்டு இது. இப்பாட்டு ஒரு வெண்பாவாகி வருதலின்றிப் பல உறுப்புக்களோடு தொடர்ந்து ஒரு பாட்டாகி முற்றுப்பெறுவது என்பர் இளம்பூரணர். 'அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவானும் வந்து பலவடியும் வருமாறு நிற்கும் என்றுணர்க' என்பர் நச்சினார்க்கினியர். இப்பாடலின் சிற்றெல்லை 25 அடிகள் என்றும், பேரெல்லை 400 அடிகள் என்றும் தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றில் இப்பாடல் வரும் என்பர் பேராசிரியர். தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றிவரும் என்பர் நச்சினார்க்கினியர். தெய்வமும் காமமும் பொருளாக வரும் என்று யாப்பருங்கலவிருத்தி கூறும். இவ்விளக்கங்களால் பண்டைக் காலத்தில் இன்பமும் இறைவாழ்த்தும் பொருளாகக் கொண்ட இசைப் பாடல் இருந்துவந்தது என்பது நன்கு விளங்கும். சங்ககால இசைப் புலவர்கள் யாழிசைக்கும் தாளத்துக்கும் பொருந்துமாறு இவ்வகை இசைப் பாக்களை இயற்றித் தந்தார்கள்.

இப்பொழுது பரிபாடல் நூலில் 22 பாடல்களே வெளிவந்துள்ளன. நூலில் பாடல்களுக்குப் பண்வகுத்த இசைப் புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவர்களே நமக்குக் கிடைத்துள்ள சங்ககால இசைப் புலவர்கள். பெயர்கள் கீழ்வருமாறு:

1. கண்ணகனார்—21-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

2. கண்ணன் நாகனார்—5-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

3. கேசவனார்—14-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

4. நந்நாகனார்—12-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

5. நன்னாகனார்—2-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

6. நாகனார்—11-ஆம் பாடலுக்கு இசை வகுத்தவர்.

7. பித்தாமத்தர்—7-ஆம்பாடலுக்கு இசை வகுத்தவர்.

8. நல்லச்சுதனார்—16, 17, 18, 20-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர்.

9. பெட்டன் நாகனார்—3, 4-ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர்.

10. மருத்துவன் நல்லச்சுதனார்—6, 8, 9, 10, 15, 19ஆம் பாடல்களுக்கு இசை வகுத்தவர்.

இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவர் மருத்துவராக விளங்கியதோடு இசைப் பெரும் புலவராகவும் இலங்கினார் என்பது கருதத்தக்கது.

சங்க கால இயற்றமிழ்ப் புலவர் ஒருவர் பல இசைக் கருவிகளை வாசிக்கத் தெரிந்த இசைக் கருவிப் பெரும் புலவராக இலங்கினார். வாத்தியங்களுக்கு இயம் என்பது பெயர். மிகப் பல வாத்தியங்களை ஒரே காலத்தில் வாசிக்கத் தெரிந்தமை பற்றியோ, மிகப் பல இசைக் கருவிகளை இசைக்கும் பயிற்சி பெற்றிருந்தமை குறித்தோ இப்புலவர் நெடும்பல்லியத்தனார் எனப்பட்டார். இவர் பாடிய இயற்றமிழ்ப் பாடல் புறநானூற்றில் 64-ஆம் பாடலாக அமைந்துள்ளது. இவர் சங்க கால இசைக் கருவிப் பெரும்புலவர்.

## பாணர்கள்

இசை பொங்கியிருந்த சங்க காலத்தில் மிடற்றுப் பாடற் பயிற்சியிலும் யாழ் வாசிக்கும் திறமையிலும் ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சிறந்து விளங்கிய இசை வாணர் குலமே ஒன்று இசையால் வாழ்ந்துவந்தது. இந்தக் குலந்தான் பாணர் குலம்; பழந் தமிழ்க் குலம்; இசையால் வாழ்ந்த குலம். ஔவையார் இக்குலத்தைச் சேர்ந்த இயற்றமிழ்ப் புலவர்; நல்லிசை மெல்லியலார்.

சங்க காலப் பாணர்கள் கலையுணர்ச்சி மிக்கவர்கள்; வழிவழியாக இசைபாடி வாழ்ந்தவர்கள். பாணர்களுள் சிறுபாணர் என்றும் பெரும் பாணர் என்றும் இரு பிரிவினர் இருந்தனர். சிறிய யாழை வாசிப்போர் சிறு பாணர் என்றும் பெரிய யாழை வாசிப்போர் பெரும் பாணர் என்றும் சிறுபாணாற்றுப் படை பெரும் பாணாற்றுப் படை நூல்களால் அறிகிறோம். இவர்களுள் இசைப் பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என்ற வகையினரும் இருந்தனர். மிடற்றுப் பாடற் பயிற்சி மிக்கோர் இசைப் பாணர் என்றும், யாழ் வாசித்தலில் வல்லோர் யாழ்ப் பாணர் என்றும், மண்டையோடு போன்ற பிச்சை

திரம் ஏந்தி யாசித்தவர்கள் மண்டைப் பாணர் என்றும் குறிப்பிடப்பட்டனர். இசைக் கலைஞர்களான இப் பாணர்கள் வறிஞர்களாயிருந்ததால், பழுமரம் தேடிச் செல்லும் பறவைகள் போல, முடியுடை வேந்தர்களையும் குறுநில மன்னர்களையும் நாடிச் சென்று இசைத் திறமையைக் காட்டிப் பொற்பூவும் யானை, குதிரை முதலிய பரிசில்களும் வேறு பொருள்களும் பெற்று வாழ்க்கையை நடத்திவந்தார்கள்; பெருங்குடி மக்களான தலைவன் தலைவியர் ஊடல் தீர்க்கும் வாயில்களாகவும் செல்வாக்குப் பெற்று வாழ்ந்தார்கள். பாணன் மனைவி பாடினி அல்லது பாணத்தி எனப்படுவாள். பாணன் பாடப் பாடினிகூத்து நிகழ்த்துவது வழக்கம். வள்ளல்கள் இவர்களை நன்கு ஆதரித்து வந்தார்கள். இதனைப் புறநானூறு முதலிய சங்க நூல்களில் மிகுதியாகக் காணலாம். இவர்கள் தீண்டப் படாதவர்களாகக் கருதப்பட்டனர். திருப்பாணாழ்வார் திருவரங்கக் கோவிலுக்குள் போகாமல் ஆற்றின் அக்கரையிலிருந்து பாடியது, பாணர் தீண்டப்படாதவராகக் கருதப்பட்டார் என்னும் உண்மையைப் புலப்படுத்துகிறது.

பாணர்கள் நிலை கி.பி. 7ஆம் நூற்றாண்டில் மாறியது. இக்காலப் பாணர்கள் அரசவை நாடி இரத்தலை மேற்கொள்ளவில்லை. திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தருடனிருந்து அவர் பாடிய திருப்பாடல்களுக்கு யாழ் வாசித்துவந்தார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

### இளங்கோவடிகள்

கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இளங்கோவடிகள் தலைசிறந்த இயற்றமிழ்ப் புலவராக விளங்கியதோடு இசைப் புலவராகவும் இருந்தார் என்பதை அவர் சிலப்பதிகாரத்தில் பாடிச் சென்றுள்ள கானல் வரி, வேட்

டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலியவை நன்கு புலப்படுத்தும். இளங்கோவடிகள் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர் ஆவார்.

## இருண்ட கால இசைப் புலவர்கள்

தமிழக வரலாற்றில் இருண்ட காலம் களப்பிரர்கள் காலம். களப்பிரர்கள் தமிழ்நாட்டில் புகுந்து தமிழ்ப்பெரு வேந்தர்களை வென்று அடிமைப்படுத்தித் தமிழக ஆட்சியை மூன்று நான்கு நூற்றாண்டுகள் மேற்கொண்டிருந்தார்கள். இவர்களால் நாட்டில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டன; இலக்கிய வளர்ச்சி குன்றியது; இசை வளர்ச்சி குறைந்தது; அமைதி மறைந்தது; சமய ஆர்வம் சிதைந்தது. இக்குழப்பம் மிகுந்த காலத்தில் காரைக்காலம்மையார், கி. பி. 550-இல் தோன்றித் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மூத்த திருப்பதிகம் ஆகிய இவற்றை இசைப்பாவுக்கு ஏற்றமுறையில் இயற்றித் தெய்வத் திருநெறியை மக்கள் உய்யும் பொருட்டுப் பரப்பினார்கள். இருண்ட வானில் சிற்றொளியாகத் தோன்றிய தெய்வத் திருவிசைப்பா விண்மீன் இக்காரைக்காலம்மையார் எனலாம்.

## நாயன்மார்களும் ஆழ்வார்களும்

தமிழ்நாட்டில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் மண்டியிருந்த இருள் மறைந்தது; பகலோன் ஒளி வீசத் தொடங்கினான். பல்லவர்கள் ஆட்சி ஓங்கிற்று. பாண்டியர்கள் களப்பிரர்களை வென்று தம்மாட்சியை நிறுவி மாண்புற ஆண்டுவந்தார்கள். சமய மறுமலர்ச்சி தலையெடுத்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் சைவ, வைணவ சமயம் எனும் நற்பயிரைப் பக்தியெனும் நீர்பாய்ச்சி வளர்க்கத் தொடங்கினார்கள். இவர்கள் இலக்கியப் பயிற்சி மிக்க

திருவருட் கவிஞர்களாக இருந்ததோடல்லாது திருநெறி பரப்பிய அருள்ஞான இசைப் பெரும் புலவர்களாகவும் இலங்கினார்கள். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சுந்தரமூர்த்தி நாயனார் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் இருந்தவர். திருஞானசம்பந்தப் பெருமானைச் சேக்கிழார்,

''ஏழிசையும் தழைத்தோங்க
இன்னிசைவண் தமிழ்ப்பதிகம்
எய்தப் பாடினார்''

என்று புகழ்ந்துள்ளார். சுந்தரர்,

''நாளும் இன்னிசை யால்தமிழ்
பரப்பும் ஞானசம் பந்தனுக்கு
உலகவர்முன் தாளம் ஈந்து''

என்று 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தன்' எனச் செந்தமிழால் பாராட்டினார்.

இந்த மூவர் முதலிகளும் பாடிய இசைப்பாக்களே தேவாரமாகும். தெய்வத்தைப் போற்றும் இசைப்பாடலை வாரம் என்ற பெயரால் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்கள். இயற்றமிழுக்கும் இசைத் தமிழுக்கும் பொதுவாகிய செய்யுள் இயக்கம் நான்காகும். அவை முதனடை, வாரம், கூடை, திரள் என்பன. மிகவும் தாழ்ந்த செலவினையுடையது முதனடை. மிகவும் முடுகிய நடையினையுடையது திரள். இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாய சொல்லொழுக்கம் இசையொழுக்கம் உடையது வாரப் பாடல். சொற்செறிவும் இசைச்செறிவும் உள்ளது கூடைப்பாடல். இந்நான்கனுள் இழும் என ஒழுகும் இன்னோசையும் செம்பாகமாகப் பொருளுணர்த்தும் தெளிவும் அமைந்தது வாரப்பாடலேயாகும். இயல் இசைத் துறைகளில் நிறைந்த புலமை மிக்கவர்களே தேவாரப் பாடல்

களை இயற்றத் தக்கவர்கள். இவ்வரிய தேவார இசைப் பாக்களை இயற்றிய மூவர் முதலிகளைச் சாதாரண இசைப் பெரும் புலவர்கள் என்று கூறுதல் ஒல்லாது; அருள்ஞான இசைப் பெரும் புலவர்கள் என்றே சொல்ல வேண்டும். இவர்கள் இறைவனது திருவருளை இன்சொற்படுத்தியும் இன்னிசைப்படுத்தியும் பாடினார்கள். தேவாரம் என்னும் சொற்றொடருக்கும் இறைவன் மீது பாடப்பட்ட இசை யொழுக்கும் சொல்லொழுக்குமுள்ள பாடல் என்பது பொருள்.

தேவார இசையின் சிறப்பினை அறிந்த வடநாட்டு இசைவாணர்கள் தேவாரப் பண்கள் சிலவற்றை வட மொழி இசை நூல்களில் புகுத்தியிருக்கிறார்கள். 13-வது நூற்றாண்டில் தௌலதாபாத் தேவகிரி இராச்சியத்தில் சிம்மணர் அரசவையில் சமஸ்தான இசைப் புலவராக விளங்கிய சாரங்கதேவர், தமிழ்நாட்டிற்கு வந்து இங்கு வழங்கிவந்த தேவாரப் பண்களை நன்கறிந்து அப்பண்கள் சிலவற்றின் இலக்கணங்களைத் தாம் இயற்றிய 'சங்கீத இரத்தினாகரம்' என்னும் வடமொழி இசை நூலில் பொன்னேபோல் போற்றியிருப்பதாக இசை நூலறி ஞர்கள் கூறுகிறார்கள்.

இன்று தமிழகத்தில் வழங்கிவரும் கர்நாடக இசை தமிழ்வழி வந்ததே என்று இசை நூற்பேரறிஞர்கள் நன்கு எடுத்துக் காட்டுகிறார்கள். காலஞ்சென்ற சங்கீத கீர்த்தனாசாரியார் C. R. சீனிவாச ஐயங்கார் அவர்கள், 1927-இல் சென்னையில் கூடிய அனைத்திந்திய இசைமாநாட் டில் ஆற்றிய சொற்பொழிவில் "தேவாரத்தில் 24 தமிழ்ப் பண்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவை இன்றும் ஓதுவார் களால் பாடப்பட்டு வருகின்றன. அவற்றிற்கும் இப்போ தைய கர்நாடக இராகங்களுக்கும் நெருங்கிய ஒற்றுமைப்

பாடு காணப்படுகிறது. இருவகை இராகங்களும் ஒரு வகையே என்று சொல்லலாம்'' என்று விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். திருவனந்தபுரம் இசைச் செல்வர் T. இலக்குமணப்பிள்ளை, B. A. அவர்கள், “தமிழிசை ஏற்பாடும் ஆரிய சங்கீத ஏற்பாடும் ஒரு காலத்தில் தம்முட் சந்தித்துக் கலந்து கர்நாடக சங்கீதம் என்னும் ஏற்பாடாய்த் திரிந்தன என்பதும், அதற்கு அடிப்படை தமிழிசை ஏற்பாடே என்பதும் நன்கு விளங்கும். தமிழிசை ஏற்பாட்டில் இசை நுணுக்கம், பேரிசை, சிற்றிசை, பெருநாரை, பெருங்குருகு முதலிய இசைகள் கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த ஆரிய சங்கீத ஆசிரியராகிய பரத முனிவருக்கு முந்தியே இருந்தன என்று அடியார்க்கு நல்லார் முதலிய உரையாசிரியர்கள் குறிப்பிட்டதிலிருந்து அறிகிறோம். ஆனால், 13வது நூற்றாண்டில் இருந்த சாரங்க தேவருக்குப் பின்பு தமிழில் இசையிலக்கணம் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் இரண்டு ஏற்பாடுகளும் கலப்புண்டு தமிழ்ப்பண்கள் பல வடமொழிப் பெயர்கள் பூண்டு வடமொழியில் சங்கீத இலக்கணங்கள் எழுதப்பட்டு வந்தமையால், தமிழிசைக்குத் தனியான இசையிலக்கணம் எழுதுதல் அவசியமில்லை என்று கண்டு அவ்விலக்கணம் எழுதும் வேலை விடப்பட்டதாயிருக்க வேண்டும் என்று உய்த்துணரலாம்'' எனக் கர்நாடக இசையைக் குறித்து எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத்துறைத்தலைவர் இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களும், K. M. பாலசுப்பிரமணியம், B. A., B. L. அவர்கள் இயற்றி வெளியிட்டுள்ள 'கீதத் தமிழ்' என்னும் நூலுக்கு அளித்துள்ள சிறப்புரையில், “'நம் நாட்டின் பண்டைய இசைத் தமிழேதான் கருநாடக சங்கீதம் என்று வழங்கி வருகிறதெனப் பேரறிவாளர்கள்

கருதுகின்றூர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். இக் காலத்தமிழிசைச் சங்கச் சார்பில் சில ஆண்டுகளாக டிசம் பர் மாதங்களில் நடத்திவரும் பண் ஆராய்ச்சிகளிலிருந் தும் மேற்குறித்த அறிஞர்கள் முடிவு வலுவடைகிறது. நிற்க.

கி. பி. 9-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் மாணிக்கவாசகர். இவர் இரண்டாம் வரகுணபாண்டி யன் (862-80) காலத்தவர். திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி, திருவம்மானை, திருப்பொன்னூசல், திருப்பூ வல்லி, திருக்கோத்தும்பி முதலியவை இசைத் தமிழுக்கு இலக்கியமாகத் திகழ்பவை. ஆதலால், 9-ஆம் நூற்றூண் டின் அருள்ஞான இசைப்பெரும் புலவர் மாணிக்கவாசக ஞர் எனலாம்.

இதே 9-ஆம் நூற்றூண்டில் விளங்கிய திருப்பாணும் வார் திருவரங்கப் பெருமானைக் கண்டு உள்ளம் உருகிப் பாடிய இசைப்பாடலே அமலனுதிபிரான் பிரபந்தமாகும். ஆழ்வார்கள் கி. பி. 7-ஆம் நூற்றூண்டிலிருந்து 9-ஆம் நூற் றூண்டு வரையிலுள்ள காலங்களில் வாழ்ந்தவர்கள்; தங்க ளுடைய இசைப் பாக்களால் வைணவ பக்தி நெறியைத் தமிழகத்தில் வளர்த்தவர்கள்.

கி. பி. 10-ஆம் நூற்றூண்டுக்கு மேல் பல காலங்களில் வாழ்ந்த ஒன்பதின்மர், நாயன்மார்களைப் பின்பற்றி இசைப் பாக்களைப் பாடினர். இவர்கள் பாடியவை பதி ஞேராந் திருமுறையில் திரு இசைப்பா என்னும் தலைப் பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்கள் பெயர்கள் வருமாறு:

1, திருமாளிகைத்தேவர்: இவர் பிற்காலச் சோழ மன்னர்களுக்குக் குருவாக விளங்கியவர்.

2. சேந்தனர்: இவர் திருவீழிமிழலையில் வாழ்ந்த சி. ஞானியார்.

3. கருவூர்த்தேவர்: இவர் கருவூரிலே பிறந்ததால் கருவூர்த்தேவர் எனப்பட்டார்; முதலாம் இராசராசன் (958—1014) காலத்தவர். எனவே, இவரது காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

4. பூந்துருத்தி நம்பிகாடநம்பி: இவர் திருப்பூந் துருத்தியிலேயே பிறந்தவர். காடநம்பி என்பது இவரது இயற்பெயர். இவருடைய பாடல்கள் மிகுந்த இசைச் சிறப்புடையன. பிறர் பாடாத சாளரபாணி என்னும் பண்ணில் பாடியவர் இவர்.

5. கண்டராதித்தர்: இவர் பராந்தகச் சோழனு டைய இரண்டாம் புதல்வர்; கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருவாரூரிலிருந்து ஆட்சிபுரிந்தவர்; பல சிவாலயங்களைக் கட்டுவித்தவர்; மிக்க பத்திபூண்டவர்.

6. வேணாட்டடிகள்: இவர் வேணாட்டினர். கேரள நாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் நடுவில் இருந் தது வேணாடு. இவ்வேணாட்டில் தோன்றியதால் வேணாட் டடிகள் எனப்பட்டார். இவரது இயற்பெயர் தெரிய வில்லை.

7. திருவாலி அமுதனார்: இவர் சீகாழிக்கு அருகி லிருந்த ஆலி நாட்டினர். ஆலி நாட்டின் தலைமையூர் திருவாலி. அவ்வூரில் கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு அமுதனார் என்பது பெயர். இவ்வூர் வைணவக் குடியில் பிறந்த இவர் சிவ பக்தராகித் திருப்பதிகள் தோறும் சென்று சிவபெருமான் எழில்களை இசைப் பாட்டில் பாடி னார்.

8. புருடோத்தமநம்பி: இவரும் வைணவ மதத்திற் பிறந்து சைவராகிச் சிவபெருமான் மீது இசைப்பாடல் பாடியவர்.

9. சேதிராயர்: இவர் சேதி நாட்டை ஆண்ட குறுநில மன்னர். திருக்கோவலூரைச் சுற்றியிருந்த நாடே சேதி நாடாகும். இவர் பாடிய பாக்களும் இசைப்பாக்கள்.

இங்ஙனம் சைவ நாயன்மார்களும் 'பெரியார்களும் வைணவ ஆழ்வார்களும் இசைப் பாக்களைப் பாடித் தமிழிசையையும் பக்தி நெறியையும் வளர்த்தார்கள்.

அரும்பாடுபட்டு அரிய நூலாகிய யாழ் நூலை இயற்றித் தமிழுலகுக்களித்த காலஞ்சென்ற பேராசிரியர் விபுலானந்த அடிகளார், "சைவப்பெரியார்களின் தேவாரப் பண்களும் நம்மாழ்வாரின் திருவாய் மொழியும் இசையபிவிருத்திச் சாதனங்களாக இருந்தன. தமிழ் மொழியிலே இன்று வரையிலே அவைகளைவிட மேலான பக்திரசம் வாய்ந்த பாடல்கள் இல்லை" என்று தமது சென்னைப் பல்கலைக் கழக இசை விரிவுரையில் கூறியுள்ளார்கள். கருநாடக சங்கீதம் தமிழகத்தில் இடம்பெறும் வரையில் இப்பாடல்கள் இசையரங்குகளிலும் இசைப் பயிற்சிக்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன என்றறிக.

தென்னிந்தியாவில் 13, 14, 15, 16,-ஆம் நூற்றாண்டுகள் படையெடுப்புகளும் உள்நாட்டுக் குழப்பங்களும் நிகழ்ந்த காலம். 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முஸ்லிம் படையெடுப்புகள் நடைபெற்றன. தென்னகத்தரசுகளுக்குள் போர்கள் நிகழ்ந்தன. இத்தகைய நிலையில் நாட்டில் இசை வளர்வதற்கு வாய்ப்பு எங்ஙனம் இருந்திருக்க முடியும்? இசைப்புலவர்கள் எப்படித் தோன்றியிருக்கக் கூடும்? தங்கள் ஆதிக்க ஆட்சிப் பகுதிகளில் இருந்து இந்து சமய இசைவாணர்களை முஸ்லிம் கவர்னர்கள் வற்புறுத்தி டில்லிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குள்ள சூழ்நிலையில் அவர்கள் இஸ்லாம் சமயத்தைத் தழுவ

வேண்டியவர்களானார்கள். ஆதலால், இசைப் பயிற்சி அறவே நின்று விட்டது; இசை நூல்களும் கொளுத்தப் பட்டுவிட்டன.

இந்நிலையிலும் கி.பி.15-ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் வாழ்ந்த அருணகிரிநாதர் முருகப்பெருமான் மீது இனிய சந்தம் பொருந்திய மிக அழகிய 'திருப்புகழ்' என்னும் இசைப் பாக்களைப் பாடிக் கௌமார சமயத்தைப் பரப்பினார். இவர் 'வாக்கிற்கு அருணகிரி' என்று பாராட்டப்பட்டவர். 15-ஆம் நூற்றாண்டில் தோன்றித் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அருளிசைப் புலவர் அருணகிரிநாதராவார். இவருடைய திருப்புகழ்ப் பாக்கள் இன்றும் இசை விருந்தாக இருந்து வருகின்றன.

17-வது நூற்றாண்டில் தஞ்சை, நாயக்கர் ஆட்சியிலிருந்தது. 18-வது நூற்றாண்டில் அது மராட்டியர் வசமாயிற்று. தஞ்சையை ஆண்ட நாயக்கர்களும் மராட்டியர்களும் வேற்று மொழியினராயிருந்த காரணத்தால் பண்டைத் தமிழிசைப் பாக்கள் ஆதரவில்லாமல் மடியலாயின. புதுவகையான இசைப்பாக்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றலாயின. தமிழ்நாட்டு இசையுலகில் அமிழ்தினும் இனிய தமிழிசை மறைந்து கருநாடக இசை மலர்ந்தது. புது முறையைப் பின்பற்றி இசைப்புலவர்கள் கீர்த்தனங்களை இயற்றினார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இசைப் பாக்கள் அதற்கு முன் இருந்ததில்லை. இப்புதிய இசைப் பாக்களைச் சாகித்தியங்கள் என்பர். சாகித்தியங்களை இயற்றுவோரைச் சாகித்திய கர்த்தாக்கள் என்று கூறுவர். இச் சாகித்தியங்கள் இருவகைப்படும்: (1) உரையியல் சாகித்தியங்கள் (Recitative Compositions). (2) இசையியல் சாகித்தியங்கள். உரைநடை அல்லது சொற்கள்

மிகுந்தும் சங்கீத நடை சுருங்கியும் இருக்கும் சாகித்தியங்கள் உரையியல் சாகித்தியங்கள் எனப்படும். சங்கீத நடை மிகுந்தும் உரைநடை அல்லது சொற்கள் சுருங்கியும் இருக்கும் சாகித்தியங்கள் இசையியல் சாகித்தியங்கள் எனப்படும். இவற்றைக் கீர்த்தனைகள் என்றும் கிருதிகள் என்றும் கூறுவர். இவ்வேற்றுமையை M. S. இராமசாமி ஐயரவர்கள் மிகத் தெளிவாகத் தமது சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவில் விளக்கியுள்ளார்கள்.

## 18-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர்கள்

புதிய கருநாடக சங்கீதத்தைப் பயன்படுத்திப் பதினெட்டாம் நூற்றாண்டில் முத்துத் தாண்டவரும் அருணாசலக் கவிராயரும் கவிக்குஞ்சர பாரதியும் தமிழில் புதிய இசைப் பாக்களை (சாகித்தியங்களை) இயற்றி அழியாப் புகழை அடைந்தார்கள்.

1. முத்துத்தாண்டவர் கீர்த்தனைகள் அருமையானவை; பக்தி பாவமும் இனிய சொல்லலங்காரமும் அமைந்தவை; சங்கீத வித்துவான்கள் திறமையைக் காட்டுவதற்கு ஏற்றவை.

2. அருணாசலக் கவிராயர் (1712-1779) தரங்கம்பாடியை யடுத்த தில்லையாடியில் பிறந்து, தமது 12-ஆம் வயதில் பெற்றோரை இழந்து தருமபுர ஆதீனத்தை அடைந்து அங்கே தமிழிலக்கிய இலக்கணங்களையும் சமய சாத்திரங்களையும் பயின்றவர்; வடமொழியையும் தெலுங்கையும் கற்றவர். இவருடைய தந்தை நல்லதம்பிப் பிள்ளை; தாயார் வள்ளியம்மை. தந்தை சைனசமயத்தில் பிறந்து பின்பு சைவ சமயத்தில் புகுந்தவர். இவரை நீறுபூசிய வேளாள குலத்தினர் என்பர். கவிராயர் முப்பதாவது வயதில் திருமணம் செய்துகொண்டு காசுக்கடை வைத்து இல்வாழ்க்கை நடத்திவந்தார். ஒருசமயம் சீகாழி

சென்றபோது, அங்கிருந்த சிதம்பரத் தம்பிரான் இவருடைய பாடல் இயற்றும் திறமையைக் கண்டு வியந்து, அவ்வூரில் வீடுகட்டிக் கொடுத்து அங்கேயே வதியுமாறு செய்தார். சீகாழியிலே 25-ஆண்டுக் காலமாக வாழ்ந்து வந்த காரணத்தால் இவரைச் சீகாழி அருணாசலக் கவிராயர் என்பர். இவர் தம்மிடம் கற்றுவந்த மாணாக்கர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கித் தமது 60-வது வயதில் இராம நாடகக் கீர்த்தனை என்னும் அரிய இசை நூலை இயற்றித் தமிழ் மக்களிடம் நன்மதிப்பும் புகழும் பெற்றார். இராம நாடகக் கீர்த்தனைகள் இராமாயணக் காலட்சேபம் செய்வதற்கும் இராமாயண நாடகம் நடிப்பதற்கும் ஏற்ற முறையில் எளிய இனிய சொற்களாலாகிக் கம்பருடைய செஞ்சொற்களைப் பயிலப்பெற்று யாவரும் பாடுதற்குரிய இசையில் அமைந்தவை. இக்காரணத்தால் அக்கீர்த்தனைகள், மிக விரைவில் தமிழ்நாட்டில் பரவின. இவர் பல தனிப்பாடல்கள் பாடியிருப்பதுடன் அசோமுகி நாடகம், சீகாழித் தலபுராணம், சீகாழிக் கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களையும் இயற்றினார். இவர் 67 ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தார். இவர் இறப்பதற்கு முன்னமே இவருடைய மனைவியார் இறந்துவிட்டார்.

கவிராயர் தலையில் தாழ்வடம், இடையில் வெள்ளாடை, மேனியில் திருநீற்றுப் பூச்சு முதலிய சிவ சின்னங்கள் பூண்டு, சைவப் பண்டாரக் கோலத்தோடு வாழ்ந்தார் என்று காலஞ்சென்ற S. பவானந்தம் பிள்ளை அவர்கள் கவிராயர் வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இவரது உருவப்படம் கிடைக்கவில்லை.

3. கவிக்குஞ்சர பாரதியார் தமிழ்நாட்டுச் சங்கீதத்திற்குச் சிறந்த சாகித்தியம் (இசைப்பாக்கள்) செய்தவர்;

இராமநாதபுர மாவட்டத்தில் பார்ப்பனர் குலத்திற் பிறந்தவர்; சிவகங்கை, இராமநாதபுர சமஸ்தானங்களால் ஆதரிக்கப்பெற்றவர். இவர் அருணாசலக் கவிராயருடைய இராமாயணக் கீர்த்தனைகளைப் பின்பற்றி ஸ்காந்த புராணக் கீர்த்தனை என்னும் நூலை இயற்றித் தமிழிசை உலகில் பெரும்புகழ்பெற்றார். இக்கீர்த்தனைகள் இசைப் பயிற்சிக்கு ஏற்றவை என்று பாராட்டப்படுகின்றன.

## 19-ஆம் நூற்றாண்டு இசைப் புலவர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சியால் நிலையான அமைதி நிலவி இந்திய நாடு முழுவதும் பொருளாதாரம், கல்வி, இசை, அரசியல் முதலிய துறைகளில் பெரு முன்னேற்றமடைந்தது. தமிழ்நாட்டில் இந்நூற்றாண்டிலே செந்நாப் புலவர்களும் இசையறிஞர்களும் பலர் தோன்றி அரிய இலக்கியங்களையும் சிறந்த இசைப் பாடல்களையும் இயற்றினார்கள். இசைப் புலவர்களுள் ஆனை ஐயா, இராமசாமி சிவன், கனம் கிருஷ்ணையர், கோபாலகிருஷ்ண பாரதியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், வேதநாயகம் சாஸ்திரியார் ஆகிய இவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

1. ஆனை ஐயா தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் செம்மையாகக் கீர்த்தனைகள் இயற்றிப் புகழ்பெற்றவர்; தஞ்சை அரண்மனையைச் சேர்ந்த சங்கீதக்குழுவில் ஒருவராக இருந்தவர்.

2. இராமசாமிசிவன் என்பது இராமசாமி ஐயரின் மறுபெயர். இவர் மகா வைத்தியநாத ஐயரின் தமையனார்: இசைப் பரம்பரையில் பிறந்தவர்; தமிழ்ச் செய்யுள் இயற்றும் திறமையும் இசை இலக்கண வன்மையும் மிக்கவர்.

இவர் நகரத்தார் வேண்டுகோளால் பெரிய புராணக் கீர்த்தனை நூலை இயற்றித் திருவாவடுதுறையில் அம்பலவாண தேசிகமூர்த்திகள், மேலகரம் சுப்பிரமணிய தேசிகச் செல்வர், நவீன கம்பர் என்று பாராட்டப்பட்ட திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகிய இவர்கள் முன்னிலையில் அரங்கேற்றி, அவர்களுடைய பாராட்டைப் பெற்றவர். கோபாலகிருஷ்ண பாரதியார் இவர் காலத்தவர். சிவன் கந்தபுராணக் கீர்த்தனை நூலையும் இயற்றியுள்ளார்.

3. கனம் கிருஷ்ணையர் திரிசிரபுர வட்டத்திலிருக்கும் திருக்குன்றத்தில் ஸ்மார்த்தப் பார்ப்பனர் குலத்தில் பிறந்தவர்; இசைப் பரம்பரையில் தோன்றியவர்; போதுமான செல்வநிலையில் இருந்தவர். தந்தை இராமசாமி ஐயர். கிருஷ்ணையர் கனமார்க்கத்தைப் பொப்பிலி கேசவையாவிடம் கற்றுத் தஞ்சை அரசவையில் அரங்கேற்றிக் கனம் கிருஷ்ணையர் என்னும் மதிப்பைப் பெற்றவர். இவர் கீர்த்தனைகள் இயற்றியுள்ளார்.

கனம் என்பது ஒரு சங்கீத மார்க்கம். 'கனமார்க்கம்' என்பது மூலாதாரத்திலிருந்து கம்பீரமான ஒலியை உண்டாக்கிப் பாடுவது என்றும், தொடங்கும்பொழுது அந்த ஒலி ஹூங்கார சப்தத்தோடு எழும் என்றும், ஆரோகண அவரோகணத்தில் பலவகையான சங்கதிகள் வருமாறு பாடுவது என்றும் காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் கனராக சங்கீத மார்க்கத்தைக் கனம் கிருஷ்ணையரைப் பற்றி எழுதிய வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### 4. கோபாலகிருஷ்ண பாரதியார்

#### பல்லவி

''சிதம்பரம் போகாமல் இருப்பேனோ?
சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ?
—(சிதம்பரம்)

சரணங்கள்

பத்தியும் மனமும் பொருந்தின தங்கே;
சத்தியும் சொன்னேன்; சகலமு மிங்கே.
—(சிதம்பரம்)

ஆசையும் நேசமும் ஆனந்தம் அங்கே;
பேசலும் பாசமும் பிதற்றலும் இங்கே."
—(சிதம்பரம்)

என்னும் இப்பாடல் கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனர் கீர்த்தனையிலுள்ளது. இப்பாட்டைக் கேளாத தமிழர் இத்தமிழகத்தில் இரார். யாசிப்போர் வாயிலும் இசையரங்கு மேடையிலும், இசைத்தட்டிலும் இப்பாடலும் நந்தனர் கீர்த்தனையிலுள்ள வேறு இசைப் பாடலும் கேட்டுக் கேட்டு உள்ளம் குளிர்கிறோம்; உடற் கூச்செறிகிறோம். இத்தகைய இசைப் பாடல்களை இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதியார் நாகப்பட்டினத்துக்கு அருகிலுள்ள நரிமணம் என்னும் ஊரில் வடமப்பார்ப்பனர் குலத்தில் இராமசாமி பாரதியின் தவப் புதல்வராகப் பிறந்து தம் பாட்டனாரிடத்தும் தந்தையாரிடத்தும் இளமையில் இசைப் பயிற்சிபெற்றார்; சில காலம் ஆனைதாண்டாபுரத்திலும் சில ஆண்டுகள் முடிகொண்டானிலும் வதிந்துவந்தார். இவர் இளமையிலேயே வடமொழியை முறையாகப் பயின்று காவிய நாடகங்களைக் கற்றவர். அல்லாமலும் வேதாந்த நூல்களையும் படித்தவர்; பிரமசரிய நெறி தவறாமல் ஒழுகிப் பகற் காலத்தில் பிச்சையெடுத்து உண்டுவந்தவர். பின்னர் இவர் மாயூரத்தை அடைந்து கோவிந்தய்யர் அடிகளாரிடம் வேதாந்த சாத்திரங்களைப் பயின்று அவரைக் குருநாதராகக்கொண்டு அம்மாயூரத்திலேயே வதிந்து வரலானார்.

பாரதியாருக்கு இந்தி இசை பயில விருப்பமுண்டாயிற்று. அதனால், இவர் அக்காலத்தில் திருவிடைமருதூ

ரில், தஞ்சை அமரசிம்ம அரசரால் ஆதரிக்கப்பெற்று வாழ்ந்துவந்த இராமதாஸ் என்ற இசைப் பெரும் புலவரிடம்சென்று இந்தி இசையைக் கற்ருர்; கனம் கிருஷ்ணையரிடமும்இசைப்பயிற்சிபெற்ருர். இவருக்கும் தமிழ்ப்பயிற்சியும்இருந்தது. இவ்வளவு பயிற்சிபெற்றும் பாரதியார்இல்லற வாழ்வில் ஈடுபட்டுப் பொருள் தேடி வாழவிரும்பாது, நாள்தோறும் பிச்சை யெடுத்துண்பதும், சிவ தரிசனம் செய்வதும், கீர்த்தனைகள் இயற்றிப் பாடுவதும், கதை விரிவுரை செய்வதுமாக மாயூரத்திலே காலம் கழித்துவந்தார். ஒருமுறை இவர் திருவாரூரில் வாழ்ந்துவந்த தெலுங்குக் கீர்த்தனைப் புகழ்பெற்ற இராம பக்தரான தியாகய்யரைக்கண்டு அவருடைய நல்வாழ்த்தைப்பெற்று வந்தார்.

பாரதியார், நாகப்பட்டினத்துக் கப்பல் வணிகரும் சிவ பக்தருமான கந்தப்பச்செட்டியார் வேண்டுகோளுக்கு இணங்கி நந்தனர் கீர்த்தனை நூலை இயற்றி நாகப்பட்டினம் சென்று அங்குச் சிலகாலம் தங்கியிருந்து, நாள்தோறும் இரவில் நந்தனர் கதை விரிவுரையை நடத்திவந்தார். அடுத்த ஊராகிய பிரெஞ்சுக்காரருக்கு அக்காலத்தில் உரியதாயிருந்த காரைக்காலிலிருந்தும் மக்கள் நாகைக்கு வந்து பாரதியார் காலட்சேபத்தைக்கேட்டு இன்புற்றுச் சென்ருர்கள். காரைக்காலிலிருந்தபிரெஞ்சுத்தண்டல்நாயகம்(Collector) ஸிஸேதுரை அலுவலகத்தில் வேலைசெய்து வந்த அலுவலர் பலர் பகலில் பல நாட்களாக உறங்கி விழுந்து வேலையை நன்முறையில் கவனியாதிருந்தனர். ஸிஸேதுரை அதற்குக் காரணம் கோபாலகிருஷ்ண பாரதியார் கதைச் சொற்பொழிவை நாடோறும் சென்று கேட்டதேயாகும் என்று சிலர் வாயிலாகக் கேட்டறிந்தார். தமிழறிந்த அத்துரைமகனர் பாரதியாரைக் காரைக்காலுக்கு வரவழைத்து நந்தனர் கீர்த்தனைக்

கதைச் சொற்பொழிவாற்றச் செய்து அதனைக் கேட்டு வியப்படைந்து தாமே முன்வந்து நந்தனார் கீர்த்தனை நூலை முதல்முதலாகத் தம் பொருட் செலவில் 1861-இல் அச்சிட்டுத் தமிழுலகுக்கு அளித்தார். 1862-இல் அடுத்த பதிப்பு வெளியாயிற்று.

பாரதியாருடைய கீர்த்தனங்களிலுள்ள வர்ண மெட்டுகள் தனிச் சிறப்புடையன என்றும், சங்கீதத்துக்கு இயைந்த கமகங்களும் தாளக்கட்டும் ஒன்றாகப் பொருந்தியிருக்கும்என்றும், எளியநடையில் அமைந்துள்ள நந்தனார் கீர்த்தனங்களில் இயலுக்குரிய இலக்கண அமைதியைக் காட்டிலும் இசையமைதியே தலைமை வகிக்கும், அவற்றில் பக்தியும் ஞானமும் ததும்பிக் கொண்டிருக்கும் என்றும் இசைவல்லுநர்கள் பாராட்டுகிறார்கள்.

கோபாலகிருஷ்ண பாரதியார் 95 வயது வரை வாழ்ந்தார். இவர் கதை சொல்வதன் வாயிலாகக் கிடைத்த பொருளைக் கோயில்களில் குறிப்பிட்ட வழிபாடு செய்வதற்குக் கட்டளை நிதியாக வைத்தார்.

பாரதியார் வேறு கீர்த்தனை நூல்களையும் பாடியுள்ளார்; தனித்தனி இசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய திருநீலகண்ட நாயனார் சரிதம், இயற்பகை நாயனார் சரிதம், காரைக்காலம்மையார் சரிதம் ஆகியவை வெளிவரவில்லை. நந்தனார் கீர்த்தனை மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுடைய மதிப்புரையைப்பெற்றது. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் மாயூரத்தில் பிள்ளையவர்களிடம் இயற்றமிழ் படித்து வந்த காலத்தில் கோபால கிருஷ்ண பாரதியாரிடம் சிலகாலம் இசைப்பயிற்சிபெற்று வந்து, பிள்ளையவர்கள் சினத்துக்காளாகக்கூடாது என்று கருதி அப்பயிற்சியை விட்டு விட்டார்களாம்.

5 மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1824-89) திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களு

டைய மாணாக்கர்களுள் ஒருவர்; கோபாலகிருஷ்ணபாரதியாரிடம் இசைப் பயிற்சிபெற்றவர்; மாயூரத்தில் வட்ட நடுவராகப் (Munsiff) பணியாற்றியவர்; தனிப் பாடல்களையும் உரைநடை நூல்களையும் இயற்றியதோடு கீர்த்தனை நூலை இயற்றிய இசைப்புலவராகவும் விளங்கியவர். இவர் இயற்றிய கீர்த்தனை நூல் 'சர்வசமயக் கீர்த்தனை' என்பது. இந்நூல் எளியநடையில் இனிய இசைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. இவர் கத்தோலிக்க கிறிஸ்தவராயினும் சமயப் பெருநோக்குடையவராய்ச் சர்வ சமயக் கீர்த்தனை நூலை இயற்றினார். இவர் 65 வயதுவரை வாழ்ந்தவர். யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் இவர் காலத்தவர்.

6. இராமலிங்க அடிகள்: சாதி சமயவெறியை நீக்கி எல்லா மக்களும் அன்பு நெறியில் வாழும் பொருட்டுச் சமரச சன்மார்க்க சமயத்தைத் தோற்றுவித்த திருவருட் பிரகாச வள்ளலார் 1823-இல் தோன்றி 1874-இல் திருவுருக் கரந்தார். இவரது இயற்பெயர் இராமலிங்கம் என்பது. இவரை இராமலிங்க அடிகள் என்றும் கூறுவர். இவரும் இசைப் புலவர் வரிசையில் இடம்பெறக் கூடியவாறு நாமாவளிகளும் கீர்த்தனைகளும் இயற்றியுள்ளதைத் திருவருட்பாவில் காணலாம். எளிய இனிய இசையில் அமைந்தவை இவருடைய கீர்த்தனைகள்.

7. அண்ணாமலை ரெட்டியார்: காவடிச் சிந்து பாடிப் புகழடைந்த இசைப் புலவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த சென்னிகுளம் என்னும் சிற்றூரில் சென்ன ரெட்டியார், ஓவு அம்மாள் என்ற இருவருக்கும் அருந்தவப் புதல்வராய் 1861-இல் தோன்றித் தக்க வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து அங்கு ஓராண்டுவரை இருந்து முன்னமே கற்ற தமிழறிவை மேலும் பெருக்கிக் கொண்

டார். சேற்றூர் ஜமீன்தார் முதலில் சில காலம் இவரை ஆதரித்தார். ரெட்டியார் பின்பு ஊற்றுமலை இருதயாலய மருதப்ப தேவரிடம் அரண்மனைப் புலவராக இருந்தார். இருபத்துநான்காவது வயதில் ரெட்டியார் குருவம்மாள் என்ற குலமங்கையை மணம் செய்துகொண்டு வீரகேரளம்புதூரில் குடியேறி வாழ்ந்து வந்தார். இங்ஙனம் வாழ்ந்து வந்த காலத்தில் இருமல் நோய் இவரைக்கைக் கொண்டது. ஊற்றுமலை ஜமீன்தார் இவரைச் சென்னிகுளத்துக்கு அனுப்பிவைத்தார்; அங்கே ரெட்டியார் 29-வது வயதில் 1850-ஆம் ஆண்டு நிலவுலக வாழ்வை நீத்தார்.

முருகன் திருக்கோவில்களுக்குக் காவடி எடுத்துச் செல்லும் அன்பர்களுடைய விருப்பத்திற்கு இணங்கி ரெட்டியார் பல்வேறு சந்தங்களில் பாடியவைகளே காவடிச்சிந்துப்பாடல்களாகும். சொல் எளிமை, பொருள் இனிமை, ஓசை நயம் இவற்றால் இக்காவடிச் சிந்துப் பாடல்கள் கல்லார் கற்றார் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு விளங்குகின்றன.

8. வேதநாயக சாஸ்திரியார் திருநெல்வேலிச் சைவர்; ஸ்வார்ட்ஸ் பாதிரியாரால் கிறிஸ்தவராகித் தஞ்சையில் வாழ்ந்தவர்; புரட்டெஸ்டண்டு கிறித்தவத் திருச்சபையைச் சேர்ந்தவர்; மிகுந்த தமிழ்ப் பயிற்சியுற்றவர். ஏசுநாதர்மீது இவர் பாடிய இசைப்பாக்கள் உண்டு. புரட்டெஸ்டண்டு திருச்சபைக் கிறிஸ்தவ அன்பர்கள் சாஸ்திரியார் இசைப்பாடல்களை வழிபாட்டுக்குப் பயன்படுத்துகிறார்கள்.

## 20-ஆம் நூற்றாண்டு இசைப்புலவர்கள்

இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாடெங்கும் காந்தியடிகளார் காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை பூண்டதி

லிருந்து விடுதலை இயக்கம் ஓங்கி வளர்ந்தது. தமிழ் நாட்டில் விடுதலைப் பயிரைத் தமது இசைப் பாக்களால் செழித்து வளரச் செய்த இசைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் என்பதைப் பலரும் நன்கறிவர். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களும் தம் இசைப்பாவால் விடுதலை இயக்கம் வளரத் தொண்டாற்றியவர். தேசிக விநாயகம் பிள்ளை இயற்றமிழ்க் கவிஞராக விளங்கியதோடு பல பக்திக் கீர்த்தனைகளைப் பாடி இசைப்புலவரான சிறப்பையும் பெற்றார். சுத்தானந்த பாரதியாரும் பலபல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். K. M. பாலசுப்பிரமணியம் B.A., B.L. அவர்கள் பக்தி வகையில் 'கீதத் தமிழ்' என்னும் நூல் இயற்றியுள்ளார்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தொடங்கி வளர்த்துவந்த தமிழிசை இயக்கம் மறைந்த தமிழ்ச் சாகித்தியங்களுக்குப் புத்துயிர் அளித்தது; புதிய சாகித்திய கர்த்தாக்கள் தமிழகத்தில் தோன்ற ஆக்கம் அளித்தது.

## மறுமலர்ச்சிக்கால இசைப்புலவர்கள்

*பாரதிதாசன்:* மறுமலர்ச்சி வானில் விளங்கும் ஒளி விளக்காக இருப்பவர் புரட்சிக் கவிஞர் புதுவை பாரதிதாசன் ஆவர். இவர் சுப்பிரமணிய பாரதியாரின் வழிமுறையில் வந்தவராயினும், இசைப் பாக்களைப்பக்திநெறியில் பாடாமல் சங்ககால நெறிபற்றி இன்ப நெறியில் பாடத் தொடங்கினார். இவரது இசையமுது முதலிய இசைப்பா நூல்கள் மறுமலர்ச்சி அன்பர்களால் பெரிதும் பயிலப்படுபவை. மறுமலர்ச்சிக்கால இசைப்புலவர்களுள் தலைசிறந்து விளங்குபவர் இவரே எனலாம்.

## முடிவுரை

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தமிழ்ப் பேரறிஞராக விளங்கியதோடு இளமை தொட்டு இசை

ஞானத்திலும் தேர்ச்சிபெற்றவர்களாக இருந்தவர்கள். அவர்கள் பெரும்பாலான தமிழிசைப் புலவர்களைப் பற்றி நடுநிலையோடு கூறியிருப்பதை இங்குப் பயன்படுத்தி இக்கட்டுரையை முடிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். "தமிழ்க் கீர்த்தனங்களுள் பெரும் பாலன இயற்றமிழ் இலக்கண அமைதியில்லாதனவாக இருக்கின்றன. சங்கீதப் பயிற்சியில் தேர்ச்சியுள்ள பெரியோர்களுள் பலர் தம்முடைய முழுநோக்கத்தையும் சங்கீதத்திலேயே நிறுத்திவிடுவதால் அவர்களுடைய இயற்றமிழ் அறிவு சுருங்கியதாக அமைகின்றது. தாமே கீர்த்தனங்களை இயற்றும் பல சங்கீத வித்துவான்கள் எதுகையும் மோனையும் பொருத்தமாக இருந்தால் போதும் என்ற அளவிலே தங்கள் கீர்த்தனங்களை அமைத்திருக்கின்றனர். சிலரே இயற்றமிழறிவும் நன்கு பெற்று நன்மணம் பெற்ற பொன்மலர் போன்ற கீர்த்தனங்களை இயற்றியுள்ளார்கள்." ஐயரவர்கள் கூறியது இது. இனி வரும் இசைப் புலவர்கள், இவ்வறிவுரையைநன்குணர்ந்து, தமிழ்மொழியிலும் போதிய அளவு தேர்ச்சி பெற்று, நல்ல தமிழில் இசைப்பாக்கள் இயற்றித் தமிழ்ப் புலவர்களின் நன்மதிப்பையும் அழியாப் புகழையும் அடைய முயல்வார்களாக!

# தமிழர் மருத்துவக் கலை

பண்டித எஸ். எஸ். ஆனந்தம்
தமிழ் மருத்துவச் சாலை, சென்னை.

உலகில் மக்கள் இனம், என்று தோன்றியதோ அன்றே மக்களுடன் பிணி, மூப்பு, சாக்காடுகளும் எதிர்பாரா இன்னல்களும் தோன்றிவிட்டன. அதற்குப் பரிகாரங்களை அனுபவத்தில்கண்ட நம் முன்னோர்கள் அவைகளைப் பரம்பரையாய்க் கையாண்டு வந்தனர். மக்கள் பேசிய ஒலி வடிவமாக மொழிக்கு வரிவடிவமாய் எழுத்து ஏற்பட்ட பின்னர் அவர்கள் கண்ட உண்மைகளையும் அறிவு அனுபவங்களையும் அவர்களின் பின் சந்ததியாகிய நமக்கு நூல்களாக்கி வைத்தனர். அந்நூல்களில் மருத்துவக் கலையை முதன்மையானதெனக் கூறலாம்.

மக்கள் நோயின்றி உடல் உரத்துடன் நெடுநாள் நலமாய் வாழ்ந்து வீடுபேற்றை அடைவதற்கான வழிகளைக் கூறுவதே மருத்துவக் கலையாகும்.

மூவாசையில் மூழ்கி முக்குணவயப்பட்ட ஆறறிவுள்ள மக்களுக்கு நோய்கள் மிகுதியாய் வருகின்றன. நோய்கள் உடம்பைப் பற்றியும், உள்ளத்தைப்பற்றியும் வருவதென இருவகைப்படும். வயது, செய்தொழில், வாழும் நிலத்தியல்பு, பருவ காலங்களுக்கேற்ப, உணவு உடை தொழில் முதலியவற்றைச் சரிப்படுத்திக்கொள்ளாததால் வரும் உடற்பிணியையும், அவா மிகுதியால் வரும் கவலை, அச்சம், சினம் முதலியவைகளால் ஏற்படும் உள்ளப் பிணிகளையும்

வராமல் தடுப்பதும் வந்த நோய்களைப் போக்குவதும் மருந்தாகும்.

மருந்து பற்றித் திருமூலர்,

"மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனிநோய் வாரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே"

என்று குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர்,

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்
றப்பால்நாற் கூற்றே மருந்து"

என்பதால் மருந்தென்பது ஒரு தனிப்பொருளன்று என்பது வெளியாகிறது.

பிணியாளி, பிணியைத் தீர்க்க முன்வந்த மருத்துவன், அவன் கையாளும் மருந்து, மருத்துவன் சொன்னபடி நோயாளிக்கு மருந்து உணவு முதலியவை கொடுத்து அருகிலிருந்து துணைபுரியும் (நர்சு) துணையாள் இந்த நான்கில் பிணியாளிக்கு நான்கு குணம், மருத்துவனுக்கு நான்கு குணம், அவன் கொடுக்கும் மருந்துக்கு நான்கு குணம், துணையாளுக்கு நான்கு குணம் ஆகப் பதினாறு குணங்களும் கண்டு மருத்துவம் செய்யப்பட்டால் ஒருபிணியாளி பிணி நீங்கிப் பிழைக்கும் வாய்ப்பு உண்டாகும்.

## மணி மந்திரம் மருந்து

தமிழ் மருத்துவக் கலையில் மணி, மந்திரம், மருந்தென மூவகை முறைகளிருக்கின்றன. இக்காலத்தில் முன் இரண்டு முறைகளும் மறைந்து கிடக்கின்றன. அதனால் இக்கால மக்கள் உடல் உரமின்றி நோய்வாய்ப்பட்டு விரைவில் மாளுகின்றார்கள். அப்பர் அடிகள்,

"பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானை
பிரிவிலா அடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை மந்திரமும்
தந்திரமும் மருந்துமாகித்
தீராத நோய் தீர்த்தருள வல்லான் தன்னை"

எனவும் தாயுமானார்,

'மணிமந்திர மாதியால் வேண்டுசித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ"

எனவும், இராமலிங்கவள்ளலார்,

"மருந்தறியேன், மணியறியேன், மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்"

எனவும், மருத்துவன் இலக்கணம் என்னும் நூல்,

குணங்கள் குறிகள் நாடியினால் குறித்து மனத்தின்
திடமதனால்
பிணங்கியேறும் பிணிபலவும் பின்முன் கண்டுதானறிந்து
வணங்கு மருந்தால் மந்திரத்தால்"

எனவும் கூறியுள்ளமை கொண்டு மணி மந்திரம் மருந்து என்னும் மும்முறைகளை அறியலாம்.

மக்கள் நலமாய் வாழ்வதற்கான தமிழ் மருத்துவக் கலைகளிலுள்ள மணி, மந்திர, மருந்தெனும் மூவகை முறைகளில் முன் இரண்டு முறைகளில் மறைந்து கிடக்கும் மணி, மந்திரமெனும் பொருளைப் பற்றி நமக்குத் தெரிந்த வரையில் விளக்கிக் கூற வேண்டியது கடமையாகும்.

**மணி**

மணி என்பது காலம். காலத்தை அளப்பது தினமணியாகிய கதிரவனேயாகும்; கதிரவனாகிய விண்மணி வெளிப்

பட்டு நம் கண்மணியிற் கலந்தாலன்றிப் புற இருள் நீங்கிப் பொருள்களை நாம் காணவியலாது. "கதிரவன் ஒளியே யன்றிக் கண்ணுக்கோர் ஒளியுமில்லை." ஞாயிற்றின் ஒளி காலை, மாலை சிறிது நேரமாவது நமது கண்ணிலும் உடம்பிலும் கலத்தல் வேண்டும். அதனால் நமது கண்ணொளி கெடாமலிருப்பதோடு, தலையிலுள்ள மூளையும் பலப்படுகிறது; நினைவு வன்மையுண்டாகிறது; இளமையில் நரைக்காது; மயிர் உதிராது; தலை வழுக்கை ஏற்படாது.

"ஆதித்தனுக்கு மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து செய்வீர்
ஆதித்தனுதித்த மூன்றே முக்கால்
அறிந்து பிணிக்கு மருந்து கொள்வீர்
ஆதித்தன் சாட்சியாய்ப் பிணிதீரும்
அயனம் விருத்தமும் வாராதே"

என ஆதித்தன் என்னும் ஞாயிற்றைப் பற்றி மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ளது. வேதாந்த சைவ சித்தாந்த சமய தத்துவ நூல்களில் மணி மந்திரம் மருந்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

மணி என்றால் மனத்தை ஒன்றில் நிறுத்தி ஒரேநாமத்தைப் பலகால் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் செபம் செய்கிறவர்கள் கையில் பிடித்து எண்ணும் மணிக்கோவையை (செபமாலை) மணி என்றும், இரசத்தை மணியாகக்கட்டுவது இரசமணி என்றும் பலர் கூறுவர். அவை பொருந்தா. உடம்பில் ஆடையின்றிச் சிறிதுநேரம் சூரிய ஒளி உடம்பில் படும்படி காய்வதால் உடம்பிலுள்ள வியர்வைக்கால் மயிர்க்கால்கள் வழியே கதிரவன் ஒளி ஊடுருவிச் சென்று உடம்பிலுள்ள செந்நீர் தூய்மையடைகிறது. நோயணுகாமல் காப்பாற்றுகிறது. உள்ள நோய்

ஒழிகிறது. இம்முறைகளை அனுபவத்தில் கண்ட நம்முன்னோர்கள் காலை மாலை ஆறு, குளம், கிணறு முதலிய நீர் நிலைகளில் மூழ்கிக் குளித்தவுடன் கொஞ்ச நேரமாவது சூரியனைக் கண்ணால் பார்த்து உடம்பிலும் வெய்யில் படும்படி காய்ந்தார்கள். கண்ணும் கருத்தும் கெடாமல் உடல் வன்மை நினைவு வன்மையோடு நெடுநாள் நலமாயிருந்தார்கள்.

## ஞாயிறு வழிபாடு

தமிழர் உடல்நல முறையும், சமயமும் ஒன்று கலந்து விட்டன. நம் முன்னோர்கள் காலை, மாலை வழிபாடு செய்யாமல் உணவு உண்பதில்லை. ஆண், பெண் இருபாலாரும் காலையில் கிழ்த்திசையில் ஞாயிறு கண்ணுக்குத் தெரிந்தாலும் கண்ணுக்குத் தெரியாமல் மேகத்தால் மறைக்கப்பட்டிருந்தாலும் ஞாயிற்றின் ஒளிவட்டத்தை அகக்கண்ணால் பார்த்து மண்டியிட்டு முழங்காலில் நின்று இரண்டு கைகளையும் கீழே ஊன்றிக் குனிந்து நிலத்தில் நெற்றி படும்படியாகத் தலையைக் கீழே வைத்தும், பின்னர்த் தலை நிமிர்ந்து முழங்காலில் நின்று கைகளைத் தலைக்குமேல் தூக்கி இரண்டு கைகளையும் கூப்பித் தொழுதும், பின்னர்த் தலைகுனிந்து நெற்றி நிலத்தில் படும்படி தலை வணங்கியும், இப்படிப் பல தடவை செய்து வழிபடுவார்கள். அப்படி வணங்குங் காலத்தில் தலை குனியும்போது மூச்சை மெல்ல இழுத்து உள்ளே நிறுத்தியும், குனிந்து தலையைக் கீழே வைக்கும்போது உள்ளே நிறுத்திய மூச்சை மெல்ல வெளியே விட்டும் வழிபடுவார்கள். இதனால் அவர்கட்கு உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி இரண்டும் நடைபெறுவதோடு மந்திரத்துக்குரிய மனப் பயிற்சியும் நடைபெறுகிறது. மந்திரத்தைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

மணியாகிய ஞாயிறு வழிபாடு சுமார் எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்வரை நம் முன்னோர்கள் செய்துவந்தார்கள்.

இன்று நாம் மருத்துவக் கலையைச் சேர்ந்த நல்லொழுக்கமாகிய அப்பழக்கங்களை அநாகரிக மூடப் பழக்கமெனப் புறக்கணித்துக் கைவிட்டுவிட்டோம். நம் முன்னோர்கள் பலர் நோயின்றி நூறாண்டுக்கு மேல் வாழ்ந்து சாகுங் காலத்திலும் நோய்வாய்ப்படாமல், "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவிழந்து ஐமேலுந்தி அலமந்து" உயிர் போகாமல் நல்லறிவோடு தூங்குவதுபோல் உடலையும் இம்மண்ணையும் விட்டு விண்ணிற் கலந்தார்கள்.

நமது நாட்டில் நம்முடன் பிறந்து நம்முடன் வாழும் முகம்மதியரெனும் "இஸ்லாமான சகோதரர்கள்' இப்பழக்கங்களில் சிலவற்றை நாள்தோறும் காலந்தவறாது செய்கின்றார்கள். அவர்கள் வீட்டைவிட்டு இரயிலில், கப்பலில் பயணம் சென்றாலும், வீதிகளில் நடந்து சென்றாலும், வியாபாரம் செய்துகொண்டிருந்தாலும்,வேறெங்கும் அலுவல் பார்த்துக்கொண்டிருந்தாலும் குறிப்பிட்ட நேரத்தில் வழிபாடு செய்கின்றார்கள். நம்மவர்கள் அவர்களைப் பார்த்து. "நாகரிகம் தெரியாதவர்கள்" என எண்ணுகிறார்கள். இஸ்லாமானவர்கள் நம்மைவிட வலிவானவர்களாகவும் நோய் குறைந்தவர்களாகவும் காணப்படுவதற்கு அவர்கள் கொண்டுள்ள இந்நற்பழக்கமே காரணமாகும்.

### மந்திரம்

மனத்தை உரப்படுத்துவது, அலையு மனத்தை அகத்தடக்குவது, ஒரு நாமத்தையோ, ஓர் உருவத்தையோ, இடையறாது நினைப்பது மந்திரம். "சிவாய நமவென்று

சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" என்பர் பெரியோர். காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளையும் மந்திரம் செபிக்கப்பெறும். தனிந்திருந்து கண்ணை மூடிக்கொண்டு கருத்தை ஒன்றில் நிறுத்த உவவுவது மந்திரம். மந்திரத்துக்கும் மூச்சுக்கும் தொடர்புண்டு. மூச்சுப் பயிற்சி மந்திரத்தோடு செய்யப்பெறும்.

### திருமந்திரம்

நாசிக்கு அதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்யும்
தேகத்திற் கென்றும் சிதைவில்லை காணே!

வாசிவா வென்று வாசியில் ஊடாடி
வாசியை உள்ளே வைத்துநீ பூசித்தால்
வாசியும் ஈசனும் மருவி ஒன்றாகும்
வாசியைப்போல் சித்தி மற்றேது மில்லையே!

மனமடங்க வாசி அடங்கும்
வாசி அடங்க மனமடங்கும்.

மந்திர சக்தியே மனோசக்தி, மனோசக்தியே ஜீவசக்தி, ஜீவசக்தியே தேகசக்தி.

### மூவகைக் குற்றம்

திரிதோஷம் என்னும் வாத, பித்த, சிலேத்துமம் என்னும் (கவம்) இம் முப்பொருள்களின் ஏற்றக் குறைவால் வருவதே நோய் என்பது தமிழ் மருத்துவக் கலையின் அடிப்படை. இதைச் சிறிது விளக்குவோம்.

அண்டத்திலுள்ள பஞ்சபூதமெனும் ஐம்பெரும் பொருள்களாகிய நிலம், நீர், தீ, வளி, வான் என்பவற்றுள் நமது உடம்பில் உயிராயிருந்து உடம்பை இயக்கிச் செயற்

படுத்துவது வளி, தீ, நீர் எனும் முப்பொருள்களேயாகும். ஐம்பெரும் பொருள்களில் தம் நிலையில் மாறுபடாதன மண்ணும் விண்ணும். நடுவிலுள்ள முப்பொருள்கள் தம் நிலையில் அடிக்கடி மாறும். இவைகள் அண்டத்தில் வியாபித்துள்ளதேபோல் பிண்டமாகிய நமது உடம்பிலும் வியாபித்துள்ளன.

வளி, தீ, நீர் இவையே வாத, பித்த, சிலேத்துமமென மருத்துவ நூல்களில் கூறப்படுகின்றன. இம் முப் பொருள்கள்உயிருள்ளபிராணிகளைஎல்லாம்செயற்படுத்து வதோடல்லாமல் உயிர் இல்லாத பொறிகளாகிய இரயில், கப்பல், மோட்டார்கார், ஏரோப்பிளேன் முதலியவைகளை யும் இயக்குகின்றன. காற்று, தீ, நீர் மூன்றும் தன்னிலை யில் மிகாமல் குறையாமல் இருக்கிற வரையில் மக்கள் உடல்நிலையும் சரியாயிருக்கிறது. மற்றப் பொறிகளும் சரியாய் இயங்குகின்றன. அண்டத்திலும் முப்பொருள் களில் ஏதாவது ஒன்று மிகுந்தாலும் குறைந்தாலும் ஆபத்தாயிருக்கிறது. ஐம்பெரும் பொருள்களில், நிலமும், வானும் மட்டும் தன் நிலையில் மாறுபாடில்லாமலிருப்ப தால் அதையே ஐந்துக்கு இரண்டு பழுதில்லை எனப் பெரியோர் கூறுவர். மக்கள் நோயின்றி வாழ்வதற்கும் நோயால் துன்பப்படுவதற்கும் நம் உடம்பில் வளி, தீ, நீர் என்னும் முப்பொருள்கள் மிகுதல் குறைதலே காரண மாகிறது. இதனால் முப்பொருள் குறை நிறைகளுக்குத் “திரிதோஷ”மெனப் பெயரிட்டனர்.

“மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று”

என வள்ளுவரும் கூறுகின்றார். உடம்பில் முப்பொருள் களை மிகுதல் குறைதலின்றி வைத்து நோயணுகாமல் வாழும் வகைகள் பற்றித் தமிழ் மருத்துவ நூல்களில்

விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழ் மருத்துவம் இயற்கையோடு பெரிதும் ஒத்தியங்குவது. ஏற்றபடி அதன் சிறப்புகளை உணர்ந்து போற்றும் திறம்தான் தமிழ் மக்களிடையில் இல்லை.

### மருந்து

நிற்க, மேற்கூறிய முப்பொருள்களுக்குள் முதற் பொருளும், பெரும்பொருளும், வலிய பொருளுமாவது வளியேயாகும். இவ்வளியில் அடங்கியதே ஏனைய தீயும் நீரும். இந்த வளியாகிய பிராணவாயுவே நமது நாசியின் வழியே உட்புகுந்து வெளிப்போந்து உயிராய் விளங்குகிறது. இந்த உயிரைக் கவனித்து வளர்க்கும் பயிற்சிக்கே மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) எனப் பெரியோர் கூறுகின்றார்கள்.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்துக்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை;
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளருக்குக்
கூற்றை உதைக்கும் குறிஅது வாமே"

என்கிறார் திருமூலர்.

முற்காலத்தில் நமது பெரியோர்கள் மூச்சுப் பயிற்சியைக் காலை, நண்பகல், மாலை மூன்று வேளையும் தவறாது செய்துவந்தார்கள். ஆதலால் நோயின்றி உடல் உரத்துடன் நூறாண்டுக்கு மேல் வாழ்ந்தார்கள்.

பிராணாயாமம் எனும் மூச்சுப் பயிற்சி செய்யும் முறையை எனது தந்தையிடத்தில் தெரிந்துகொண்டதையும், நூல்களில் கண்டதையும் விரிவஞ்சி இதில் எழுதாமல் விடுகின்றோம். உயிர் நலத்திலும் உடல் நலத்திலும் அக்கறையுள்ளவர்கள் அதைத் தக்கவர்கள் வழி அறிந்து செய்து நலமடைவார்களாக! தமிழ் மருத்துவக் கலை

மேற்கூறிய மணிமந்திரங்களோடு இம்மூச்சுப் பயிற்சி முறைகளையே இயற்கைப் பெருமந்தாகக் கொண்டு போதிக்கின்றது. ஏனைய மருந்துகள் நான்காம் பகுதியே.

தமிழ் மருத்துவ நூல்களில், உடம்பில் எழுபத்திரா யிரம் நாடி நரம்புகள் உள்ளன வென்றும், அவற்றில் பத்து நாடி முதன்மை என்றும், பத்தில் மூன்று நாடி முதன்மை எனவும், நாழிகை ஒன்றுக்கு முந்நூற்றறுபது மூச்செனவும், நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்செனவும், 5 நாழிகைக்கு-இரண்டு மணி நேரத்துக்கு-ஒரு முறை வலப்புற மூக்கிலிருந்து இடப்புற மூக்குக்.தும் இடப்புற மூக்கிலிருந்து வலப்புற மூகக்குக்கும் சரம் மாறுகிறதெனவும் கூறப்பட்டுள்ளது. வலப்புற மூக்கில் நடப்பது இடகலை எனவும், வலத்திலிருந்து இடப்பக்கம் மாறுவதற்கு இடையில் இரண்டு மூக்கிலும் கொஞ்ச நேரம் மூச்சு நடப்பது சுழிமுனை எனவும் இடப் பக்கம் நடக்கும்போது பின்கலை எனவும், வலப்பக்கம் நடப்பது சூரிய கலை வெப்ப நாடி எனவும், இடப் பக்கம் நடப்பது சந்திர கலை தட்பநாடி எனவும் கூறுவர்.

மூச்சு இயங்கும் வகையைக் கொண்டே இன்ன நோய் வரும் என்பதை முன்னரே அறிந்து ஆவன செய்து கொள்ளவும் நம் முன்னோர் அறிந்திருந்தனர் என்று தெரி கிறது. விஞ்ஞான வசதி மிக்க இந் நாளில் இன்னும் காணுத பல நுட்பமான உடம்பின் அமைப்புகளை எல் லாம் நம் முன்னோர் மிகப் பழைய நாளிலேயே கண்டி ருக்கின்றனர். அவைகளை எல்லாம் புறக்கணிக்காது ஆராய்ந்து போற்ற வேண்டும். நம் புறக்கணிப்பால் எவ்வளவோ அரும்பெருங்கலை நூல்கள் அழிந்துவிட்டன.

இருக்கின்ற தமிழ்க்கலை நூல்களையேனும் திரட்டித் தக்க தமிழ் அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்து பயன்

படுத்திக் கொள்ளத் தமிழ் மக்களும் ஆட்சியும் முனைய வேண்டும்.

**வார சரம்**

"வெள்ளி வெண்திங்கள் விளங்கும் புதன்இடம்
ஒள்ளிய மந்தன் இரவி செவ்வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறைஇடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே."

என்னும் திருமந்திரப் பாடலால் வெள்ளி, திங்கள், புதன் இக்கிழமைகளில் விடியற்காலம் ஐந்து மணியிலிருந்து ஆறு மணிக்குள் இடப் பக்கம் மூக்கில் சரம் (மூச்சு) நடைபெறும் எனவும், சனி, ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் வலப் பக்கம் மூக்கில் சுவாசம் நடைபெறுமெனவும், வியாழக்கிழமை மட்டும் சந்திரன் வளர்பிறைக்காலத்தில் இடப்பக்கத்திலும், தேய்பிறைக் காலத்தில் வலப் பக்கத்திலும் நடைபெறுமெனவும் அறிகின்றோம். பழைய நாளில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் மருத்துவர்கள் அதன்படி நடப்பதையும் கட்டாயம் கவனித்து வந்தார்கள்.

இப்போது நாமும் நம் மூச்சு இம்முறையில் இயங்குவதைக் காணலாம். மாற்றமிருந்தால் உடலில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அறிந்து, நுட்பமாக உடம்பைப்பரிசோதித்து நோய்வராமல் காத்துக்கொள்ளலாம். தமிழ் மருத்துவக்கலை, நோய்க்கு மருந்து தேடுவதோடு நிற்காமல், நோய் வருமுன் அறிந்துகாக்கும் முறைகளையும் நன்றாகக் கூறுகிறது. ஐந்து நாழிகைக்கு-இரண்டு மணி நேரத்துக்கு - ஒருமுறை நாசியில் வாசி மாறி மாறி நடைபெறுமென்று மேலே குறிப்பிட்டோம். வலப்புற மூக்குத் துளையில் சரம் நடைபெறுவதைச் 'சூரியநாடி' எனவும், இடப்பக்கம் நடைபெறுவதைச் 'சந்திரநாடி' எனவும்

குறிப்பர். வலப் பக்கம் மூச்சு நடைபெறும்போது இன்னின்ன வேலை செய்வது நலமெனவும், இடப் பக்கம் மூச்சு நடைபெறுங்கால் இன்ன வேலைகள் செய்யவேண்டுமெனவும் கூறுவர்.

## பழைய தமிழ் மருத்துவர்கள் திறம்

பழைய நாள் மருத்துவர்கள் பகல் இரவு சூரிய சந்திர நட்சத்திரங்களைப் பாராமலும், கடிகாரம் எனும் காலங்காட்டியைப் பாராமலும், இருக்கும் இடத்திலிருந்து மூக்கு முனையில் நடைபெறும் மூச்சைப் பார்த்தே இரவு பகல் மணி சொல்லுவார்கள்; என்னுடையபாட்டனரிடத்திலும் தந்தையிடத்திலும் இவ்வரியசெயலை நேரில் பார்த்தேன்; இச்சரப் பயிற்சியால் தன்னிடம் வரும் நோயாளிக்கு நோய் தீரும், தீராதெனவும், பிழைப்பான் பிழைக்க மாட்டானெனவும் கூறினர்கள்; நோயாளியை வந்து பார்க்கும்படி மருத்துவனை அழைக்கவரும் ஆண் பெண்களையும், அவர்கள் வந்து நிற்கும் திசைகளையும், அவர்கள் வாயிலிருந்து வரும் முதற் சொல்லையும், அச்சமயம் மருத்துவனுக்கு மூக்கில் நடக்கும் சரத்தையுங்கண்டு நோயாளியின் நிலையைத் தெரிந்துகொள்வார்கள்; முற்காலத்தில் மருத்துவர்களும் பெருமக்களில் பலரும் வீட்டை விட்டு வெளியே புறப்படும்போது மூக்கில் விரல்வைத்துச் சரத்தைப் பாராமல் புறப்படமாட்டார்கள்; நீரில் தலைமுழுகு முன்னும் உணவு உட்கொள்ளு முன்னும் வலப் பக்கம் நாசியில் சுவாசம் (சூரியனில்) நடைபெறுகிறதா என்பதைக் கவனிப்பார்கள்; சோதிடமும் பார்ப்பார்கள்; வானத்திலுள்ள நவக்கிரகங்களின் உச்சநிலையைப் பற்றிக் கவனித்துச் சூரியனைக் காலை மாலை கண்ணால் பார்ப்பதுபோல் சந்திரனையும் முக்கியமான நட்சத்திரங்களையும் இரவில் பார்ப்பார்கள். நோயாளியின் சாத

கத்தையும் பார்ப்பார்கள்; இவைகளை எல்லாம் பார்த்து மருத்துவம் செய்வதுதான் இயற்கை மருத்துவம். அதில் தான் பயன் மிகுதி. தமிழ் மருத்துவம் அப்படிப்பட்டது. கிரகமெனும் ஞாயிறு மறைவு மதிமறைவு நேரத்தில் உண்ணாமல் ஓர் அலுவலும் பண்ணாமல் தனித்திருந்து பேசாமல் தியானம் செய்யும்படி தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. அந்நேரத்து ஒளியில் பலவகைக் கெடுதல் இருப்பதே அதற்குக் காரணம். உலோகங்களைச் செந்தூர பஸ்பங்களாகச் செய்கின்ற பழக்கத்தால் செம்பை வெள்ளியாகவோ பொன்னாகவோ செய்யும் இரசவாத வித்தையும் பழைய தமிழ் மருத்துவர்களுக்குத் தெரிந்திருந்தது. அதனால் அவர்கள் இக்காலம் போல் பெரும்பாலும் பணத்துக்காக மருத்துவம் செய்யாமல், ஏழை எளியவர்களுக்கு இலவசமாகவே மருத்துவம் செய்வார்கள். மருத்துவர்கள் பிணியாளர்களைப் பார்க்கும்போது வெறுந்தரையிலிருந்து நோயாளரைத் தொட்டுப் பார்ப்பதால் நிலக் கவர்ச்சியால் மருத்துவனுடைய தேக காந்த சக்தி நோயாளிக்கும் நோயாளியின் தேக காந்த சக்தி மருத்துவனுக்கும் பரவுகிறதென்பதை அறிந்து, தற்காப்புக்காக நோயாளியைப் பார்க்கும்போது வேறொன்றிலும் அமராமல் மரப்பலகை (மணை) மீது அமர்ந்துதான் பார்ப்பார்கள். நோயாளியை வெறுங்கையால் தொட்டுப் பார்க்காமல் தனது கைக்கும் நோயாளி உடம்புக்கும் நடுவில் மெல்லிய பட்டுத் துணியைப் பிரித்துப் போட்டுப் பார்ப்பார்கள். மரப் பலகைக்கும் பட்டுத் துணிக்கும் நிலக்கவர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் இருக்கிறதென்பதை நம் முன்னோர்கள் அக்காலத்திலேயே கண்டிருந்தார்கள். இன்றும் வயதானவர் பலருக்கும் கிராமங்களில் வாழ்பவர் சிலருக்கும் இது தெரியும். இன்று மின்சாரத்தில் வேலை செய்கிறவர்களிடம் இதைக் காண்கிறோம்.

இவை நிற்க, ஆங்கில ஆட்சிக்குமுன் தமிழ்நாட்டில் பரம்பரையாய்த் தமிழ் மருத்துவக் கலையைத் தந்தை யிடத்திலும் குலகுரு முறைப்படியும் அங்கங்கே பலர் கற்றுக் கையாண்டு வந்தார்கள்.

அக்காலத்தில் தமிழ் மருத்துவர்கள் தேக தத்துவ நூல், நோயைப் பற்றிய நூல், நோயணுகா விதி, இரண மருத்துவம், உணவுப் பொருள் மருத்துவ நூல், விஷங் களை நீக்கும் நஞ்சு நூல், ஞானசர நூல், சோதிட நூல் முத லிய பல நூல்களைக் கற்றறிய வேண்டியதோடு ஆசிரிய னோடு 12 ஆண்டு பழக வேண்டும். முப்பத்தைந்து ஆண்டு களுக்கு மேல்தான் தனியே மருத்துவம் செய்யவேண்டும் என விதியிருந்தது. இப்போது அப்படிச் செய்கிற தமிழ் மருத்துவரும் இல்லை; செய்விக்கிற திட்டங்களும் இல்லை. மருத்துவத் துறையிலும் வெளிநாட்டு மருத்துவ முறை களுக்கே ஆக்கமும் விளம்பரமும் மிகுந்துவிட்டன.

### பிணி அறிதல்

பழைய தமிழ் மருத்துவர்கள் நோயாளரைச் சோதித் தறியும்போது நோய் வந்ததற்குக் காரணத்தை முதலில் காண்பார்கள். பலதரப்பட்ட மக்களுக்கு அவரவர் நிலத் தியல்பு, உணவு, கல்வி, அறிவு, செய்தொழில் ஆகியவற் றைக் கவனித்தும்,

''நாடியால் முன்னோர்சொன்ன நல்லொலி பரிசத்தாலும்
நீடிய விழியினாலும் நின்றநாக் குறிப்பினாலும்
வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்
கூடிய வியாதிதன்னைச் சுகமுடன் அறிந்துபாரே''

என்றபடி கைநாடி, குரலொலி, உடற்சூடறியத் தொடு தல், கண், நாக்கு, உடம்பின் நிறம் நீர், மலம், இந்த எட்டு விதச் சோதனையின்றி மருந்து கொடுக்கமாட்டார்கள்.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று திருவள்ளுவரும் இதையே கூறுகின்றார்.

சில நோயாளிகளுக்கும், பல மருந்துண்டு அலுத்தவர்கட்கும் இயற்கை மருத்துவம் செய்வார்கள்; பத்தியம் எனக் கூறி உணவை மாற்றுவார்கள். உள்ளப் பிணியாளர்களை, மன நோயாளர்களை, இருக்கும் இடத்தைவிட்டு 'தல யாத்திரை' போகச் சொல்லுவார்கள்.

## இரண வைத்தியம்-அறுவை மருத்துவம்

இக்காலத்தில் நடைபெறுவதைப் போல் அக்காலத்தில் இரண மருத்துவம் நடைபெற்றிருக்குமா எனச் சிலர் சந்தேகப்படுகின்றார்கள்.

"உடல்தனில் தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் மாற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்"

எனக் கம்பராமாயணத்தில் கம்பர் கூறுவதாலும்,

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்"

என ஆழ்வார் நாலாயிரப் பாடலில் கூறுவதாலும் சில நோய்களுக்கு உடம்பில் சில இடங்களில் சுட்டும், அறுக்க வேண்டிய இடங்களை அறுத்தும், பழையநாட்களில் மருத்துவம் செய்துள்ளார்கள் என்று தெரிகின்றது. ஆனால்இக்காலத்தைப்போல் இவ்வளவு அறுவை மருத்துவங்கள் அக்காலத்தில் இல்லை. இத்தகைய நோய்களும் அக்காலத்தில் இல்லை. இவ்வளவுபெரிய மருத்துவ மனைகளும் அக்காலத்தில் இல்லை. எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டினாலும் இப்போது நோயாளிகளுக்கு இடம் போதவில்லை என்

கிருர்கள். இதற்கு, நாள்தோறும் மக்களுக்கு நோய் அதிகப்படுவதே காரணமாகும். நோய்க்கு மருந்து தருவதைவிட, நோய் வராமல் தடுப்பதே அறிவுடைமை. நிலத்தியல்புக்குத் தக்க மருத்துவ முறைகளும் மருந்துகளும் சமயச் சார்பு கலந்த சுகாதார முறைகளும் இப்போது அழிந்துவிட்டன. மக்கள் தண்ணீர் குடிப்பதையேமறந்துவிட்டனர். நாவரண்டால் காபி, டீ, சோடா, கலர், இரஷ்தான் குடிக்கிருர்கள். 'சிகரெட்டு', பீடி, சிற்றுண்டிகள் அதிகப்பட்டுவிட்டன.

மேற்கே கதிரவன் மறையும் போது கதிரவனைப் பார்த்துப் பத்து நிமிஷமாவது மூச்சுப் பயிற்சி செய்து தொழ வேண்டிய நேரத்தில், உணவு உட்கொள்ளக் கூடாத நேரத்தில் சிற்றுண்டிக் கடைக்குச் சென்று கண்டதைத் தின்று, காப்பி குடித்துச் 'சிகரெட்டு' பீடியோடு வேடிக்கை விநோதங்களுக்குச் செல்லுகின்ற இக்கால மக்களுக்கு டி. பி. எனும் க்ஷய இருமலும் புற்று நோயும், வயிற்று நோயும் வராமல் விடுமா? இதைக் கல்லூரி மாணவர்கட்கு ஆசிரியர்கள் எடுத்துக் கூறுவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம் நமது தாய்மொழியின் வழியாக நீதி நூல்களையும், சமய நூல்களையும், நோயணுகா விதிகளையும் சிறிதும் கற்காமல் கைவிட்டதேயாம்.

சங்க இலக்கியங்களில் பதினெண் கீழ்க்கணக்கில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற நீதி நூல்களுக்கும் மருந்துப் பெயர்களை வைத்திருக்கின்ருர்கள். திருக்குறள் பொருட்பாலில் மருந்தென்னும் குறிப்புள்ளது. சங்கப் புலவர்களில் மருத்துவன் தாமோதரனர், மலையனுர் முதலியோர் தமிழ் மருத்துவர்களென்றே தெரிகிறது. தமிழரசனுக்கு மருத்துவரா யிருந்த

பரஞ்சோதியார் அரசனுக்கு அணுக்கராகவும், படைத் தலைவராகவுமிருந்து வடநாட்டு வாதாபி மன்னன் இரண்டாம் புலிகேசி தமிழரசனுக்குக் கப்பம் கட்டாதிருந்த காலத்தில் படையோடு சென்று அவனைப் பணியச்செய்து வெற்றிகண்டு வந்தார் எனச் சரித்திரமிருக்கிறது. அக்காலத்தில் கல்வி அறிவில் சிறந்த பெரியோர்கள் மருத்துவராயிருந்தார்கள். இக்காலத்தில் கல்வி அறிவில்லாதவர்களும் பரம்பரையாய்க் குருகுல முறைப்படி தமிழ் மருத்துவ நூல்களைக் கற்றுத் தக்க ஆசிரியனிடத்தில் பழகி அனுபவமில்லாதவர்களும் தமிழ் மருத்துவம் செய்கிறபடியால் அலட்சியப்படுத்தப்படுகிறார்கள். மேற்கூறிய குறைகள் தீர்ந்து மக்களுக்கு நோய் குறைந்து முற்காலம் போல் நோயின்றித் தேக பலத்தோடு நூறாண்டு நலமாய் வாழவேண்டுமாயின் செல்வர்களும் அரசினரும் தமிழ் மருத்துவக் கல்லூரி நடத்த வேண்டும். இக்காலத்தில் ஆங்கில மொழிக்கும் ஆங்கில அறுவை மருத்துவத்துக்கும் அதிக சலுகை காட்டப்படுகிறது. தமிழ்நாட்டில் சித்தர்கள் முறையாகிய தமிழ்ச் சித்த மருத்துவக்கல்லூரி ஒன்றாவது சரியாய் நடைபெறச் செய்ய வேண்டும். சித்த மருத்துவக் கல்லூரிக்கு முதல் சலுகை காட்டவேண்டும். மக்கள் நோய் குறைந்து நலமாய் வாழவேண்டும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மேலே கூறிய தமிழர்களின் ஆன்மஞான மருத்துவக் கலைகளைத் திரும்ப வளர்க்க வேண்டுமெனப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

# கல்வெட்டுக்கள்

ஆராய்ச்சிப் பேரறிஞர் T. V. சதாசிவப்பண்டாரத்தார்
அண்ணாமலைநகர்

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நம் தமிழகமானது பெரியனவும் சிறியனவும் ஆகிய திருக்கோயில்கள் பலவற்றைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவதை யாவரும் அறிவர். நம் நாட்டில் அத்துணைக் கோயில்கள் இருப்பதற்குக் காரணம், பண்டைத் தமிழ் வேந்தர்களும், குறுநில மன்னர்களும், அரசாங்கப் பணிபுரிந்த அரசியல் தலைவர்களும், சமயப் பற்றுடையவர்களாய்த் திகழ்ந்த தமிழ்நாட்டுச் செல்வர்களும், பிற அன்பர்களும் தமக்குத் தொடர்புடைய நகரங்களிலும் ஊர்களிலும் தம் வழிபடு கடவுளர்க்குத் திருக்கோயில்கள் அமைத்து விழா நிகழ்த்தத் தொடங்கியமையேயாகும். அக்கோயில்கள் எல்லாம் நம் முன்னோருடைய சமயப் பற்றையும் பெருமையையும் நம்மனோர்க்கு அறிவுறுத்தும் நினைவுச் சின்னங்களாகவும், வானளாவ உயர்ந்து காண்போர் கண்களைக் கவரும் பெருமிதமுடையனவாகவும் இக்காலத்தும் நின்று நிலவுதல் காணலாம். கோயில்களின் உள்ளே சென்று, கருப்ப இல்லில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, அக்கருப்ப இல்லைச் சூழ்ந்துள்ள பிரகாரத்தைச் சுற்றிவரும்போது கருங்கற்சுவர்களின்மேல் வரிசை வரிசையாக எழுத்துக்கள் வரையப்பட்டிருத்தலைப் பார்க்கலாம். அவ்வெழுத்துக்கள் சிற்றுளிகொண்டு கல் தச்சர்களால் பொறிக்கப்பட்டனவாகும். அவைகளே கல்வெட்டுக்கள் எனவும் சிலாசாசனங்கள் எனவும் கூறப்படுகின்

றன. அவற்றைப் பார்த்தவர்கள், எழுத்துக்கள் தமக்கு விளங்காமையால், அவைகளெல்லாம் தேவர்கள் தம் தெய்வமொழியில் முற்காலத்தில் வரைந்து வைத்தவையாதல் வேண்டும் என்று சொல்லிவந்தனர். அத்தகைய நிலையில் நாம் இருந்த காலத்தில் அக்கல்வெட்டுக்கள் நம் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் பெற்றவைகளே என்பதை நன்குணர்ந்து நமக்கு அறிவுறுத்தியவர்கள் மேல் நாட்டுப் பேரறிஞர்களேயாவர். அவர்களுள், ராபர்ட் சிவெல், டாக்டர் கீல்ஹார்ன், டாக்டர் பர்னல், டாக்டர் பூலர், டாக்டர் ஹூல்ட்ஷ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அவர்களுடைய ஊக்கமும் உழைப்பும் இல்லையேல் அவைகள் காலப்போக்கில் அழிந்து பயன்படாமல் போயிருக்கும் என்பது திண்ணம். இந்திய அரசாங்கத்தினரும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வெட்டிலாகாவும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவும் நிறுவி, தக்க அறிஞர்களைக்கொண்டு கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களைப் படி எடுப்பித்தும் புதைபொருள் ஆராய்ச்சி செய்வித்தும் அவற்றால் அறியக்கிடக்கும் பழைய வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடுமாறு செய்தனர். அவற்றின் பயனாக, பல நூற்றாண்டுகளாக நாம் அறிந்து கொள்ள முடியாத நிலையில் மறைந்து கிடந்த நம் தமிழக வரலாறு சிறிது சிறிதாக வெளிவரத் தொடங்கியது. அன்னியர் ஆட்சியினால் நம்நாட்டில் பல தீமைகள் ஏற்பட்டமை உண்மையேயெனினும் அதனால் சில நன்மைகளும் கிடைத்துள்ளமையை நாம் எளிதில் மறந்துவிடமுடியாது. அத்தகைய நன்மைகளுள் நமது பழைய வரலாற்றை நாம் அறிந்து கொள்ளுமாறு அரசாங்கத்தினர் கல்வெட்டிலாகா மூலம் செய்து வந்த அருஞ்செயல்கள் நம்மனோரால் பெரிதும் பாராட்டற்குரியனவாகும்.

இனி, கல்வெட்டுக்கள் நம்நாட்டில் முதலில்எங்ஙனம் தோன்றின என்பதை ஆராய்ந்து காண்போம். பகைவர்

முன்னின்று ஆற்றலோடு போர் புரிந்து உயிர்துறந்த வீரர்களை நினைவுகூர்தற் பொருட்டு அவர்கள் இறந்த இடங்களிலாதல் புதைக்கப் பெற்ற இடங்களிலாதல் அல்லது வேறு தொடர்புடைய இடங்களிலாதல் நடுகள் ஒன்றமைத்து விழா நடத்திப் பாராட்டுதல், முற்காலத்தில் தமிழ் மக்கள் கைக்கொண்டிருந்த ஒரு பழைய வழக்கமாகும். இவ்வுண்மையைப் பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலுள்ள,

> ''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
> றிருமூன்று வரையிற் கல்லொடு புணர''
>
> (வெட்சித்திணை-5)

என்னும் சூத்திரப் பகுதியினால் நன்குணரலாம். அந்நடுகல்லின் மேல் போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் வரையப்படும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்தது என்பது கடைச்சங்கப் புலவர்களின் பாடல்களால் புலப்படுகின்றது. அதனை,

> ''நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
> பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்
> பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'' (அகம்-67)

என்று அகநானூற்றுப் பாடலும்,

> ''அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
> தினிநட் டனரே கல்லும்'' (புறம்-264)

என்ற புறநானூற்றுப் பாடலும்,

> ''நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
> செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
> கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே''
>
> (வரிகள்-387-389)

என்ற மலைபடுகடாம் அடிகளும் தெள்ளிதின் உணர்த்துதல் காணலாம். அந்நூல்களை நுணுகி ஆராயுமிடத்துப்

பகைவர் முன்னின்று அஞ்சாமல் போர் புரிந்து புகழுடன் இறந்த வீரர்களின் நடுகற்களின் மேல் பொறிக்கப்பட்ட அவர்களுடைய 'பெயரும் பீடுமே' நம் நாட்டில் முதலில் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுக்கள் என்பது ஐயமின்றித் துணியப்படும்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலவிய பேரரசரும் சைவ சமய குரவராகிய சுந்தரமூர்த்திகளின் அரிய நண்பரும் ஆகிய சேரமான் பெருமாள் நாயனார் தாம் இயற்றியுள்ள திருவாரூர் மும்மணிக் கோவையில்,

"பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் முதூர் நத்தமும்"

(திருவாரூர் மும்மணி-16)

என்று கூறியிருத்தலால் கடைச் சங்க நாளிலிருந்த அவ்வழக்கம் அச்சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து வந்துள்ளது என்பது நன்கு புலனாகின்றது. அக்காலப் பகுதியில் நம் தமிழ்நாட்டில் சமண முனிவர்கள் தங்கி ஆங்காங்குச் சங்கங்கள் அமைத்துத் தம் சமயத்தை யாண்டும் பரப்பிவந்த செய்தி வரலாற்றறிஞர் பலரும் அறிந்த தொன்றாம். அம்முனிவர்கள் உண்ணா நோன்பியற்றி உயிர்நீத்த இடங்களில் அவர்கள்பால் அன்பு பூண்டொழுகிய அரசியல் தலைவர்களும் மாணவர்களும் அன்னோரின் பெயர்களையும் அருஞ் செயல்களையும் பொறித்து வைத்திருக்கின்றனர். அத்தகைய கல்வெட்டுக்களை மலைப் பாறைகளிலும் குன்றுகளிலும் குகைகளிலும் பார்க்கலாம். செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்றிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலையிலும் மதுரை மாவட்டத்திலுள்ள ஆனை மலையிலும் திருச்சிராப்பள்ளிக் குன்றிலும் அக்கல் வெட்டுக்கள் இக்காலத்தும் காணப்படுகின்றன. எனவே, நம் தமிழகத்தில் பண்டை நாகரிக அருஞ் செயல் புரிந்து இறந்துபட்ட

போர் வீரர்களின் பெயரையும் ஆற்றலையும் உணர்த்தும் முறையில் நடுகற்களின்மேல் முதலில் தோன்றிய தமிழ்க் கல்வெட்டுக்கள், பிறகு சமண முனிவர்களின் சமாதிகளிலும் கருங்கற் படுக்கைகளிலும் பொறிக்கப்பட்டு, அதன் பின்னர் அரசர்களும் பிறரும் எடுப்பித்த கருங் கற் கோயில்கள் பலவற்றிலும் வரையப் பெற்றன என்பது தெள்ளியது. இனி, கோயில்களில் கல்வெட்டுக்களைப் பொறிக்கத் தொடங்கியமைக்குக் காரணம் யாது என்பதை ஆராய்வோம்.

கி. பி. ஏழாம் நூற்றுண்டு முதல் ஒன்பதாம் நூற்றுண்டு முடிய நம் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த பல்லவ அரசர்கள் முதலில் கருங்கற் கோயில்கள் அமைத்தனர். அவர்களுக்குப் பிறகு அரசாண்ட சோழ மன்னர்கள் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர்களாயிருந்தமையால் தமிழகத்தில் யாண்டும் கருங்கற் கோயில்கள் எடுப்பித்துப் பெரும் புகழ் எய்திஞர்கள். அங்ஙனமே பாண்டி வேந்தர்களும் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் கருங்கற் கோயில்கள் பலவற்றை அமைத்தார்கள். பேரரசர்களின் செயலைப் பின்பற்றிக் குறுநில மன்னர்களும் அரசியல் தலைவர்களும் தமக்குத் தொடர்புடைய ஊர்களில் பல கோயில்கள் கட்டிஞர்கள். அக்கோயில்கள் எல்லாவற்றிலும் நாள் வழிபாடும் திங்கள் விழாக்களும் ஆண்டு விழாக்களும் சிறப்பாக நடைபெற்றுவரும் பொருட்டு அவற்றை எடுப்பித்த பெருவேந்தர்களும் சிற்றரசர்களும் பெரும் பொருளும் நிலங்களும் வழங்கினர். அவர்களைப்போல் சமயப் பற்றுடைய பிற அன்பர்களும் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துப் பல்வகைப்பட்ட அறங்கள் புரிய முன்வந்தனர். அவர்கள் எல்லோரும் தாம் கோயில்களுக்கு நிவந்தமாக அளித்தவற்றை விளக்கமாக அவ்வக் கோயில்களின் கருங்கற் சுவர்களில் வரைந்து வைப்பாராயினர். சில சமயங்களில் அவற்றின் படியொன்றைச் செப்பேடுகளில் பொறித்து உரிய கோயிலுக்குக்

கொடுப்பது உண்டு. அவர்கள் அவ்வாறு செய்துவந்தமைக்குக் காரணம் அவ்வறங்கள் இடையில் நின்றுபோகாமல் எக்காலத்திலும் நன்கு நடைபெற்று வருதல் வேண்டும் என்ற ஆர்வமேயாம். அன்றியும், அவை கோவில்களுக்குரிய தக்க ஆதாரமாக அமைந்து என்றும் பயன்படவேண்டும் என்பதுமாம். கோயில்களுக்கு விடப்பட்டுள்ள நிவந்தங்களைப் பலரும் உணர்ந்து அங்கு நடைபெறவேண்டிய நாள் வழிபாடு, திங்கள் விழா, ஆண்டு விழா முதலான எல்லாம் முறைப்படி தவறாமல் நிறைவேறிவருகின்றனவா என்று ஆராய்வதற்குப் பயன்படுமாறு பொதுமக்கள் எல்லோரும் பார்க்கக்கூடிய புறச் சுவர்களின் மேல் கல்வெட்டுக்கள் வரையப்பட்டுள்ளமை அறியத் தக்கதாகும். அக்காலத்தில் கோயில்களுக்குத் திருப்பணிபுரிய விரும்பும் அன்பர்கள் முதலில் அரசாங்கத்தினரிடம் உத்தரவுபெற்று, அக்கோயில்களிலுள்ள கல்வெட்டுக்கள் எல்லாவற்றையும் படி எடுத்துவைத்துக்கொண்டு திருப்பணி முடிவெய்திய பின்னர், அரசியல் அதிகாரிகள் பார்த்துக் குறிப்பிட்ட இடங்களில் அவற்றை மீண்டும் எழுதுவித்தல் வேண்டும். இது பண்டைத் தமிழ் வேந்தர்களது ஆணையாகும். இதனால், கல்வெட்டுக்கள் கோயில்களுக்கு எத்தனை இன்றியமையா ஆதாரங்களாக அரசர்களால் கருதப்பட்டு அந்நாளில் பாதுகாக்கப்பட்டுவந்தன என்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க.

இனி, கோயில்களில் நாள்தோறும் நிகழ்தற்குரிய வழிபாடுகளும், விழாக்காலங்களில் நடைபெற வேண்டிய சிறப்பு நிகழ்ச்சிகளும், பகலும், இரவும் இடையீடின்றி எரிக்கப்படும் நுந்தாவிளக்குகளும், வழிபாட்டு நேரங்களில் ஏற்றப்பெறும் சந்தி விளக்குகளும், அங்குப் பணிபுரியும் தேவகன்மிகளின் கடமைகளும், அங்குள்ள அணிகலன்கள், வெள்ளிக் கலங்கள் செப்புக் கலங்கள் முதலியவற்றின் பெயர்களும், அவற்றின் எடைகளும், கோயில், கோபுரம், மண்டபம், திருச்சுற்று மாளிகை, படிமம் முதலிய

வற்றின் பெயர்களும் அவற்றை அமைத்தோர் பெயர்களும் கல்வெட்டுக்களில் விளக்கமாகக் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம். இங்ஙனம் கோயில்களுக்குத் தொடர்புடைய செய்திகள் பலவற்றை யுணர்த்தும் கல்வெட்டுக்களே யல்லாமல் வேறு செய்திகளைக் கூறும் கல்வெட்டுக்களும் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அரசர்கள் ஊர்ச் சபைகளுக்கும் கோயில்களுக்கும் அனுப்பிய திருமுகங்களும், அரசாங்க அறிக்கைகளும், குறுநில மன்னர்கள் தமக்குள் செய்துகொண்ட உடன்படிக்கைகளும், அரசர்கள் பொதுமக்களுள் சில வகுப்பினர்க்கு வழங்கிய உரிமைப் பத்திரங்களும், கிராம சபைகள் அமைத்தற்குரிய விதிகளும், அதில் உறுப்பினராதற்குரியவர்களின் தகுதியும் அன்னோரின் கடமையும், அச்சபையார் செய்த சில குறிப்பிடத்தக்க முடிபுகளும், அரசர்கள், அரசியல் அதிகாரிகள் முதலானோரின் வீரச்செயல்களை யுணர்த்தும் பாடல்களும், அரசியல் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் மருத்துவர்கட்கும் கல்லூரிகட்கும், நூல்நிலையங்கட்கும் அரசர்களும் பிறரும் வழங்கிய இறையிலி நிலங்களும் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றால் பண்டைத் தமிழ் வேந்தர்களின் அரசியல் முறைகளும், கிராம ஆட்சியும், சமுதாய வாழ்க்கையும், சமய நிலையும், நாகரிகமும், கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலியனவும் அந்நாளில் எவ்வாறு இருந்தன என்பதை நன்கறியலாம்.

பொதுவாகக் கல்வெட்டுக்களை நோக்கின் முதலில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கல வாசகமும், பிறகு அக்கல்வெட்டுத் தோன்றிய காலக் குறிப்பும், பின்னர்க் கல்வெட்டுச் செய்திகளும், அதன் பின்னர் அதற்குத் தொடர்புடையவர்களின் கையெழுத்துக்களும், இறுதியில் 'இது பன்மாகேஸ்வர ரக்ஷை' 'இது ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை' 'இவ்வறங்காத்தார் திருவடி என் தலைமேலன' 'அறமறவற்க—அறமல்லது துணையில்லை' என்ற ஓம்படைக்கிளவிகளுள் ஒன்றாயினும் சிலவாயினும் காணப்படும். சில கல்

வெட்டுக்களில் ஓம்படைக் கிளவியோடு, அவ்வறத்தைச் சிதைத்தார் அச்செயலால் அடையும் பழிபாவங்களும் சேர்த்து வரையப்பட்டுள்ளன. அவை 'இது இறக்குவான் கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக் காதமும் செய்தார் செய்த பாவமும் எய்துவான்' 'இதற்குத் தீங்கு வேண்டுவான் வழி அறுக' 'இது விலக்குவான் கங்கையிடை குமரியிடை குராற் பசு கொன்ருன் செய்த பாவங் கொள்வான்' என்பனவும் பிறவுமாம்.

இனி, கல்வெட்டுக்களில் காணப்படும் காலக்குறிப்புக்கள் எல்லாம் அந்நாட்டு வேந்தனது ஆட்சியாண்டே யாகும். சில கல்வெட்டுக்களில் அரசனது ஆட்சியாண்டோடு சகாப்தமும் கலியப்தமும் கொல்லம் ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளன. அரசனது ஆட்சியாண்டிற்கு முன் அவனுடைய வீரச் செயலும் சிறப்புப் பெயரும் இயற்பெயரும் பொறிக்கப்படுவது பழைய வழக்கம். அதோடு நில்லாமல் மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரையும் முறை, முதல் இராசராச சோழனல் கி. பி. 993-ஆம் ஆண்டில் முதலில் தொடங்கப் பெற்றது. அவனைப் பின்பற்றி மற்ற அரசர்களும் மெய்க்கீர்த்தி அமைத்துக் கல்வெட்டுக்கள் வரையத் தொடங்கினர். அரசனுடைய ஆட்சியாண்டு ஏறஏற மெய்க்கீர்த்தியும் புதிய புதிய செய்திகளோடு வளர்ந்துகொண்டே போகும். அதன் துணைகொண்டு ஒவ்வொரு வேந்தனுடைய ஆட்சியிலும் எவ்வெவ்வாண்டில் எந்த எந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை ஆராய்ந்தறிந்து கொள்ளலாம். ஆகவே, மெய்க்கீர்த்திகளோடு அமைந்த கல்வெட்டுக்கள் எல்லாம் வரலாற்ருராய்ச்சிக்குச் சிறந்த ஆதாரங்களாயிருத்தல் உணரற்பாலதாகும்.

நம் நாட்டு வரலாற்ருராய்ச்சிக்கு இன்றியமையாதனவாகவுள்ள கல்வெட்டுக்கள் எல்லாம் படி எடுத்து அச்சிடப் பெற்று வெளிவரின், உண்மையான பல பல வரலாறுகளை நாம் அறிந்து மகிழலாம் என்பது திண்ணம்.

விவேகாநந்தா அச்சகம், மதுரை.